சீரணி

(கிராம நலம்)

கதிர் 15] மார்ச் 1970 [நெல் 6

கூட்டுறவு இதழ்

தமிழ்நாடு அரசின் ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத் திங்கள் வெளியீடு

வெளியிடுபவர் :
திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலாளர்

* * *

ஆண்டுச் சந்தா ரூ. 3-50

தனி இதழ் விலை

35 காசு


* * *

ஆசிரியர் :
திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

* * *

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

மக்கள் தொடர்பு அலுவலர் ஆசிரியர் (பொறுப்பு)
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறை
கோட்டை
சென்னை-9



எண்	பொருள்	பக்கம்
1.	கூடித் தொழில் செய்க	3
2.	தமிழ் நாட்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள்	5
3.	கூட்டுறவுத் துறையின் வெற்றி	9
4.	வாழ்க்கை என்பது...	13
5.	சோவியத் நாட்டில் விவசாயக் கூட்டுறவு இயக்கம்	19
6.	ஐயம் அகற்றுவோம்	23
7.	பத்தாண்டு வளர்ச்சி	24
8.	இங்கே எல்லாம் கிடைக்கும்	25
9.	பசுமைப் புரட்சி அமைச்சர்	27
10.	மின்னணுயியல்	35
11.	கூறுவதென்ன?	39
12.	ஒளிமயமான எதிர்காலம்	41
13.	சிறு குறிப்பும் சமயத்தில் உதவும்	45
14.	அறிஞர் வழி	46
15.	நாட்டுக்கு நாடு	48
16.	கூட்டுறவு	50
17.	பெரியார் டாக்டர் சந்திரசேகர் உரையாடல்	51
18.	கலீஞர் ஆட்சியிலே...	56
19.	மைய அரசு இதழ்களிலிருந்து	57
20.	ஊராட்சி அரசிதழ்	65
21.	சிறிய இடம் பெரிய செயல்	76
22.	கூட்டுறவுக் கடன் துறையில்	78
23.	பூக்கோசு பயிரிடுங்கள்	80
24.	வேளாண்மைப் பணிகளில் முன்னேற்றம்	81
25.	தரணி புகழ் சீரணி	82
26.	நீங்களும் ஒரு புதிய விதையை கண்டு பிடிக்கலாமே	85
27.	பார்த்தோம் - படித்தோம் - பட்டதைச் சொல்கிறோம்	87

கூடித் தொழில் செய்க

கூடித் தொழில்செய்தோர் கொள்ளோலா பம்பெற்றூர்
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!
நாடிய ஓர்தொழிலில் நாட்டார்பலர் சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்றே தோழர்களே!
சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றே தோழர்களே!
அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!
பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே!
நாடெங்கும் வாழ்குவதிற் கேடொன்று மில்லையெனும்
பாடம் அதைஉணர்ந்தாற் பயன்பெறலாம் தோழர்களே!
பீடுற்றூர் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம்
கூடித்தொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே!
வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!

— பாவேந்தர் பாரதிதாசன்





எவரெஸ்டப்பா— பாரு கிராமத்தின் வளமையான விவசாயி கூறுகிறார்:

"எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அளிக்கும் பாசனக் குழாய்கள் ஒவ்வொரு ஏகராவுக்கும் அதிக மகசூலைத் தருகின்றன."





- எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் பாசனக் குழாய்கள் வயல்களுக்கு நேரடியாகத் தண்ணீர் கொண்டு செல்லுகின்றன. எனவே, கரை உடைந்து அல்லது கசிந்து தண்ணீர் வீணாகுமே என்கிற கவலையில்லை.
- இந்த குழாய்களைப் பொருத்துவது சுலபம்: ரப்பர் வளையங்களை உபயோகித்து, சுலபமாக இணைத்து விடலாம். தண்ணீர் பாயும் திசையைத் திருப்ப, இக் குழாய்களை எளிதில் மாற்றி அமைக்கலாம்.
- நிரந்தரமானவை; துருப் பிடிக்காதவை; அரித்து சிதையாதவை; அழியாதவை
- ஒவ்வொரு மாவட்டத்திலும் எவரெஸ்ட் வியாபாரி இருக்கிறார். உங்கள் மாவட்டத்தில் கூடத்தான். இன்றே அவரை அணுகுங்கள்.
- எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ்-சிமெண்ட் தயாரிப்புகள் நிரந்தர வளமைக்கு ஆதாரம்.

மற்ற தயாரிப்புகள்: நெளிவான கூரைத் தகடுகள், ஆதாரமின்றியே நிற்கக்கூடிய வளைவான கூரைத் தகடுகள், தானிய சேமிப்புக் களஞ்சியங்கள், தண்ணீர்த் தொட்டிகள் ஸெப்டிக் டாங்கிகள் முதலானவை.

எவரெஸ்ட்

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்.
(டாடா ரியுவல் கர்ப்பின் அங்கத்தினர்கள்)

ப்ளாக்டி. சிவசாகர் எஸ்டேட், டாக்டர் அன்னி பெஸன்ட் ரோடு, ஒர்லி, பம்பாய்-18 WR • எவரெஸ்ட் ஹவுஸ், கார்டன் ரீச், ஹார்கோர்ட்டா ரோடு, கல்கத்தா-24 • 202, மவுண்ட் ரோடு, மதராஸ்-2 • மார்ட்டில ஹவுஸ், ஹனுமான ரோடு, புது டெல்லி-1 • எவரெஸ்ட் ஹவுஸ், 948, நேபியர் டவுன், ஜபல்பூர் • போதனூர் (கோயம்புத்தூர் ஜில்லா)

Focus/D/4b Tam.

தமிழ்நாட்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள்

1969-70 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் வேளாண்மைக் கடன், கூட்டுறவு விற்பனை, வேலை முறைக்குட்படுத்துதல், துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய துறைகளில் மேலும் ஓராண்டு முன்னேற்றம் அடைந்துள்ளது.

நிலங்களை வளப்படுத்தும் பொருட்டு நிலவள வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மன நிறைவு தரும் வகையில் அமைந்துள்ளது. உழவர் பெருமக்களுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன் வழங்குவது குறித்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றிய நிலவள வங்கிகள் அரசு தம்மிடத்தே வைத்த நம்பிக்கை முற்றிலும் நியாயமானதே என்று மெய்ப்பித்தன. நிலவள வங்கிகள் 1966-67-ல் ரூ. 3 கோடிவரை நீண்ட காலக் கடன்கள் வழங்கின. 1967-68-ல் இக்கடன் தொகை ரூ. 7 கோடியாகவும், 1968-69-ல் ரூ. 14 கோடியாகவும் அதிகரித்தது. 1970 மார்ச் 15-ம் நாள் வரையில் 1969-70-ல் ரூ. 12 5 கோடி அளவுக்கு நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடன் வழங்கியுள்ளது. இந்த வகையில் இந்த ஆண்டின் சாதனை 1968-69-ஆம் ஆண்டைக் காட்டிலும் அதிக அளவாக இருக்கும்.

உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைக் கடன் வசதிகள் எளிய வகையில் கிடைக்க வகைசெய்வது அரசின் கொள்கையாகும். இக்கொள்கையை யொட்டியும் நிலவள வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பிடத்தைக் கருத்தில் கொண்டும் இம் மாநிலத்தில் நடப்பு ஆண்டில் வட்டார நிலையில் 67 தொடக்க நிலவள வங்கிகள் புதிதாகத் தொடக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 வங்கிகளில், சம்பந்தப்பட்ட சமுதாய வளர்ச்சி வட்டாரத்தின் (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி அந்தந்த வங்கியின் மேலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அந்த வங்கிகள் திறம்படச் செயல்படுவதற்கும், விரைவில் தனித்து இயங்க, வழி ஏற்படுவதற்கும் வகை செய்வதே இதன் நோக்கமாகும். இந்த 60 புதிய வங்கிகளில் ஒவ்வொன்று குறித்தும் ரூ. 25,000 என்ற அதிக அளவு வரையில் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது அதற்கிணையாக தொகை வசூலிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படுகிறது. தொடக்க நிலவள வங்கிகள், மாநில நிலவள வங்கி, ஆகியவற்றில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக தேசிய வேளாண்மை கடன் வழங்கு (நீண்ட காலக் கடன்கள்) நிதியிலிருந்து கடன் உதவி பெறுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு கடிதம் எழுதியுள்ளது. மாநில அரசு, மேற்காணும் வங்கிகளிலும் கடன் வழங்கு சங்கங்களிலும் பங்கு மூலதன முதலீடு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய வேளாண்மை கடன் வசதி (நீண்ட காலக் கடன்கள்) நிதியிலிருந்து மேற்காணும் கடன்களை மாநில அரசுக்கு வழங்கியுள்ளது:

ரூ. 50 லட்சம் : மாநில நிலவள வங்கியில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக.

ரூ. 13·05 லட்சம்: 55 தொடக்க நிலவள வங்கிகளில் முதலீடு செய்வதற்காக.

ரூ. 16·055 லட்சம்: 226 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக.

நாட்டில், அண்மையில் ஏற்பட்டு வரும் ''பசுமைப் புரட்சி''யை ஒட்டி ஊற்று நீரைப் பயன்படுத்தும் திட்டத்தை, ஏராளமான பணித்திட்டங்களை வகுப்பதன் மூலம், கணிசமான அளவுக்கு விரைவுபடுத்த வேண்டும் என்று கருதப்படுகிறது. வேளாண்மை மறுநிதி உதவிக்கழகத்தின் உதவியுடன் தனிப்பகுதி வளர்ச்சித் திட்டங்களை வகுக்கப்பட்டுள்ளன. இக்கழகம் இதற்கான மாநில நில வள வங்கி வெளியீட்டுள்ள சிறப்புக் கடனீட்டு ஆவணங்களில் (சிறு பாசனத் திட்டங்களுக்காக வெளியிடப்பட்டவை) 90 சதவீதத்தை வாங்கியுள்ளது. இது குறித்து அரசு அடங்கல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இதில் சிறுபாசனத் திட்டப் பணிகளுக்காக ரூ. 59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பணித் திட்டங்கள் மூன்று ஆண்டு கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டும். பல்வேறு பகுதிகளின் வளர்ச்சிக்காக விரிவான திட்டங்கள் வகுக்கப்பட்டு தமிழ் நாட்டில் பசுமைப் புரட்சி வளங்கெழு முறையில் வளர்ச்சி அடைவதற்காக மும்முரமாக நிறைவேற்றப்படுகின்றன.

வேளாண்மை உற்பத்திக்காகக் கடன் வழங்குவது குறித்து ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்திலும் பாராட்டத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் 1967-68-ல் ரூ. 37·26 கோடி கடன் வழங்கியிருக்க 1968-69-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 44·12 கோடியாக அதிகரித்தது. அதாவது, வழங்கப்பட்ட கடன் தொகை 1967-68-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1968-69-ஆம் ஆண்டில் ரூ. 7 கோடி அதிகரித்தது. நடப்பாண்டில் 31-12-1969 முடிய வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் வழங்கியுள்ள கடன் தொகை ரூ. 35·37 கோடியாகும்.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நவீன அரிசி ஆலைகளை நிறுவியது கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் ஏற்பட்ட பெரும் புரட்சிகரமான திட்டமாகும். அரிசி அரைவைமூலம் மேலும் அதிக அளவு அரிசி கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். நவீன அரிசி ஆலைகளை நிறுவுவதற்காக 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மூலதன முதலீடு செய்வதற்காக ரூ. 115·73 லட்சம் வழங்கியுள்ளது. இதற்குத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து தாராளமாக நிதி உதவி கிடைக்கின்றது. 1970-71ஆம் ஆண்டில் மேற்கொண்டு 50 நவீன அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய்ச் செக்கு ஒன்றை நிறுவுவதற்காகத் திண்டுக்கல் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதன் நடைமுறை மூலதனத்தை அதிகரிப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பழங்களை டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும், பழங்கள், காய்கறிகள் உற்பத்தியாளர் விற்பனை வேலை முறைக்கு உட்படுத்தும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தனியாக அமைப்பதற்கும் வகை செய்யும் திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பிரிவு விரைவில் உற்பத்தி தொடங்கும்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து ஜப்பானுக்கு வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்வதைக் கவனிப்பதற்காக வாழைப்பழ ஏற்றுமதி, விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப் பட்டு வருகிறது. தூத்துக்குடிப் பகுதியில் வாழைப்பழ உற்பத்தி மூன்றாண்டுத் திட்டம் ஒன்று செயலில் இருந்து வருகிறது. ஏற்றுமதி செய்யப்படத்தக்க வாழைப்பழ வகை இந்த ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து ஏற்றுமதிக்காகக் கிடைக்கும்.

வீலேவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் பொதுமக்களுக்குப் பயன்படும் பொருள்கள் நியாய விலையில் கிடைக்கும் பொருட்டும் 50,000மும் அதற்கு மேற்பட்டுள்ள மக்கள் தொகை கொண்டுள்ள நகரங்களிலும், மாநக

ரங்களிலும் மொத்த வணிக, தொடக்க வணிகப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. தற்போது 30 மொத்த வாணிகப் பண்டக சாலைகள் உள்ளன. இவற்றுடன் 660 சில்லரை விற்பனைப் பண்டகசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் 1,667 தொடக்கப் பண்டகசாலைகளும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக் கூட்டுறவு மொத்த வாணிகப் பண்டகசாலைகள் 1969-70 ஆம் ஆண்டு முதல் ஒன்பது திங்களில் ரூ. 24·51 கோடி மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளது. தமிழ்நாட்டில் 1968-69இல் 8 இடங்களில் சிறப்பங்காடிகள் செயல்பட்டு வந்திருக்க, 1969-70ஆம் ஆண்டில் 10 இடங்களில் இத்தகைய சிறப்பங்காடிகள் செயல்பட்டு வந்தன. இத் துறைப் பண்டக சாலைகள் 1968-69 இல் விற்பனை செய்த பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 4·63 கோடியாக இருக்க, 1969-70இல் (31-12-1969 வரையில்) விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ 4·64 கோடியாக அதிகரித்தது. கூட்டுறவு மொத்த வாணிகப் பண்டக சாலைகள் சோப்பு தயாரித்தல், தொட்டி தயாரித்தல், சமையலுக்குதவும் மசாலாப்பொடிகள் தயாரித்தல், காஞ்சித உற்பத்தி செய்தல், எழுது பொருட்கள் உற்பத்தி செய்தல், பாலித்தீன் பைகள் தயாரித்தல் போன்ற பொதுமக்களுக்கு பயன்படும் பொருட்களைத் தயாரிக்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளினால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1969-70இல் இத்தகைய பல தொழில்கள் நிறுவப்படும்.

திரு கே. சந்தானம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 1968-69 ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது பணியை முடித்துக்கொண்டு 1969ஆம் ஆண்டு மே மாதத்தில் தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. இக்குழுவின் பரிவுரைகள் அரசின் ஆலோசனையில் உள்ளன.

கடன் வழங்கும் நிறுவனங்கள், தங்கள் கடனளிக்கும் திட்டத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக கடன் வழங்கு நிறுவனங்களின் பங்கு மூலதனத்திலும், தமிழ்நாடு கூட்டுறவு நிலவளவங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்தல், நிர்வாகப்பணியாளர்களின் செலவை ஈடுசெய்ய அவற்றுக்கு உதவித் தொகை அளித்தல், தமிழ்நாடு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களின்மீதும், பருவகால வேளாண்மைத் தொழில் முதலிய வற்றுக்காக இந்திய ரிசர்வ் வங்கி அளித்த கடன்மீது அசலும் வட்டியும் செலுத்தப்படுவதற்கு உத்தரவாதம் அளித்தல் ஆகிய முறைகளில் ஆண்டுதோறும் அரசு அவற்றுக்குப் போதிய உதவிகள் வழங்கி வருகிறது.

கடன் வழங்கும் நிறுவனங்களின் கடன் வாங்கும் சக்தியைப்பெருக்கும் பொருட்டு, அவற்றின் பங்கு மூலதனத்தில் கீழே குறிப்பிட்டுள்ளபடி மொத்தம் ரூ. 488 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது,

(ரூ. லட்சத்தில்)

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி	126
மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள்	195
தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள்	122
தமிழ்நாடு கூட்டுறவு நிலவளவங்கி	45

இந்தக் கடன் வழங்கு நிறுவனங்களில் செலுத்திய பங்குகளுக்கு ஈவுத் தொகையாக 1968-69இல் அரசுக்குக் கிடைத்துள்ள தொகை ரூ. 25·83 லட்சமாகும்.

உழவர்களில் வறிய பிரிவினருக்கு அதாவது வசதிகுறைந்த, வசதியற்ற உழவர்கள், நிலமற்ற குத்தகைக் காரர்கள் ஆகியோர்க்குப் போதுமான அளவு கடன் வழங்குவதற்காக கடனுதவி நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதன் பொருட்டு, தொடக்கக் கடனுதவிச் சங்கங்களும், கூட்டுறவு மத்திய வங்கிகளும் உண்டாக்கிய மீளாக் கடன் சிறப்புச் சேமநிதிக்கு அரசு நேரடியாக மானியம் வழங்கி வருகிறது. அதாவது, உழவர்

களில் மிகவும் வறிய நிலையிலுள்ள வர்களின் கடன் நிலுவைக்காக, தொடக்கச் சங்கங்களுக்கு 12 சதவீத மானியமும், கூட்டுறவு மத்திய வங்கி களுக்கு 4 சதவீத மானியமும் அரசு வழங்கி வந்துள்ளது. 1968-69இல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேமநிதிக்கு 1968-69 இல் ரூ. 5·35 லட்சம் வழங்கப் பட்டிருக்கையில் 1969-70ஆம் ஆண்டில் ரூ. 4·99 லட்சம் அரசால் வழங்கப்படும்.

உழவர்களின் தேவைகள் அனைத் தும் அளிக்கப்படும் வகையில் உண் மையான செப்பனிடும் தொழில் கூட்டுறவுகளாக இயங்கும்பொருட்டு கிராமக் கடன் உதவிச் சங்கங்கள் தனித்தியங்கும் வன்மை உடையன வாகத் திருத்தி அமைக்கப்பட்டன. அவை, உறுப்பினர்களுடைய கூடுதல் உற்பத்தி அனைத்தையும் சேமித்து வைக்கும் வசதிகள் உடையனவாக வும், அவற்றோடு உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கென பூச்சிக்கொல்லி மருந்துகளையும், இரசாயன உரங்களை யும் சேமித்து வைக்கும் வசதிகள் உடையனவாகவும் இருக்க வேண்டும் அச்சங்கங்களின் அன்றாட வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஓர் அலுவலக அறை தேவைப்படும்; மற்றும் தெளிப்பான்கள் முதலியன போன்ற வேளாண்மைக் கருவிகளை வைப்ப தற்கு ஒரு பணிக் கொட்டகையும் தேவைப்படும். ஆகவே, அச்சங்கங் கள் ஒவ்வொன்றுக்கும், கிடங்கு அலுவலகஅறை, பணிக்கொட்டகை ஆகியவைகளை ஒன்றாக அமைத்துக் கொள்ளும் பொருட்டு ரூ. 25,000 அளவுக்கு (50 சதவீதம் மானிய உதவி 50 சதவீதம் கடன்) அரசு கடனுகவும் மானியமாகவும், நிதி உதவி அளிக்கிறது. 1969-70இல் அத்தகைய பத்துக் கட்டிடங்கள் அமைப்பதற்கு நிதி உதவி அளிக்கப் பட்டிருக்கிறது.

கிராமங்கள் நிலையில், குடியானவர் களுக்குத் தேவைப்படும் குறுகியகால மற்றும் மத்தியதரக்காலக் கடன்கள், 6,845 தொடக்க வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்களால் அளிக் கப்படுகின்றன. தொடக்க வேளாண் மைக் கடன் உதவிச் சங்கங்கள் மாவட்ட கடன் உதவிச் சங்கங்கள் மாவட்ட அளவில் 15 கூட்டுறவு மத்திய வங்கிகளுடன் இணைக்கப்பட் டுள்ளன. அந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டு றவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள் ளன. ஆண்டுக்கு ஆண்டு பெருமள வில், வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான கடன் தேவைகளை இந்தக் கடன் உதவி கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவேற்றி வருகின்றன என்றும், அதன் மூலம் இம்மாநிலத் தில் அதில் அளவு உணவு உற்பத்திக் குப் பெரிதும் பணியாற்றி வருகிறது என்றும் கடந்த சில ஆண்டுளாக, இந்த நிறுவனங்கள் வழங்கிவந்துள்ள உற்பத்திக் கடன்கள் எடுத்துக்காட்டு கின்றன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்கடைசி ஆண்டில் குறைந்த அளவு ரூ. 80 கோடி ஆகிலும், கூட்டு றவுச் சங்கங்கள் கடன் வழங்கு வதற்கு இயலுமாறு ஆண்டுக்கு ஆண்டு கடன் வழங்கும் தொகையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் வேளாண்மை உற் பத்திக்குமு மதிப்பட்டுள்ள மொத்த கடன் வேளாண்மை உதவித் தொகையாகிய ரூ. 160 கோடியில் மேற்சொன்ன தொகை (ரூ. 80 கோடி) 50 சதவீதமாகும்.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் அளிக்கப்பட்ட குறிப்பேட்டி லிருந்து திரட்டப்பட்ட தாகும்.]

———

கூட்டுறவுத் துறையின் வெற்றி

மடல் தரும் தகவல்

கூட்டுறவுத் துறையின் வெற்றி

நெஞ்சிற்கினிய நண்ப,

திங்கள்தோறும் கடிதம் தொடரும் என்று எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்ததாக எழுதியுள்ளாய். உன்னை இனிமேல் ஏமாற்றமடையச் செய்யாமலிருக்க முயற்சிக்கின்றேன் என்ற உறுதி மொழியுடன் தொடங்குகின்றேன்.

ஊரில் கைத்தறிக் கூட்டுறவுப் பொருட்காட்சியில் பொறுப்பேற்றுக் கொண்டிருந்ததைப் பற்றியும் உன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாய்!

"கூடைமுறம் கட்டுநரும்
கூடித் தொழில் செய்யின்
தேடிவரும் லாபம்
நிறப்புவரும் தோழர்களே!

என்ருர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

கூட்டுறவு முயற்சிகள் ஒவ்வொரு தொழிலிலும் நம் நாட்டில் ஏற்பட வேண்டும் என்று நல்லவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள். ஆனுல், கூட்டுறவு இயக்கத்தில் ஏற்படும் ஒரு சில குறைகளை வைத்துக்கொண்டு 'கூட்டுறவு இயக்கம்' என்பதே தீதானது என்று மேம்போக்காக முடிவு கட்டுபவர்களைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தாய்.

நண்ப, கூட்டுறவுத் துறையின் ஒரு சிலரின் ஆர்க்கம் மிகுந்து காணப்படுவதால் சில குறைபாடுகள் உருவாக வழிப் பிறக்கின்றன என்பது உண்மைதான். இதனல் கூட்டுறவு இயக்கத்தையே தீது என்பவர்களை இந்த நூற்ருண்டில் வாழத் தக்கவர்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவு வங்கி ஒன்றின் திறப்பு விழாவில் பேரறிஞர் அண்ணு அவர்கள் கூட்டுறவுத் துறையின் வெற்றியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னர்கள். அது வருமாறு:

"ஒரு சிலரின் பிடியில் கூட்டுறவுத் துறை சிக்கி விடக்கூடாது! ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் சட்டதிட்டம் இருக்கவேண்டும். கட்டிடத்தைத் தாங்கிடத் தூண்கள் தேவை. அந்தத் தூண்களும் போது மான அளவு பருமனுடன் இருந்தால் தான் கட்டிடத்திற்கும் பலன்; பார்ப் பதற்கும் அழகாக இருக்கும். அவ் விதம் இல்லாமல் தூண்கள் வேண்டு மென்பதற்காக அளவைக் கணிக் காது தூண்களை நிறுத்தினுல் கட்டி டத்தின் அழகு போய்விடும்; இடமும் இருக்காது. இப்போதுள்ள சட்ட திட்டம் பழங்காலத்தில் ஏற்படுத்தி யது. இந்தக் காலத்தின் தேவைக் கேற்ப அவற்றை மாற்றவேண்டும். 18 ஆவது நூற்ருண்டிலிருந்த 'கோச்' வண்டிக்கு கிண்டிரேஸ் குதிரை பூட்டினுல் வண்டிக்குச் சேதமா, குதிரைக்குச் சேதமா? - என்ற நிலை தான் ஏற்படும். ஆகவே, இக் காலத்தின் தேவைக்கேற்ப கூட்டுறவுத் துறையின் சட்ட திட்டங்கள் மாற்றப் படவேண்டும். அதில்தான் கூட்டுறவுத் துறையின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது."

அறிஞர் அண்ணு அவர்கள் குறிப் பிட்டது போன்று கூட்டுறவு இயக்கத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க நம் அரசு எடுத்துவரும் முயற்சிகளை அறிவாய். அதன் வழியாகக் கூட்டுறவுத் துறையின், வெற்றி மேலும் பெருகும் என்பதையும் உணர்வாய் என்று நம்புகிறேன்.

உன் மடலில் கைத்தறித் தொழில் கூட்டுறவு முறையினுல் மேம்பட்டு வருவதை எழுதியிருந்ததால் ஒரு சில முக்கியத் தகவல்களை உனக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நண்ப, தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான மாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்குச் சுமார் 5·50 லட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கை

யில் 26 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாகும்). ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத்தொழிலில் நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ள இத்தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

இத்தொழிலின் மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப் பொருள்கள் நிதி விற்பனை வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர்களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும்பாலும் அளிக்கப்படுகிறது.

இத்தொழிலின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆண்டுத் திட்டங்களின் கீழ் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு விவரம் இதோ:

	செலவு (ரூ. லட்சத்தில்)
1967-68 ஆம் ஆண்டுத் திட்டம்	118·00
1968-69 ஆம் ஆண்டுத் திட்டம்	130·69
1969-70 ஆம் ஆண்டுத் திட்டம் (மதிப்பிடப்பட்டது) ...	161·19
1970-71 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டமிடப் பட்டது)	202·30

கைத்தறித் தொழிலின் மேம்பாட்டிற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 10·00 கோடி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ் நாட்டில் 31-3-1969 அன்றைய நிலவரப்படி 1,001 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 2·11 லட்சம் தறிகள் இருந்தன. இவை, இம் மாநிலத்தில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 38·5 சதவீதம் என்று கணக்கிடப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் தறி ஒன்றுக்கு ரூ. 75 என்ற பேரளவுக்கு உட்பட்டு பங்கு மதிப்பில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் தங்களுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்கவும் அதே உயர்வரம்புக்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியையும் உற்பத்தி முறைகளையும் மேம்படுத்த வேண்டும் என்பதையும் கூட்டுறவுத் தொழில் அக்கறையுள்ள அனைவரும் கூறுவதைக் கேட்டிருப்பாய். இது உண்மைகூட: அப்பொழுதான் கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்து ஆலைகளின் போட்டிக்கு ஈடுசெய்ய முடியும்.

சீரான கைத்தறிகள் நெசவுக் கருவிகள் இவற்றின் விலையில் 75 சதவீதம் உதவியளிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 25 சதவீதம் கடனாக வழங்கப்படுகிறது.

ஆண்டுக்காண்டு கைத்தறித் தொழிலில் ஏற்படும் வளர்ச்சியைக் கீழே குறிப்பிட்டுள்ளேன்:

கூட்டுறவுத் துறையில் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும், விற்பனையும்

ஆண்டு	உற்பத்தி (பத்து லட்சம் கெஜத்தில்)	விற்பனை (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)
1966-67 ...	80·00	10·56
1967-68 ...	83·94	10·74
1968-69 ...	77·72	11·01
1969-70 (எதிர்பார்க்கப்படுவது)	85·00	12·75
1970-71 (திட்டமிடப்பட்டது)	100·00	15·00

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் தனது விற்பனைப் பிரிவுகளின் மூலம் விற்ற கைத்தறித் துணிகளின் மதிப்பு வருமாறு :

		(ரூபாய் கோடியில்.)
1.	1966-67 இல் விற்பனை	4·10
2.	1967-68 இல் விற்பனை	4·14
3.	1968-69 இல் விற்பனை	4·20
4.	1969-70 இல் விற்பனை (எதிர்பார்க்கப்படுவது) ...	4·50
5.	1970-71 இல் விற்பனை (திட்டமிடப்பட்டது) ...	5·00

நண்ப, இன்னும் பல தகவல்களை உனக்கு நான் எழுதுவதல் கடிதம் நீளும் எனினும் கைத்தறி தள்ளுபடித் தொகைக்கு அரசு வழங்கும் உதவித் தொகையைப்பற்றி மட்டும் இறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

கைத்தறித் துணி வாங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது விற்பனைகளுக்குத் தள்ளுபடி அனுமதிக்கும் வகையில் சில்லறை விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 காசும், மொத்த விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசும் உதவித் தொகையை அரசு அளித்து வந்துள்ளது. அனைத்திந்தியக் கைத்தறி வாரம் போன்ற விழாக்களின் போதும், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போதும் 15 நாள் கால அளவுக்குப் பருத்தி கைத்தறித் துணிகள், கலப்பு கைத்தறித் துணிகள் சில்லறை விற்பனையின் மேல் ரூபாய் ஒன்றுக்கு 10 காசு வீதம் கூடுதல் தள்ளுபடி வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் தேங்கிவிட்ட இருப்புகளை விற்பனை செய்வதற்காக (பருத்தி, பட்டு, செயற்கைப் பட்டு அல்லது வேறு ஏதேனும் செயற்கை நூலைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட) எல்லாவகையான கைத்தறித் துணிகளுக்கும் 10 காசு வீதம் உயரிய தள்ளுபடி அளிக்க அரசு ஒப்புதல் வழங்கியது. இந்த உதவித் தொகை முந்திய ஆண்டில் 59 நாட்களுக்கு வழங்கப்பட்டிருக்க, 1968-69 ஆம் ஆண்டில் மொத்தம் 89 நாட்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அனைத்திந்தியக் கைத்தறி வாரியம், பருத்தித் துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதான தள்ளுபடித் தொகை உதவியை ஓர் ஆண்டில் 15 நாட்களுக்குத்தான் வழங்கலாம் என்று அனுமதித்துள்ளது. நடப்பு ஆண்டில் அரசு இச் சலுகையை 1970 ஜனவரி இறுதிவரையில் மொத்தம் 66 நாட்களுக்கு நீட்டித்துள்ளது.


1967-68 ஆம் ஆண்டில் அரசு வழங்கிய தள்ளுபடி உதவித்தொகை 64 இலட்சம் ரூபாயாகும். 1970-71 ஆம் ஆண்டில் வழங்க விருக்கும் உதவித்தொகை ரூ. 90 லட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நம் அரசு கைத்தறித் தொழிலுக்கு காட்டிவரும் ஆக்கத்திற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா?

பிறபின்

அன்புடன்




விளைச்சலுக்கு
யூரியா
NEYVELI UREA
NITROGEN CONTENT 46%
GROSS WT. 50 KG.
இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்போரேஷன்
தயாரிப்பு

வாழ்க்கை என்பது...

[அரும்பு]

பேச்சுக்குப் பேச்சு யாருடைய பொன்மொழிகளையாவது எடுத்துச் சொல்வது பொன்னியின் வழக்கம்... நானும் கண்மணியும் எத்தனை தடவை கேலி செய்திருக்கிறோம்.

''பொன்னி உன் பெயரை பொன்மொழி என்று வைத்துக்கொள்ளேன்...'பொன்னி' என்பதைவிட 'பொன்மொழி' என்பதுதான் பொருத்தமாக இருக்கும்'' என்று.

அந்த நினைவுகள் எல்லாம் என் நெஞ்சில் இன்னும் பசுமையாக இருக்கின்றன. ஆனால், பொன்னி மறந்துவிட்டாளே! அந்தக் காலத்தில் அவள் எவ்வளவு உணர்ச்சி பாவத்தோடு அந்தப் பொன்மொழிகளை சொல்லுவாள்...யாரோ ஆண்ட்ரே மார்வாவோ என்னவோ அவர் சொல்லியிருப்பதைச் சொல்லுவாள்.

''நாமும் மற்றவர்களும் அடிக்கடி மறந்துவிடும் சின்னஞ்சிறு விஷயங்களுக்கு கூட மனதில் பெரிதும் இடம் கொடுத்துவிடுகிறோம். சிறு கோபங்கள், மனவேற்றுமைகளுக்கும் நம் நேரத்தை வீணுக்குகிறோம். நாம் இழந்துவிடும் ஒவ்வொரு நிமிடமும் நம்மிடம் திரும்பிவரப் போவதில்லை. நேரம் பொன் போன்றது. இங்கே அற்பத்தனத்துக்கு நேரமில்லை ஏனெனில் வாழ்க்கை சுருக்கமானது...''

இப்படி எவ்வளவோ சொல்லியிருக்கிறாள். அப்படிச் சொன்னவள் 'அவைகளை வாழ்க்கையில் கடைபிடிக்கவில்லையே!' பொன்னியே சொல்லுவாள்:

''நம்மால் கடைபிடிக்க முடியாததை மற்றவர்களாகிலும் கடைபிடிக்கட்டுமே என்ற ஆசையில் சொல்வது அறிவுரை'' என்று. இது அவள் விஷயத்தில் எவ்வளவு பொருத்தம்.

பள்ளியிலே படிக்கும்பொழுது எப்பொழுதும் இணைபிரியாதவர்களாக நாங்கள் இருப்போம்...''அல்லி, பொன்னி, கண்மணி போல எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று மற்றவர்கள் எங்கள் காதுபடச் சொல்லும் எங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்.

இது எல்லாம் பழைய சரித்திரம்.

உலகம் ஓரிடத்தில் நிலையாகவா நிற்கிறது. தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சுழன்று அல்லவா வருகிறது. எங்கள் வாழ்க்கையும் எப்படி எப்படியோ மாறிவிட்டது.

நான் தென்ஞப்பிரிக்காவிலுள்ள ஜோஹான்ஸ்பர்க்குச் சென்றுவிட்டேன் எங்கள் குடும்பத்தாருடன்...! அங்கேயே எனக்குத் திருமணமும் நடந்துவிட்டது. எனக்கு முன்னால் தமிழ்நாட்டில் பொன்னிக்குத் திருமணம் முடிந்துவிட்டது. அவள் மணவிழா அழைப்பு திருமணம் முடிந்த பிறகு வந்து சேர்ந்தது. அதன் பிறகு பொன்னிக்கும் எனக்கும் எந்தவித கடிதத் தொடர்பும் கிடையாது. பின்னால் நான்போட்ட இரண்டு கடிதங்களும் எனக்கே திரும்பி வந்துவிட்டன.

கண்மணியிடமிருந்து வெகு நாட்களுக்குப் பிறகு கடிதம் வந்தது. அவள் கூட பொன்னியின் திருமணத்திற்குப் போகவில்லையாம். அதை சாதாரணமாக எழுதி இருந்தாள். நான்தான் கடல் கடந்து தொலைவில் வாழ்கின்றேன். என்னால் தான் செல்லமுடியாது. எங்கேயோ உலகின் ஒரு மூலையில் இருந்திருந்தால் தான் கண்மணிக்கும் 'நட்பு' பாசம் போன்ற உணர்வுகளின் மகிமையை புரிந்துகொண்டிருக்க முடியும்...!

நம் தாய்மொழி புரியாத இடத்தில்...நாம் பிறந்தது முதல் பார்த்து பழகியவர்கள்—பழக்க வழக்கங்கள் அரிதாக காட்சியளிக்கின்ற இடங்களில் இருக்கும்பொழுதுதான் அதன் பெருமையை அறியமுடியும்.



பொன்னி சொல்லுவாள் ''நமக்கு நெருக்கமாக இருக்கும்பொழுதும் அதன் அருமையும் அவ்வளவாக புரியாது, அவை நம்மைவிட்டு விலகிச் செல்ல செல்லத்தான் அவைகளின் அருமை புரியும்'' என்று.

அதன் உண்மையை அனுபவத்தில் உணர்ந்தவள் நான்.

அந்தப் பழைய கதையை எல்லாம் ஏன் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும்...?புதியவை களைப்பற்றி சொல்லுகிறேன்.

ஓராண்டுக்கு முன்பு தென் ஆப்பிரிக்கா முழுவதையும் சுற்றி பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நானும் என் கணவரும் சுற்றுப் பயணம் செய்தோம். அப்பொழுது தான் கேப்டவுனில் அந்தத் தமிழ்க் குடும்பத்தினரைச் சந்தித்தோம். அந்த வீட்டிலும் ஒரு பெண்ணின் பெயர் பொன்னி.

அவள் தோழியின் கணவர் தொழிற்சாலையில ஏற்பட்ட விபத்தில் முடமாகிவிட்டார். அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏறறுக்கொண்டிருக்

கிறுள். அதனால் தனக்குத் திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டாள். இந்தப் பொன்னியின் போக்கு விசித்திரமாக சிலருக்குத் தென்படலாம். ஆனால் மரியாதைக்குரியது அவள் தியாகம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்தக் குடும்பத்தினரிடமிருந்து தான் என் பொன்னியைப் பற்றியும் அறிய முடிந்தது. அவளும் சென்னையில்தான் இருக்கிறாளாம்.

நாங்கள் சுற்றுப்பயணம் முடிந்து திரும்பிய பிறகு, திருமணமாகி சென்னையிலிருக்கும் கண்மணிக்கு எழுதியிருந்தேன்: ''அங்கேதான் போன்வி இருக்கிறாளாம் அவளை நீ பார்த்தாயா? உன்னை வந்து பார்த்தாளா?'' என்று.

கண்மணி சாதாரணமாக எழுதியிருந்தாள். நான் சென்று பார்க்கவில்லை. அவள் திருமணத்திற்கு நான் செல்லவில்லை. என் திருமணத்திற்கும் அவள் வரவில்லை...அந்தக் கோபத்தினால் என்னை வந்து பார்க்காமலிருப்பாள் என்று. என்னால் நம்ப முடியவில்லை.

சின்னஞ் சிறு விஷயங்களில் கூடவா பொன்னி பிடிவாதமாக இருப்பாள். வாழ்க்கையில் அற்பத்தனத்துக்கு நேரமில்லை வாழ்க்கை என்பது சுருக்கமானது என்று சொல்லிக்கொண்டிருந்தவளா அப்படி நடந்துகொண்டிருப்பாள்?

''கருங்கல் உடைஞ்சு போனதான் ஒழுங்கா ஒட்டமுடியாது...தங்கக் கட்டி உடைஞ்சா ஒண்ணுக்கிடலாம் தெரியுமா?'' என்று பொன்னி எத்தனை தடவை சொல்லியிருப்பாள். அவளா இப்படி மாறிவிட்டான்... எனக்குப் புரியவில்லை! ஒரு முறை பொன்னியின் முகவரியை தெளிவாத் தெரிந்து எழுது என்று கண்மணிக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

பொன்னியின் முகவரியை தெரிந்து கொள்ள முடியவில்லை என்று கண்மணி எழுதியிருந்தாள்.

அப்படி எழுதிய கண்மணி, தன் திருமண அழைப்பிதழை அவளுக்கு அனுப்பியிருக்கவா போகிறாள். அதனால்தான் பொன்னி அவளுடைய திருமணத்திற்குப் போயிருக்கமாட்டாள் என்று நினைத்து என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

அதே சமயம் எனக்கு வேறு நினைவும் வரத் தொடங்கியது. ஜோஹான்ஸ்பர்க் வந்த பிறகு என் முகவரி மாறவில்லை. இருந்தும் பொன்னி என்னுடன் கடிதத் தொடர்பை ஏன் அறுத்துக்கொள்ள வேண்டும்?

பொன்னியிலே படித்தபொழுது உயிருக்குயிராகப் பழகியவள். அவளை கண்மணி எப்படியோ மறந்து விட்டாள். ஆனால், என்னால் முடியவில்லை...

தாய் நாட்டிலிருந்து தொலை தூரத்தில் வாழ்ந்ததாலோ என்னவோ எனக்கு மட்டும் அவளை மறக்க முடியவில்லை!

என்னுடைய நெடுநாளை ஆசை நிறைவேறும் வாய்ப்புத் தானாகவே கிடைத்தது. அலுவலக வேலையாக என் கணவர் இந்தியாவுக்குச் செல்லும் அந்த வாய்ப்பை நானும் பயன்படுத்திக் கொண்டேன். அவருடன் நானும் தாய்நாட்டைப் பார்க்க வந்தேன். எப்படியாவது பொன்னியையும் கண்மணியையும் பார்த்து விடவேண்டும் என்ற என் ஆசை நிறைவேறப் போகிற மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தேன்.

அவரும் நானும் சென்னை திரும்பினோம். ஆர்வத்தோடு முதலில் கண்மணியைப் போய் பார்த்தேன்.

அங்கே பெருஞ் செல்வந்தர்கள் வீடுகளில் காணக்கூடிய வசதிகள் எல்லாம் கண்மணி வீட்டில் இருந்தன. மன நிறைவோடு வாழ்க்கை நடத்தும் கண்மணியைக் கண்டு எனக்குப் பெருமைதான். இளமைப் பருவத்துச் செய்திகளை இத்தனை வருடங்கள் கழித்து இருவரும் பேசி தீர்த்தோம். அடிக்கடி எங்கள் பேச்சில் பொன்னி வந்து குறுக்கிட்டாள். அவளுடைய பொன்மொழிகளும் வந்து குறுக்கிட்டன.

அந்த நீண்ட சோபாவில் அமர்ந்து கொண்டு கண்மணியுடன் பேச பேச எனக்குப் பொன்னியைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் பெருகிக்

கொண்டே இருந்தது. ஆனால், கண்மணி என்னிடம் பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் ஆர்வத்தோடு பேசிக் கொண்டிருந்தாலும் என்னிடம் உள்ள துடிப்பு இல்லியே! ஒரு வேளை அவளும் என்னைப்போல வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டிருந்தால் இருக்குமோ? உலகில் எல்லா மனிதர்களும் ஒரு மாதிரியாகவா இருக்கிறார்கள்..?

கடைசியாக வெளிப்படையாகவே நான் கேட்டேன். ''ஏன் கண்மணி சென்னையில் இருக்கும் நீ பொன்னியைப் போய் பார்த்திருக்கக் கூடாது?''

''எனக்கு அவள் முகவரி தெரியாதே அல்லி...அதுசரி பொன்னி வந்து என்னைப் பார்த்திருக்கக் கூடாதா?''

''அவளுக்கு மட்டும் உன் முகவரி எப்படி தெரியும்?''

''எப்படி தெரியுமா? பொழுது விடிந்தால் ஒவ்வொரு செய்தித் தாளிலும், பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அவருடைய படம் வருகிறது! சமூக நல ஊழியரான அவருடன் நான் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் படங்கள் வேறு வருகின்றன. அதை வைத்துக் கொண்டு எத்தனைப் பேர் என் முகவரியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் தெரியுமா? விருப்பமிருந்திருந்தால் பொன்னி என் முகவரியை கண்டுபிடித்து வந்திருக்க முடியுமே!''

நான் பதில் பேசவில்லை. நட்பில் நான் உயர்ந்தவளா? நீ உயர்ந்தவளா? நான் பிடிவாதக் காரியா நீ பிடிவாதக் காரியா? என்று கணக்குப் பார்த்துகொண்டிருப்பவர்களின் வாழ்க்கையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதனால், ''பொன்னியை நான் பார்க்க ஏதாவது முயற்சிசெய்து முகவரியைக் கண்டு பிடித்துத்தா'' என்று கண்மணியிடம் கேட்கவில்லை.

அன்று மாலை கடற்கரையில் நானும் என் கணவரும் எதிர்பாராத விதமாக கிராமத்தில் எங்கள் குடும்பத்தின் நண்பராக இருந்த பெரியவர் ஒருவரை சந்தித்தோம். அவர் விருப்பப்படி அன்று இரவுச் சாப்பாட்டுக்கு அவர் வீட்டுக்குச் சென்றோம்.

அங்கேதான்—

நீங்கள் சினிமாவில் பார்த்திருப்பீர்களே எதிர்பாராத திடீர்திருப்பம் அப்பொழுது எல்லாம் உங்களைப் போல நானும் இதெல்லாம் இப்படி வாழ்க்கையில் நடக்குமா என்று நினைத்திருக்கிறேன். ஆனால், அந்தத் திடீர் திருப்பம் இப்பொழுது நடந்து விட்டது.

பெரியவர், வீட்டின் பின்புறத்தில் குடியிருந்தாள் பொன்னி அவள் தாயுடன். பொன்னியின் குரல் கேட்டு முதன் முதலில் அங்கே ஓடினேன்.

என் குரலைக்கண்டு என்னைப் புரிந்து கொண்டவள், என் உருவத்தைப் பார்த்து புரிந்து கொள்ளமுடியாமல் இருந்தாள், நான் அலறிவிட்டேன்.

ஆமாம் பொன்னியின் கண்கள் ஒளியிழந்து இருந்தன.

அந்தத் திடீர் திருப்பம் இப்போது திடீரென என் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டது போல் இருந்தது.

பொன்னி இப்பொழுது குருடி!

பொன்னி அவள் தாயை எவ்வளவு தடுத்தும் அந்தப் பழைய கதையை அவள் அம்மா சொன்னார்கள்.

பொன்னியின் கணவரும் பொன்னியும் ஒருமுறை வெளியூர் சென்ற பொழுது ஏற்பட்ட கார் விபத்தில் இவள் கண்கள் இரண்டும் போய்விட்டதாம் கண்ணிழந்தவளோடு வாழ விரும்பாத அவர் கொஞ்சம் எதோ பணத்தை கொடுத்துவிட்டு பொன்னியை ஒதுக்கி விட்டு விட்டாராம்! அவருக்கு வேறு திருமணமாகிவிட்டதாம்.

சே... இப்படியும் மனிதர்களா?

''ஏன் பொன்னி இந்த விவரங்களை எல்லாம் நீ எனக்கு எழுதக் கூடாதா உன்னைப்பற்றி எவ்வளவு தப்பா நினைச்சுக் கிட்டுயிருந்தேன் தெரியுமா? காலேயில் கண்மணிகூட உன்னைத்தப்பாகச் சொன்னாள்.

பொன்னி உரக்கச் சிரித்தாள்.

''என் துன்பங்களைச் சொல்லி உங்கள் நேரத்தையும் பாழ்படுத்த வேண்டுமா? நான் மகிழ்ச்சியோடு இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று தான் யாரிடமும் என் நிலையைச் சொல்வ தில்லை. 'காணப்படும் உலகம் வேறு அறியப்படும் உலகம் வேறு' அல் லவா?''

இந்தச் சமயத்தில்கூட பொன் மொழிகளோடு அவள் பேசினாள்.

நீண்டநேரம் பேசிக் கொண்டிருந் தோம். கண்மணியிடம் அவளது ஆடம்பரச் சூழ்நிலையில் பேசிக் கொண்டிருந்ததைவிட பொன்னி யின் சிறிய வீட்டில் உரையாடிக் கொண்டிருந்தது எவ்வளவு மன நிறைவை அளித்தது.

மறுநாள் வருவதாகக்கூறி நானும் என் கணவரும் விடைபெறும் பொழு துதான் பொன்னியின் மணக்கோலத் திலிருந்த படத்தை அவள் அம்மா காட்டினார்கள்.

அந்தப் படத்தைப் பார்த்தவுடன் ஒவென்று அலறவேண்டும் என்று தோன்றியது.

அந்தப் படத்தில் இருந்தது கண் மணியின் கணவர். பொன்னியை திரு மணம் செய்தகொண்டவரும் அவரே தான். அவளே விலக்கிவிட்டு கண் மணியை மணந்து கொண்டிருக்கிறார். அவருடைய 'செல்வத்தின் வலு' அவர் யார் என்பதை கண்மணிக்கு காட்டவில்லை.

கண்மணி மணந்திருப்பது தனக்கு மாலையிட்டவரைத்தான் என்பதும் பொன்னிக்குத் தெரியாது. அவர் களுடைய பேச்சும் இதைத்தான் காட்டியது.

நானும் சொல்ல விரும்பவில்லை.

அங்கே, ஆப்பிரிக்காவில் ஒரு பொன்னிதன் தோழிக்காக வாழ்வை தியாகம் செய்து கொண்டிருக்கிறாள். இங்கே ஒரு பொன்னியின் வாழ்வை அவள் தோழியே பறித்துக் கொண் டிருக்கிறாள்.

வாழ்க்கை என்பது...

இப்படி நம்பமுடியாத - தடுக்க முடியாத நிகழ்ச்சிகள் என்று ஒதுக் கித் தள்ளுவது எல்லாம் ஒன்று திரண்டு வருவதா?

பணவசதியால் எதையும் மறைக்க லாம் இதயமில்லாமல் வாழலாம் என்பதைக் காட்டுவதா?

பட்டகாலிலேயே படும் என்பதை நிருபிப்பதா?

அற்ப விஷயங்களுக்காக நாம் நேரத்தை வீணாக்கவேண்டாம் ஏனெ னில் வாழ்க்கை என்பது சுருக்கமா னது.

ஆனால், அந்த வாழ்க்கையும் மேலும் மனிதர்களால் சுருக்கப் படும் பொழுது என்ன செய்வது?

எனக்குப் புரியவில்லை! உங்களுக் குப் புரிகிறதா?

ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையுடன்
'சீரணி' இதழ் இணைக்கப்பட்டுள்ளது

இதுநாள் வரை கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பு அலுவலர் பிரிவும், 'சீரணி' இதழ் பிரிவும் பிரபவரித் திங்கள்முதல் தலைமைச் செயலக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையுடன் (R.D. & L.A.) இணைக்கப்பட் டுள்ளது.

இனித் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

மக்கள் தொடர்பு அலுவலர்
ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை
தலைமைச் செயலகம்
கோட்டை
சென்னை-9

ஆசிரியர்
சீரணி இதழ்
கோட்டை
சென்னை-9

சான்றிதழ் பெற்ற விதைகள்
1970, ஜனவரிமுதல் விநியோகத்துக்குக் கிடைக்கும்.
— மற்றும் —
வீரிய சோளம் C. S. H - 1
வீரிய கம்பு HB-1, HB-3, HB-4
வீரிய மக்காச் சோளம் டெக்கான்,
கங்கா 5, ஹை-ஸ்டார்ச்
நெல் - I. R. 8 (68), I. R. 5, ADT - 27
காய்கறி விதைகள்
* * *
தங்கள் தேவைக்கு:

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்
பேரூர் போஸ்ட் :: கோயமுத்தூர்-10
தந்தி: 'கோல்டுஸீட்' போன்: 30442

அல்லது
(தமிழ்நாடு விநியோகஸ்தர்கள்)

டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்.,
உர இலாகா
கோயமுத்தூர் - 18

CHINTHAMANI
THE COOPERATIVE SUPPER MARKET

▲ Successful Cooperative Super Market in India working with 15 Departments

President: Sri G. R. GOVINDARAJULU


Number of Members: 12,015.

Share Capital: Rs. 1,16,730

	SALES	NET PROFIT
1966-67	Rs. 25,26,675	——
1967-68	Rs. 76,97,514	Rs. 84,734
1968-69	Rs 1,74,75,152	Rs. 3,56,732
1969-70 (6 months)	Rs. 1,44,89,672	Rs. 4,06,148

RESERVES: Rs. 58973

G. V. RAMASWAMY, B.A.,
Secretary.



ரஷ்யா ஒரு விவசாய நாடாகவே இருந்தபோதிலும், புரட்சிக்கு முந்திய ரஷ்யாவில் விவசாயம் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வந்தது. சாகுபடி செய்யப்பட்ட 36 7 கோடி ஹெக்டர் நிலங்களில் 23·2 கோடி ஹெக்டர் நிலங்கள் பெரும் நிலப்பிரபுக்களுக்கும் மடாலயங்களுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் சொந்தமாக இருந்தன. 13·5 கோடி ஹெக்டர்கள் மட்டுமே வறுமையில் வாடிய 1·7 கோடி விவசாயிகள் வசம் இருந்தன.

விவசாயிகளில் பெரும்பாலோர் தமது வயல்களை உழுவதற்குப் புராதனமான விவசாயக் கருவிகளையே பயன்படுத்தி வந்தனர். மரக்கலப்பைகளும், பரம்படிக் கட்டைகளும் குதிரைகள் இழுத்துச் செல்லும் ஏர்களும்தான் அந்தக் கருவிகள். இவர்களிலும் 30 சதவித விவசாயிக் குடும்பங்களில் குதிரைகளே இல்லை; 34 சதவித்தினரிடம் எந்த விதமான பண்ணைக் கருவிகளுமேஇருக்கவில்லை.

எனவே, ரஷ்ய விவசாயிகளிடையே பஞ்சமும் நோய்களும் வறுமையும் பரவலாக இருந்து வந்ததில் வியப்புக்கே இடமில்லை.

புரட்சிக்குப் பின்னர்

1917ஆம் ஆண்டின் அக்டோபர் சமதர்மப் புரட்சி ரஷ்யாவில் நிலவி வந்த பழைய விவசாய முறையைப் போக்கியது. நிலத்தை நாட்டுடமையாக்கியதோடு, விவசாயிகளைச் சுரண்டி வாழ்ந்து வந்த நிலப்பிரபுக்கள் வர்க்கத்தையும் ஒழித்துக் கட்டியது. இதன்மூலம் நிலம் சந்தைச் சரக்காகக் கைமாறும் போக்கில் இருந்து மீட்கப்பட்டது. அதே சமயத்தில் சகல இயற்கைச் செல்வாதாரங்களோடும் நிலம் சமதர்ம அரசின் உடைமையாயிற்று.

நிலத்தை விற்பதையும் குத்தகைக்கு விடுவதையும் தடை செய்த தன் மூலமும், அதனை உழைக்கும் மக்களின் உடைமையாக்கியதன் மூலமும் விவசாயத் துறையில் முதலாளித்துவ வளர்ச்சிக்கிருந்துவந்த முதன்மையான வாய்ப்பு போக்கப்பட்டது. நிலத்தை நாட்டுடமையாக்கியதன் மூலம் தனியார் வேளாண்மையிலிருந்து கூட்டுப் பண்ணை முறைக்கு மாறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்தன.

நிலம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொழுது மிகமிக ஏழைப் பட்ட விவசாயிகள் மிகவும் நல்ல இடத்தில் அமைந்த வளமிக்க நிலங்களைப் பெற்றனர். மேலும் நிலவாடகையினின்றும் சட்டம் விவசாயிகளுக்கு விதிவிலக்களித்தது. மற்றும் வங்கிகளில் அவர்கள் வாங்கியிருந்த ஏராளமான கடன்களும் ரத்துச் செய்யப்பட்டன. 1914ஆம் ஆண்டின் ஜனவரி முதல் தேதிக் கணக்குப்படி வங்கிகளுக்கு விவசாயிகள் பட்டிருந்த கடன்களின் தொகை 132·6 கோடி ரூபிள்களுக்கும் அதிகமாகும்.

நிரமங்களுக்கிடையே

முதல் உலகப் போரினாலும் (1914—18), உள்நாட்டுப் போரினாலும் சோவியத் ஒன்றியத்தின்மீது 14 நாடுகள் படையெடுத்தாலும் புரட்சிக்குப்பின்னர் தொடக்க ஆண்டுகளில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

1921 இல் விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி போருக்கு முன்பிருந்த அளவில் 55 சதவீதமே இருந்தது. கால்நடைகளின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைந்தது. சாகுபடி நிலஅளவும் 32 சதவீதம் குறைந்தது. கிராமப்புறங்களில் நிலவிய மிகப்பெரும் சீர்குலைவினால்,

நகரங்களிலும் தொழிற்சாலைகளிலும் உணவுக்கும் மூலப் பொருள்களுக்கும் இருந்துவந்த தேவையை நிறை வேற்ற முடியவில்லை.

1918 வசந்த காலத்தில் மாஸ்கோவிலும் பெத்ரோகிராடிலும் மக்களுக்கு அன்றாடம் 50 கிராம் ரொட்டியே உணவுப் பங்கீடாகக் கிட்டி வந்தது. கிராமப் புறங்களில் இருந்த கோதுமை, மற்றும் பிற பொருள்களின் கையிருப்பும் மிகக் குறைவாக இருந்தது. 1928இல் தான் விவசாயப் பொருள்களின் உற்பத்தி யுத்த முற்கால அளவை எட்டிப்பிடித்தது.

நாட்டுப் பொருளாதாரத்தின் புனரமைப்பு இந்தக் காலத்துக்குள் பெரிதும் நிறைவு செய்யப்பட்டு விட்டாலும், சமதர்ம நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த நாட்டின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிலையில் விவசாயத்துறை முன்னேறியிருக்கவில்லை. ஒரு பக்கத்தில் பெருமளவில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சமதர்மத் தொழில்துறை, மறுபக்கத்தில் மாணுங்காணியாய் ஒற்றுமையற்று நிதறிக் கிடந்த சிறு விவசாயத் தொழில்கள் ஆகிய இரு வேறுபட்ட அடிப்படைகளின்மீது நாட்டின்புதிய அரசியல், பொருளாதார வளர்ச்சி இவியும் சார்ந்திருக்க முடியாது என்பது தெளிவாயிற்று.

கூட்டுறவுத் திட்டம்

எனவே பெரும் சமதர்ம விவசாயத் தொழில் நிறுவனங்களை உருவாக்கும் பிரச்சினை கண்கண்ட அவசியமாயிற்று. இந்தப் பிரச்சினைக்கு கூட்டுறவுக் கழகங்களில் விவசாயிகளை ஒன்றுபடுத்துவதற்கு லெனின் வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படி தீர்வு காணப்பட்டது.

விவசாயிகள் தமது சக்திகளைத் தாமே ஒன்றுபடுத்தும் அவசியத்தை அவர்களுக்கு முதலில் புரிய வைக்க வேண்டும், வலிமை மிக்க எந்திரங்களைப் பயன்படுத்தும் பெருவாரியான வேளாண்மைத் தொழிலே மிகமிக லாபகரமானது என்பதை விவசாயிகள் நடைமுறையில் கண்டுணர வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் லெனின். சமதர்ம திசை வழியில் கிராமப்புறங்களைப் புனரமைப்பதற்குக் காலம் பிடிக்கும், எனவே எளிமையான கூட்டுடைமை முறைகளைத் தொடர்ந்துதான், பின்னர் எல்லோருக்கும் அநுகூலமான முறைகள் தோன்றும் என்றும் அவர் கருதினார்.

முதலாளித்துவ அமைப்பில் பண்ணைகளின் அளவில் ஏற்படும் எந்த ஓர் அதிகரிப்பும் பெருவிவசாயிகள் சிறு விவசாயிகளை ஒதுக்கித் தள்ளும் நிலைமையைத்தான் உருவாக்கும். சமதர்ம அமைப்பில் அவ்வாறு எதுவும் நிகழ்வதில்லை; கூட்டுறவு வேளாண்மை முறைகொண்டு வரப்பட்டபோது, கூலியாட்களின் உதவியின்றித் தமது நிலங்களில் தாமே சாகுபடி செய்துவந்த விவசாயிகளைத் தான் சோவியத் அரசும், கட்சியும் ஊக்குவித்தன. அவர்களுக்குப் பொருளாதார உதவியும் வழங்கின.

உபயோகிப்போர் கூட்டுறவுக் கழகங்கள்

சமதர்ம நிர்மாணப் பணியில் விவசாயிகளை ஈர்ப்பதற்கு உதவிய மிகமிக எளிமையான கூட்டுடைமை முறை உபயோகிப்போர் கூட்டுறவுக் கழகங்களே. இதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் மத்தியதர ஏழை விவசாயிகளாகவே இருந்தனர்.

இத்தகைய கழகங்கள் செய்தவை என்ன? பொருள்களை விற்பதைத் தவிர, உபரியாக உற்பத்தியாகும் விவசாயப் பொருள்களையும் கை விவைப் பொருள்களையும் இவை விலைக்கு வாங்கின; உணவை உற்பத்தி செய்யும், பதனம் செய்விக்கும் நிறுவனங்களையும் இவை ஒழுங்கமைத்தன.

கூட்டுறவுக் கழகங்கள் தமது சொந்தக் காய்கறித் தோட்டங்கள், பால் பண்ணைகள் முதலியவற்றைப் பெற்றிருந்தன. அவை தொழில் துறைக்கும் விவசாயத்துறைக்கும் இடையே ஓர் இணைப்பாகச் செயல்பட்டன. விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ததன்மூலம் உபயோகிப்போர் கூட்டுறவுக் கழகம் விவசாயத் துறையில் சோஷலிச மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான நிலைமைகளை உருவாக்கியது ரஷ்ய சமஷ்டிக் குடியரசிலிருந்த இக்கூட்டுறவுக் கழகங்களில் 1926இல் ஏழை விவசாயிகள் 44 சதவீதமும், மத்திய தர

விவசாயிகள் 49 சதவீதத்துக்குச் சற்றுக் கூடுதலாகவும் இருந்தனர். வசதி படைத்த விவசாயிகள் ஏறக் குறைய 7 சதவீதமே இருந்தனர். உக்ரைனிலோ இவர்களின் தொகை 5 சதவீதமே இருந்தது.

கடன் வழங்கும் கூட்டுறவுக் கழகம்

கடன் வழங்கும் கூட்டுறவுக் கழகமும் கிராமப்புறத்தில் பரவலாக இடம் பெற்றது. விவசாயிகளிடையே மூலதனப் புழக்கம் பற்றாக்குறையாக இருந்ததைச் சரிக்கட்ட உதவும் விதத்தில், சோவியத் அரசாங்கம் குறைந்த வட்டி விகிதம் கொண்ட விவசாயக் கடன் வசதியை உருவாக்கி விவசாயிகளுக்கு உதவும், நல்ல தரமான பொருள்களை உற்பத்தி செய்வதிலும், லேவாதேவிக் காரர்கள், பணக்காரர்கள் ஆகியோரின் பிடியிலிருந்து விடுபட்டு, அந்தப் பொருள்களை உயர்ந்த விலைக்கு விற்பதிலும் அவர்களுக்கு உதவும் தீர்மானித்தது. இத்தகைய உதவிகளைச் சோவியத் அரசு கடன் வழங்கும் கூட்டுறவுக் கழகத்தின் மூலம் வழங்கியதோடு, உதவிகளை மேன் மேலும் அதிகரித்தது. உதாரணமாக 1923இல் கடன்முறை விவசாயத்துக்கு 81 லட்சம் ரூபிள்களே ஒதுக்கப்பட்டன; இரண்டே ஆண்டுகளில் இத்தொகை 23·77 கோடியை எட்டிவிட்டது. அதேபோல் இக்கழகங்களின் உறுப்பினர் தொகையும் அதிகரித்தது. 1924இல் 15 இலட்சத்துக்குச் சற்று அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட 8,307 கூட்டுறவுக் கழகங்கள் இருந்தன. இரண்டே ஆண்டுகளில் உறுப்பினர் தொகை 45 லட்சத்தையும் மிஞ்சி விட்டது. கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கையும் 11,450ஐ எட்டிப் பிடித்தது.

மேலும் ஏழைகளுக்கான ஒரு பிரத்தியேக உதவி நிதியையும் அரசு உருவாக்கியது. இந்த நிதி தேவைப்பட்ட போதெல்லாம் அதிகரிக்கப்பட்டது. நெடுங்காலத் தவணைக் கடன்கள் ஏழைக் குடும்பங்களை நிமிர்ந்து நிற்கச் செய்ய உதவின. புரட்சிக்கு முந்திய ரஷ்யாவிலோ போதுமான செல்வ வளம் படைத்தவர்களுக்கே மிகப்பெரும் கடன் தொகைகள் வழங்கப்பட்டன. இந்தப் புதிய கடன் வழங்கும் கூட்டுறவுக் கழகங்களோ கிராமப்புறங்களில் முதலாளித்துவ வளர்ச்சியைத் தவிர்த்து விடும் ஒரு தெள்ளத் தெளிவான சமுதாயத் தன்மையையே கொண்டிருந்தன.

கூட்டுப் பண்ணையின் உதயம்

1921 முதற்கொண்டு நிலத்தில் கூட்டாக உழைப்பதற்கான பல் வேறு கழகங்களும் பங்குதார் அமைப்புக்களும் உருவாகி வந்தன. இவை விவசாய உற்பத்தியோடும், விவசாயிகள் உற்பத்தி செய்த செல்வங்களின் வினியோகத்தோடும் நேர் முகமாகச் சம்பந்தப்பட்ட விவசாயக் கூட்டுறவின் புதிய வடிவங்களாக இருந்தன.

கவனியுங்கள்

சப்ளைக் கூட்டுறவுக்கழகங்களும் விற்பனைக் கூட்டுறவுக் கழகங்களும் விவசாயிகளைத் தனிப்பட்ட வியாபாரிகள், வியாபாரச் சூதாடிகள் ஆகியோரின் சுரண்டலிலிருந்து விடுவித்தன. அதே சமயம் கடன் வழங்கும் கூட்டுறவுக் கழகங்கள் தனியார் லேவாதேவி முறைக்கு முடிவு கட்டியது. நிலத்தில் கூட்டாக உழைக்கும் பங்குதார் அமைப்புக்கள், உற்பத்தியாளர் கூட்டுறவை அதாவது கூட்டுப்பண்ணையை — உருவாக்க வழி வகுத்தன. கூட்டுப்பண்ணைகள் தமது சொந்த நலன்களைப் பொது நலன்களோடுமிகவும் அநுகூலமாக இணைப்பதை விவசாயிகள் கண்கூடாகக் கண்டனர்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற உண்மையை சோவியத்விவசாயிகள் இத்தகைய கூட்டுறவு முறைகளின் மூலம் வாழ்வில் கண்கூடாகக் கண்டு, மிகப் பெரும் முன்னேற்றத்தையும் வெற்றிகளையும் பெற்றனர்.

நூல் நிலையப் புத்தகங்களுக்கும்
மகளிர் மன்றப் புத்தகங்களுக்கும்
ஸ்டார் பிரசுரத்தை அணுகவும்

ஸ்டார் பிரசுரம்,

எண்: 66, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி :: சென்னை-5

உயர்தர
போட்டோ என்லார்ஜ்மெண்ட் வேலைகளுக்கும்
பிலிப்ஸ் ரேடியோ, உஷா தையல் மிஷின்,
மின்சார விசிறிகள் வாங்கவும் சிறந்த ஸ்தாபனம்

கே. வி. ஸ்டுடியோ,

பரமக்குடி & இராமநாதபுரம்

'சீரணி' ஏப்ரல் இதழ்
புத்தாண்டு இதழாக மலரும்

கவனியுங்கள்

'சீரணி' இதழுக்குச் சந்தா அனுப்புகிறவர்கள் தங்கள் பெயருடன் முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

குறிப்பாக, கிராமப் பகுதிகளிலிருந்து சந்தா அனுப்புகிறவர்கள் ஊர், அஞ்சல் நிலையம், வட்டம், மாவட்டம் முதலியவைகளைத் தெளிவாக எழுதவும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

ஜயம் அகற்றுவோம்!

ஆர். மகாதேவன்
(ஒலிபரப்பு அலுவலர், குடும்பநலத் துறை)

தேசிய குடும்ப நலத்திட்டத்தின் அவசியம் பற்றிப் படித்தவர் பலர் இன்று கேட்கும் மற்றொரு கேள்வி இதுதான் :

இந்தியா முழுவதும் அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டிலும் ஐ. ஆர். 8, ஏடிடி 27 முதலான மிகு விளைச்சல்தரும் புது நெல் வகைகளாலும் அறிவியல் முறைச் சாகுபடியினாலும் பசுமைப் புரட்சி ஏற்பட்டு, உணவு உற்பத்தி மிகப்பெருகி விட்ட இந்த நாளில் மக்கள் தொகை பெருக்கத்தை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?

இக் கேள்வியில் பொருள் இருக்கிறது. குடும்ப நலத்திட்டம்பற்றிய அறியாமையும் பொதிந்திருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஈடாக அந்த வளர்ச்சி விகிதத்தில் உணவு உற்பத்தியும் தொடர்ந்து பெருகிவரும் எனக் கருதுபவர், அனுபவத்திலிருந்து படிப்பினைப் பெறுகிறவர்கள். இவர்கள் ஒரு 100 ஆண்டுகளுக்குமுன் வளம் கொழிக்கும் வீண் நிலங்களாக இருந்து, இன்று மண்மேடுகளாகக் காட்சி அளிக்கும் தென் அமெரிக்க நாட்டு நிலங்களைப்பற்றித் தெரிந்துகொண்டால் இப்படிப் பேசமாட்டார்கள். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தவேண்டும் என்று கூறுபவர்கள் ''உணவு போதாது'' என்ற ஒரே காரணத்துக்காக அவ்வாறு கூறவில்லை. அமெரிக்காவிலும், சோவியத் யூனியனிலும் உணவுப் பற்றாக்குறை இல்லை என்ற போதிலும், மக்கள் குடும்ப நலத்திட்ட முறைகளைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது ஏன்? மக்கள் தொகையின் அளவுக்கு அதிகமான பெருக்கம் நாட்டிலே உணவுத்துறையைமட்டும் பாதிப்பதொன்றன்று. உறையுள், வேலைவாய்ப்பு, உலோக உற்பத்தி (அதன்வழி தொழில் வளர்ச்சி), தனிநபர் வருமானம், போக்குவரத்து என, பலப்பலத் துறைகளிலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது.

குடும்ப நலத் திட்டம் தேசிய திட்டம்; நாட்டுக்காக நாம் செய்யவேண்டிய தியாகம் என்று எவரும் எண்ணி விடக்கூடாது. குடும்ப நலத்திட்ட முறைகளைக் கடைப்பிடிப்பதால் தாய்நலம் சிறப்பதும் சேய்நலம் பாதுகாக்கப்படுவதும் நினைவிலிருந்து நீங்கிவிடக் கூடாது. இது மிகமிக முக்கியமான நன்மை. குடும்ப நலத்திட்ட முறைகளைக் கடைப்பிடித்து மூன்று முதல் ஐந்தாண்டுக்கால இடை வெளியில் மக்களைப் பெற்று இரண்டு அல்லது மூன்றுக்குப் பிறகு அறுவை சிகிச்சையை மேற்கொண்டு மேலும் குடும்பம் பெருகாமல் பார்த்துக் கொள்பவரின் குடும்பம் எவ்வளவு ஆரோக்கியமாகக் காணப்படுகிறது என்பதைக் கண்டவர்தான் உணர முடியும். மருத்துவஉளவியல் முறைப்படி ''குடும்ப மகிழ்ச்சியே'' நீண்ட ஆயுளுக்கு அடிப்படை.

எனவே, இன்றைய பசுமைப்புரட்சியைக் கண்டு இனியும் ஏன் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் எனக் கேட்போர் தேசிய குடும்ப நலத் திட்டத்தின் அடிப்படையையே அறியாதவர் எனலாம். அவர்களுக்கு நாம் மேற் கூறிய உண்மைகளை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

புதுத்தாண்டு வளர்ச்சி

கடந்த பத்தாண்டுகளில் நாடு அடைந்துள்ள வளர்ச்சியை கீழ்க்காணும் சில தகவல்கள் தெளிவாக விளக்குகின்றன :

உணவு தானியங்கள்	மிலியன் டன்கள்	
	1960	1969
அரிசி	34·57	39·96
சோளம்	9·81	9·80
கம்பு	3·28	3·80
மக்காச் சோளம்	4·08	5·70
ராகி	1·84	1·65
சிறு தானியங்கள்	1·91	1·80
கோதுமை	11·00	18·65
பார்லி	2·82	2·42
துவரை	2·07	1·82
இதர பருப்பு வகை	4·39	4·19

பாசன வசதி

பெரிய, நடுநிலைப் பணிகள்	6·5 மிலியன் ஏக்கர்கள்	46·0 மிலியன் ஏக்கர்கள்
அஞ்சல் நிலையங்கள்	70,714	1,02,843
தந்தி நிலையங்கள்	11,109	14,594
மருத்துவ மனைகள், மருந்தகங்கள்	12,000	14,600
ஆதார சுகாதார நிலையங்கள்	2,800	4,900
	இலட்சம்	இலட்சம்
பள்ளி செல்லும் மாணவர்கள்	810·98	478·26
பள்ளி செல்லும் மாணவிகள்	137·00	249·88

இங்கே எல்லாம் கிடைக்கும்

''நீரா ருங் கடவுளுத்த நிலமடந் தைக் கெழிலொழுகும்...'' என்று தொடங்கும் மனோன்மணீயம் பாடலே அரசாங்க விழாக்களிலும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விழாக்களிலும் இறைவணக்கமாகப் பாடவேண்டும் என்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்திருப்பதை ஏற்க மனமில்லாசிலர் இறைவணக்கமாகத் தமிழ் தெய்வத்தைப் போற்றுவது சரியல்ல என்கிறார்களாம்.

குமரகுருபர சுவாமிகள் போன்ற ஆத்திகப் பெருமக்களுக்கு இணையான வர்கள் அல்லர் அச்சிலர் எவினும் அவர்கள் ஐயத்துக்கு விளக்கம் இதோ:

கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக் கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், திருச்செந்தில் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை முதலிய நூல்களை எழுதிய குமரகுருபர சுவாமிகள், தமிழினிடத்தே தெய்வத்தன்மையைக்கண்டு தம் பாடல்களிலே எடுத்துரைக்கிறார்.

தமிழைத் தெய்வத் தமிழ் என்று பாராட்டுகிறார். தாம் பாராட்டும் தெய்வங்களே யெல்லாம் தமிழ்த் தொடர்பும் தமிழின் பால்வேட்கையுமுடையவர்களாகக் கூறுகிறார். முத்தமிழுக்குச் சிவபெருமானே சங்கத் தமிழ்ப் புலவர்'' என்றும், ''தோழாத முத்தமிழ் நாவா'' என்றும், ''தெளி தமிழின் வடித்திடு நவரசமே'' என்றும் பாராட்டுகிறார். திருமாலைப் பைந்தமிழ்ப்பின் சென்ற பசங் கொண்டவென்கிறார். கடவுள் மகளே ''மதுரமொழுகுங் கொழி தமிழ்ப் பனுவற்றுறைப்படியும் மடநடைக் கூந்தலம்பிடி'' என உருவகம் செய்கிறார். சிவபெருமான் சுந்தரேசராகவும் அம்மை தடாதகைப் பிராட்டியாராகவும் முருகக் கடவுள் உக்கிர குமாரராகவும் அவதரித்ததற்குக் காரணம் அம் மூவருக்கும் தமிழினிடத்திலுள்ள வேட்கையே என்றும் கூறுகிறார்.

தமிழை இறைவனுக்கு இணை என்று சொல்லுவதை எதிர்ப்பவர்கள் குமர குருபர சுவாமிகள் நூல்களைப் படித்தால் தெளிவு பிறக்கும்!

● ● ● ●

''ஒரு காலத்தில் 'தரம்' என்று கருதப்பட்டது மற்றொரு காலத்தில் மறுக்கப்படலாம். 'தரம்' என்பதே காலத்துக்குக் காலம் மாறுவதாகும். இப்போதைய கல்விக்கும் முன்பு இருந்த கல்விக்கும் வித்தியாசம் தரத்தில் அன்று, வகையில்தான் வித்தியாசம். ரேடியோவை இயக்க நான் என் 35வது வயதில்தான் தெரிந்து கொண்டேன். ஆனால் என் 3 வயதுப் பேரன் ரேடியோவை இயக்குகிறான். இயக்கவேண்டிய நேரம் வந்ததும் 'ரேடியோ வை' என்று தன் மழலை மொழியில் கூறுகிறான்; முன் காலத்தில் மனிதனே கோயில் மணியோசையைக் கேட்டு நேரத்தை அறிந்தான். இன்றைய மனிதன் ஆலயின் சங்கொலி கேட்டு நேரத்தை அறிந்து கொள்கிறான். இவனுக்குக் கோயில் மணியோசை காதில் விழாத அளவுக்கு இவன் தரம் குறைந்துவிட்டது என்று சொன்னால் அது எப்படிசரியாகும்?''

—இது பேராசிரியர் அண்ணா அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சென்னை உயர் நிலைப்பள்ளி ஒன்றின் விழாவில் பேசியதில் ஒருதுளி.

● ● ● ●

கி. பி. 2000ஆண்டில் உலக மக்கள் தொகை 500 கோடியிலிருந்து 700 கோடி வரை பெருக்கூடும் என்று மக்கள் தொகை ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

ஐ.நா.நிபுணர்கள் கி.பி. 2000ஆம் ஆண்டில் மக்கள்தொகை 488 கோடியிலிருந்து 690 கோடிவரை இருக்கலாம் என்று 1957இல் கருதினர்.

ஆனால் 1963ஆம் ஆண்டிலோ தம் மதிப்பீட்டை மறு பரிசீலனை செய்து இந்தத் தொகை 2000 ஆம் ஆண்டில் 544·96 கோடிமுதல் 699·4 கோடிவரை இருக்கலாம் என்று கூறினர். இப்போதிருப்பதைக் காட்டிலும் 150 கோடி முதல் 200 கோடிவரை அதிகரிக்கும் என்றால் அது பெருந் தொகைதான். ஏனெனில் இது கடந்த நூற்றாண்டின் மத்தியில் இருந்த உலக மக்கள் தொகை முழுவதைக் காட்டிலும் அதிகமாகும்.

இத்தகவலை சோவியத் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

* * * *

1961ஆம் ஆண்டைய இந்தியக் குடி மதிப்பு அறிக்கையில் திராவிட மொழிக் குடும்பத்தின்கீழ் 153 தாய் மொழிகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் 104 தாய் மொழிகளை நன்கு அறியப்படுகின்ற நான்கு திராவிட மொழிகளின்கீழ் (தமிழ் - 22, தெலுங்கு - 30, கன்னடம் - 32, மலையாளம் - 14) பாகுபடுத்தலாம் எனவும், 49 தாய் மொழிகள் நன்றாக அறிந்துகொள்ளவியலாத திராவிட மொழிகளாகவும் உள்ளன எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, தோடா, கோதா, படகா முதலிய மொழிகள் தென் திராவிட மொழிகள் என்றும், தெலுங்கு, துளு, கோலாமி, நாய்க்கி, பர்ஜி, ஒல்லாரி, சலூர், கோண்டி, பெங்கு, மண்டா, கோண்டா, குவி, குயி, கோயா முதலிய மொழிகள் நடுத் திராவிட மொழிகள் என்றும், குரூக், மால்டோ, பிராகுய் வட திராவிட மொழிகள் என்றும் மொழி நூல் அறிஞர்களால் அறிவிக்கப்படுகின்றன.

இந்தியாவில் பேசப்படாத ஒரே திராவிட மொழி 'பிராகுய்'தான். பிராகுய் மொழி பேசும் மக்கள் மேற்குப் பாகிஸ்தானிலுள்ளகலத், கயிர்பூர், ஐதராபாத்து ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

— தமிழ்முரசு

சீரணி 'சின்ன'ப் போட்டி முடிவு

ஏப்ரல் திங்களில் நடைபெறவிருக்கும் ஆசிரியர்க் குழுக் கூட்டத்தில் சீரணி 'சின்ன'ப் போட்டிகள்பற்றி முடிவெடுக்கப்பட்டு, மே இதழில் அறிவிக்கப்படும்.

பசுமைப் புரட்சி அமைச்சர்


தமிழ் நாட்டில் பசி-பட்டினி-பற்றாக்குறை என்ற சொற்களே இல்லாமல் செய்வதற்காகப் பேரறிஞர் அண்ணா நீட்டிய "பசுமைப் புரட்சி"த் திட்டத்தை நிறைவேற்ற முனைந்து நிற்பவர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கி. பா. ஆதித்தனார்.

இந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்தைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா பல கட்டுரைகளிலும், வானொலிப் பேச்சிலும், சட்டமன்ற உரைகளிலும் தெளிவாகத் தெரிவித்து இருப்பதுடன், அவர் வெளியிட்ட 1967-ம் ஆண்டுக்கான தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும் இதுபற்றிக் குறிப்பிட்டு உள்ளார்.

அத் தேர்தல் அறிக்கையில் பேரறிஞர் அண்ணா கூறியிருப்பதாவது:

"பருவமழை தவறும்போது 'இயற்கை கெட்டுவிட்டது' என்று கூறிச் சும்மா இருந்துவிடக் கூடாது. வறட்சி என்ற நிலைமை தமிழ் நாட்டில் தலைதூக்காமல் தடுக்க, தி. மு. கழகம் விரும்புகிறது. தமிழ் நாட்டில் தரைக்கு அடியில் மறைந்து கிடக்கும் நீர் வளத்தை, ஆழ் கிணறுகளைக்கொண்டு வெளியே கொண்டு வந்து தரிசு நிலங்களை விளைநிலம் ஆக்கும் திட்டத்தைத் (பசுமைப் புரட்சித் திட்டத்தை) தி.மு. கழகம் மேற்கொள்ள விரும்புகிறது".

தேர்தல் அறிக்கையில் கூறியபடி உணவுக் கட்டுப்பாடுகளை நீக்கிவிட்ட பிறகு, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பசுமைப் புரட்சித் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டியது மிகவும் அவசியமான தாகவும், அவசரமானதாகவும் ஆகி



விட்டது. இதை நன்றாக உணர்ந்த ஆதித்தனார், இத்திட்டத்தை வேகமாக நிறைவேற்றக் கூட்டுறவுத் துறையை முடுக்கி விட்டிருக்கிறார். இதற்காகவே "நிலவள வங்கி"கள் என்று வட்டாரங்கள் (பிளாக்குகள்) தோறும் அமைத்தும் வருகிறார்.

குரும்பூர் குப்புசாமி

30 லட்சம் பெண்களின் அபிப்பிராயம் தவருக இருக்கமுடியாது

30 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கடந்த நா
டங்களாக லூப் உபயோகித்து வருகின்றனர். இவர்கள்
லுள்ள வசதிகளை அனுபவித்தும் அறிந்தவர்கள்.

லூப் :

தாமானது—நம்பகரமான கருத்தடைச் சாதன
ஒன்று.

சுலபமாகப் பொருத்தக்கூடியது—வைத்தியர்கள் இ
நிமிடங்களில் பொருத்திவிடுகின்றனர்.

வேண்டாமென்றபோது அகற்றிவிடக் கூடியது—இ
குழந்தை வேண்டுமென்கிறபோது லூப்பைச் சு
அகற்றிவிடலாம்.

சௌகரியமானது—லூப்புடன் வேறு சாதனம் ஒன்று
யோகிக்கத் தேவையில்லை. லூப்பிருக்கும் சமயம்
உறவில் குந்தகம் ஏற்படுவதில்லை.

அபாயமற்றது—இதனால் நோயொன்றும் ஏற்படுவதில்
உபாதையேற்பட்டாலும் எளிதில் குணப்படுத்தக் கூடிய

ஆம்ந்த பரிசோதனையின் பின்னரே வைத்தியர்கள் லூப்
பானான பெண்களுக்கு ஏற்றது என்கின்றனர். லூப்
தாத பெண்களுக்கு, பேற்றைக் கட்டுப்படுத்தும், ஒரு
தைக்கும் மற்றை
மிடையே இடை
அதிகக்கஷ்டம் உதவு
சாதனங்களிருக்கி
அருகிலுள்ள குடும்
டுப்பாடு நிலையத்தை
தாரோடிபுங்கள். இ
கட்டுப்பாட்டிற்கான
சனைகளும் உதவிகளு
வசமாகப் பெறலாம்.



வதந்திகளை
நம்பாதீர்கள்

உங்கள் வைத்
நம்புங்கள்

ஏழை உழவர்கள்கூட ஆழ்கிணறு வெட்டவும், ''பம்புசெட்'' வைக்கவும் பண உதவி செய்வதை இந்த வங்கிகள் நோக்கமாகக் கொண்டு உள்ளன. ''ஏழைகள் நலனுக்காக என்று அமைக்கப்பட்ட கூட்டுறவுத்துறையை, ஆதிக்கக்காரர்களின் கரத்தில் இருந்து விடுவிக்கும் முயற்சியை மேற்கொள்ளக் கழகம் விரும்புகிறது'' என்று தேர்தல் அறிக்கையில் பேரறிஞர் அண்ணா கூறியதை இதன் மூலம் ஆதித்தனார் நிறைவேற்றி வருகிறார்.

தமிழ் நாட்டின் செல்வம்

''தமிழ் நாட்டின் செல்வம், சேலத்தில் கிடைக்கும் இரும்பு அல்ல; தென் ஆர்க்காட்டில் கிடைக்கும் நிலக்கரி அல்ல; வட ஆர்க்காட்டில் கிடைக்கும் அலுமினியமும் அல்ல. தரைக்கு அடியில் உள்ள தண்ணீர் தான் தமிழ் நாட்டின் பெருஞ் செல்வம்'' என்று ஆதித்தனார் அடிக்கடி கூறுவது உண்டு. ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் தன்மை அமைந்தது. தமிழ் நிலம். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் மழை பெய்யாவிட்டாலும், தமிழ் நாட்டில் பெரும்பாலான இடங்களில் 40 அடி ஆழத்திலேயே தண்ணீர் கிடைக்கிறது. இந்தத் தண்ணீரை வெளியே (மேலே) கொண்டு வந்துமுப்போகம் விளையச் செய்வதே பசுமைப் புரட்சி.

இந்தத் தண்ணீரை வெளியே கொண்டுவர ஆழ்கிணறுகள் வெட்ட வேண்டும். இத்திட்டத்தில் ஆதித்தனார் முழுக் கவனத்துடன் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே அவரிடம் இருந்த போக்கு வரத்துத் துறையை வேறு அமைச்சரிடம் முதலமைச்சர் மாற்றிக் கொடுத்தார். ''நிலவள வங்கிகள் மூலம், இரண்டு ஆண்டுக்காலத்தில் அறுபது ஆயிரத்துக்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டிய அளவுக்குப் பொறுப்பு இருப்பதால், ஆதித்தனார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, போக்கு வரத்துத் துறை மாற்றப்பட்டு இருக்கிறது'' என்று சட்டசபையில் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

ஏற்றுக் கொண்ட பொறுப்பை விரைவில் ஆற்றி முடிக்கும் திறமை ஆதித்தனுக்கு உண்டு. எனவே, வயதில் முதியவர் ஆனாலும், பணியில் 25 வயது இளைஞரைப்போலவே சுறுசுறுப்பாகப் பசுமைப் புரட்சியை நிறைவேற்றி வருகிறார். உழைப்பு அவர் உடன் பிறந்தது. உழைப்பினாலேயே உயர்ந்தவர் அவர். எடுத்த வேலையை முடிக்கும்வரை கண் துஞ்சார்; பசி நோக்கார்; மெய் வருத்தம் பாரார். அவர் வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணமே இது தான்.

உழவர்களின் முன்னேற்றத்தில் இயற்கையிலேயே ஆதித்தனருக்கு ஆர்வம் மிக உண்டு. அவர்களின் உரிமைக்காக, நலனுக்காகப் போராட்டம் நடத்திச் சிறைச் சாலைக்குச் சென்றிருக்கிறார். 1955-ல் மாத்தூரில் நடந்த உழவர் போராட்டத்தில் ஆதித்தனர் கைது செய்யப்பட்டு, கையிலே விலங்கிடப்பட்டு அழைத்துப் செல்லப்பட்டது அப் போதைய காங்கிரஸ் அரசின்மீது தமிழ் மக்களுக் கொதிப்படையச் செய்தது. பசுமைப் புரட்சித் திட்டத்தினுல் உழவர்கள் பெருமளவு பயன் அடைவார்கள் ஆதலால், இத் திட்டத்தை நிறைவேற்ற ஆதித்தனர் முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறார்.

சபாநாயகர்

கழக ஆட்சியின் முதல் சட்டப் ''பேரவைத் தலைவர்'' (சபா நாயகர்) என்ற பெருமையும் ஆதித்தனருக்கு உண்டு. 1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்ததும், சட்டப் பேரவைத் தலைவராகப் பணியாற்ற ஆதித்தனரைப் பேரறிஞர் அண்ணு தேர்ந்து எடுத்தார் என்றால், அதற்குக் காரணம் அவர்மீது அறிஞர் அண்ணு கொண்டிருந்த நட்பும் நன் மதிப்பும் ஆகும்.

அவைத் தலைவராக ஆதித்தனர் தேர்ந்து எடுக்கப்பட்டதும், ''உலகில் முறையான ஆட்சிமுறை அமைவதற்கு முன்பே தமிழன் உலகம் மெச்ச ஆட்சிநடத்தியதாக வரலாறு உள்ளது. இதை அறிந்த ஆதித்தனர் தலைமையில் இந்த மன்றம் சிறந்து விளங்கும்'' என்று பேரறி

ஞர் அண்ணு கூறினர். அவர் நம் பிக்கை வீண்போகவில்லே. சட்டப் பேரவையை ஆதித்தனர் நடத்திச் சென்ற அழகைக் கண்டு, அறிஞர் அண்ணுவே பின்வருமாறு சொன் னர்: மூன்பெல்லாம் 'கனம் மந் திரி அவர்களே', 'கனம் அங்கத் தினர் அவர்களே' என்று அழைத் துத்தான் பேசுவார்கள். ஆதித்தனர் அந்தக் 'கன'த்தை மாற்றினர். 'மாண்புமிகு அமைச்சர்' என்று அழைத்தார். சட்டசபையும் மாண்பு பெற்றது''.

சட்டசபை நிகழ்ச்சிகளேத் தமிழி லும், ஆங்கிலத்திலும் நடத்தலாம் என்ற விதி இருக்கிறது. ஆனல், பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. ஆதித் தனர் அதை மாற்றி, தமிழிலேயே நிகழ்ச்சிகளே நடத்தினர்.

''சட்டசபை நடவடிக்கைகளே இப்பொழுது தமிழிலேயே ஆதித்த னர் நடத்தி வருகிறர். இதைப் பார்க்கும்பொழுது, சட்டசபையில் தமிழ்த்தாயே வந்து பாடம் சொல்லிக் கொடுப்பது போல இருக்கிறது'' என்று பேரறி ஞர் அண்ணுவின் பாராட்டுதலேயும், ''ஆதித்தனர் அவைத்தலேவராக இருப்பதால், சட்டசபையில் தமிழ் மணம் கமழுகிறது, தமிழ்த்தாய் புன்னகை பூக்கிறள், தமிழர்கள் உவகை கொள்ளுகிறர்கள்'' என்று கலேஞர் கருணுநிதியின் புகழ் மாலே யையும், தமிழ்த்தாயின் மாண்ட புகழை ஆதித்தனர் சபாநாயகர் ஆனதும் மீட்டுத் தந்துவிட்டார்'' என்று நாவலர் நெடுஞ்செழியன் போற்றுதலேயும் பெற்றர்.

தூங்காமை

தமிழ் நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்க இரண்டு தீர்மானங்கள் ஆதித் தனர் அவைத்தலேவராக இருந்த பொழுது சட்டப்பேரவையில் நிறை வேறின. ஒன்று, ''தமிழ் நாடு'' என்று பெயர் சூட்டும் தீர்மானம். இன்னென்று, இந்தி ஒழிப்புத் தீர் மானம்.

இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக 1968 ஜனவரி 23ல் கூட்டப்பட்ட சட்டசபையின் அவசரக்கூட்டத்தைத்''தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவருக்கு'' என்ற திருக்குறட்பாவுடன் ஆதித்தனர் தொடங்கினர்.

இந்தக் குறட்பாவுடன் கூட்டத் தைத் தொடங்கியதற்கான காரு ணத்தைப் பின்னர் விளக்கினர். அதற்கு முந்திய நாள், பேரறிஞர் அண்ணு அவர்கள் இரவு முழுவதும் தூங்காமல் விழித்து இருந்து இந்தித் தீர்மான வடிவத்தை உருவாக்கினர். கலேஞர் கருணுநிதி, நாவலர் நெடுஞ் செழியன், ஆதித்தனர் ஆகியோரும் உடன் இருந்தார்கள். தீர்மானத் திற்கு வடிவம்கொடுக்க விடியற்காலே வரை ஆகிவிட்டதால், தூங்க நேர மில்லாமல், அவசர அவசரமாகக் குளித்துவிட்டு, சட்டசபைக்குப் போய், கூட்டத்தைத் தொடங்கிய போது, தூங்காமை நினேவுக்கு வந் தது. ''ஆகவே, தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவருக்கு'' என்ற குறட் பாவைக் கூறி, கூட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

தமிழுக்கு விருந்தும் மருந்தும்

தமிழ் நாடு சட்டப் பேரவை விதி கள் ஆங்கிலத்தில் இருந்தன. அவற் றை ஆதித்தனர் தமிழ்ப்படுத்தி அச் சிட்டு வெளியிட்டார். இதைத் தமிழ்ப்படுத்த ஆதித்தனர் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியையும், இப்பணியின் சிறப்பையும், அறிஞர் அண்ணு அளித்துள்ள அணிந்துரை யில் இருந்தே நாம் தெரிந்து கொள் ளலாம்.

''தமிழ் ஆட்சி மொழியாகிவிட்ட பிறகும் சட்டப் பேரவைக்கான விதி முறைகள் ஆங்கில மொழியிலேயே இருந்து வருவது பொருந்தாது என் பதனே உணர்ந்த சட்டப் பேரவைத் தலேவர், தமிழிலேயே விதிமுறைகள் இருந்திட வேண்டுமென்று விழைந் தார். வேறு பலர், அந்த அளவோடு தமது பணி முடிந்ததாகக் கருதிக் கொண்டு அதன் தொடர்பான பணி களே மற்றவரிடம் தந்து விடுவர். ஆனல், சி. பா. ஆதித்தனர், தமி ழார்வ மிகுதி காரணமாகத் தாமே

அந்தப் பணியினையும் மேற்கொண்டு விதிமுறைகளைத் தமிழாக்கம் செய்தளித்துள்ளார்கள். தமிழாக்கம் மிகுந்த கவனத்துடனும், தரம் நிரம்பியதாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம். ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் தமிழாக்கம் தரப்பட்டுள்ள பாங்கு பாராட்டத்தக்கதாக இருக்கிறது. ஆர்வத்துடன் இப்பணியை மேற்கொண்ட நமது நண்பர், இந்த நூலின் மூலம் சட்டப் பேரவையின் நடவடிக்கைகளில் தமிழ் மணம் கமழ்ந்திட வழிவகுத்தளித்துள்ளார். நீண்ட நாட்களாக நிலவி வந்த குறையினைக் களைந்தெறியும் முறையிலே கிடைத்துள்ள இந்தத் தமிழாக்கம் தந்துள்ள சி. பா. ஆதித்தனருக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது'' என்று அணிந்துரையில் அண்ணு குறிப்பிட்டு உள்ளார்.

''தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதிகள்'' என்ற இந்நூலின் வெளியீட்டு விழா, அறிஞர் அண்ணு தலைமையில் நடந்தது. அப்பொழுது பேசிய கலைஞர் கருணாநிதி அவர்கள், ''தமிழ் விருந்தும் தந்து, தமிழ் மேலும் வளர மருந்தும் அளிக்கும் வகையில் இந்நூலை ஆதித்தனர் ஆக்கித் தந்திருக்கிறார்'' என்று பாராட்டினர்.

இவ்வாறெல்லாம் அவைத் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றிய ஆதித்தனர், தென்காசியில் நடந்த இடைத் தேர்தலில், தி. மு. க. வின் வெற்றிக்காக, அவர் தேர்தல் பணியாற்றியது தவறு என்று மொரார்ஜி தேசாய் (டெல்லி நிதி மந்திரி) போன்ற காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கூறியதைத் தொடர்ந்து, அறிஞர் அண்ணுவின் ஆலோசனைப்படி, 1968 ஆகஸ்டு 12இல் சபாநாயகர் பதவியை விட்டு விலகிக் கொண்டார்.

அண்ணுவுடன் தொடர்பு

1939 முதலே பேரறிஞர் அண்ணுவுடன் ஆதித்தனருக்குத் தொடர்பு உண்டு. இதுபற்றி ஆதித்தனரே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

''1939இல் நான் மலேயாவில் பாரிஸ்டர் தொழில் புரிந்து வந்த போது, தமிழகத்தில், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற குரல் கிளம்பியதைக் கேட்டேன். அந்த இலட்சியத்துக்குத் தொண்டாற்றும் எண்ணத்தோடு மலேவி மக்களுடன் சென்னை வந்து சேர்ந்தேன்.

''சென்னைக்குக் கப்பலில் வந்து இறங்கிய அன்று, திருக்கழுக்குன்றத்தில் நீதிக்கட்சியின் மாநாடு நடைபெற்றது. உடனே, சென்னையிலிருந்து ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு திருக்கழுக்குன்றம் போனேன். தலைவர் பெரியார் அவர்களைச் சந்தித்தேன். அவரிடம் நான் என் கருத்தைத் தெரிவித்தவுடன், ''மாநாட்டுப் பந்தலுக்குள் அண்ணுதுரை இருக்கிறார்; அவரிடம் பேசுங்கள்!'' என்று கூறி அனுப்பிவைத்தார்!

''மாநாடு முடிந்த பிறகு, அண்ணு அவர்களோடு நீண்ட நேரம் உரையாடும் வாய்ப்பு எனக்கு அன்று கிடைத்தது. தமிழ் மொழிக்கு ஒரு மறுமலர்ச்சி தேவை என்ற கருத்தை மிகவும் வலியுறுத்திப் பேசினர்.

''தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் அவருடன் சேர்ந்து தொண்டாற்ற உறுதி கொண்டிருக்கிறேன் என்றும், மலேயா போய்விட்டு மீண்டும் திரும்பி வருவேன் என்றும் கூறி அவரிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

''1942இல் திரும்பி வந்தேன். மதுரையில் ''தமிழன்'' என்ற வார இதழைத் தொடங்கினேன். அப்போது அண்ணு அவர்கள் 'தமிழன்' பத்திரிகைக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். அதை இன்றும் நான் வைத்திருக்கிறேன்.

''1952இல் காங்கிரசை எதிர்த்துக் கூட்டணியின் பெயரால் தேர்தல் களத்தில் இறங்கியபோது, கூட்டணி வெற்றி பெற அண்ணு அவர்கள் உறுதுணை செய்தார்கள். அப்போது தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடவில்லை.

''1953இல், நான் கூட்டணியின் பொதுச் செயலாளனாக இருந்த போது, ரஷியா சென்று வந்தேன். அப்போது அண்ணு அவர்கள் எனக்குத் தி. மு. கழகத்தின் தலைமை நிலையத்தின் சார்பில் வரவேற்பு அளித்தார்.''

இவ்வளவு அமோக விளைச்சலுக்கு உதவியது எது?








புத்திசாலியான விவசாயி விவேகமாகத் தேர்ந்தெடுத்த ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்

விஷயமறிந்த விவசாயிகள்
பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும்
கம்பகமான ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன்
பம்பு செட்டுகளையே
கேட்டு வாங்குகிறார்கள்.

ஒரு இணையற்றது என்று புகழ் பெற்ற
'ஹாரைஸோன்டல்' பம்பு செட்டுகள் உட்பட
பலவகை சென்டிரிப்யூகல்
பம்புகளையும் பெஸ்ட் அளிக்கிறது.
ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்
கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன்
தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப்
பிறகும் சேவை செய்ய, நாடெங்கும்
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மேலும், தக்க பம்புகளைத் தேர்ந்தெடுப்
பதற்கு ஆலோசனைகளையும்
அளிக்கிறது, பெஸ்ட்!



BEACON

பெஸ்ட் & கம்பெனி
பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம் : 1879)
13/15, ஸ்ரீநாத் பீச் ரோடு, சென்னை-1
தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சி ரோடு,
கோயமுத்தூர்.
49-D, மதுரை ரோடு, திருச்சி-1

Press BC.192 Tam(e)

''1965இல் பாதுகாப்புக் கைதியாக என்னை நான்காவது முறையாகச் சிறைப்படுத்தினர்கள். அந்தச் சமயத்தில் ஒருநாள் ''பரோலில்'' வந்தேன். அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்துவிட்டு, பின்னர்க் கலைஞர் அவர்களை 'மேகலா' அலுவலகத்தில் பார்த்து, தி. மு. கழகத்தில் இரண்டரச் சேர்ந்து விடுவதாகத் தெரிவித்துவிட்டு, மறுநாள் கோவைச் சிறைக்குப் போய்விட்டேன்.

''அதன் பிறகு 1967 தேர்தலில் கழகக் கூட்டணி அமைப்பதில் அறிஞர் அண்ணாவுடனும், கலைஞர் அவர்களுடனும் சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டினேன்.''

—('முத்தாரம்' பேட்டி)

தேர்தல் பணி

தேர்தல்களத்தில் ஆதித்தனருக்கு உள்ள அனுபவத்தை அண்ணா நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். நெல்லை மாவட்டத் தேர்தல் பணி முழுவதையும் அவர் கையில் நம்பி ஒப்படைத்தார்.

1962 தேர்தலில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எல்லாச் சட்ட சபை இடங்களையும் காங்கிரஸ் கைப்பற்றி, நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றது. 1967இல் தி. மு. க. கூட்டணிக்கு 12 இடங்களிலாவது வெற்றி தேடித்தருவதாக ஆதித்தனர் சொன்னர். தேர்தல் முடிவில் காங்கிரசுக்குக் கிடைத்தது 5 இடம். கூட்டணிக்குக் கிடைத்ததோ 14 இடம்!

தேர்தல் முடிவுபற்றிப் பேரறிஞர் அண்ணா கூறியதாவது:

''இலட்சியப் பணியில் ஆதித்தனர் சிறையில் தள்ளப்பட்டதும் அல்லாமல், மேலும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். ஆனால், அந்தக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட நேரத்திலும், 'உடல் உடைந்து விட்டது, மனம் ஒன்றுதான் உடைய வேண்டும்' என்று மாறிய வட்டாரத்திலே உள்ளவர்கள் எண்ணிக் கொண்டு இருந்த நேரத்திலேயும், அவர் மனம் உடையாமல், ஒரு பெரிய பொதுத் தேர்தலில் தன்னைத் தானே ஈடுபடுத்திக் கொண்டு, தமிழக மக்களுக்கு ஒரு புதிய அரசு ஏற்பட வேண்டுமென்று அவர் எடுத்துக் கொண்ட திடீரமான அக்கறையும், ஆர்வமும் தமிழகம் இன்றைய தினம் மிக நன்றாக அறிந்திருக்கிறது.''

பொதுத் தேர்தலில் ஆதித்தனர் திருவைகுண்டம் தொகுதியில் போட்டியிட்டுப் பெரும் வெற்றி பெற்றார். அவருக்கு 41,828 ஓட்டுகளும், எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளருக்கு 22,667 ஓட்டுகளும் கிடைத்தன. 17-3-67இல் அவைத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

1969 பிப்ரவரியில் அறிஞர் அண்ணா காலமாகவே, கலைஞர் மு. கருணாநிதியை முதலமைச்சராகக் கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்றது. பிப்ரவரி 13இல கூட்டுறவுத்துறை அமைச்சராக ஆதித்தனர் நியமிக்கப்பட்டார்.

இயல்பு

திருவைகுண்டத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த சிவந்தி ஆதித்தனரின் மகனாகப் பிறந்த பாலசுப்பிரமணிய (சி. பா.) ஆதித்தனர், திருவைகுண்டத்திலேயே உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து, திருச்சி ஜோசப் கல்லூரியில் எம். ஏ., பட்டம் பெற்று இலண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் ஆனர். இலண்டனில் படித்த ஐந்தாண்டுக்காலமும் தன் படிப்புக்கான செலவுக்கும், வாழ்க்கைச் செலவுக்கும் தேவையான பணத்தை, பத்திரிகை நிருபராக உழைத்துத் தானே தேடிக் கொண்டார். பாரிஸ்டர் ஆனதும், மலேயாவுக்குச் சென்று ஏறத்தாழ பத்து ஆண்டுகள் பாரிஸ்டர் (வக்கீல்) ஆக வேலை செய்து, நிரவியம் தேடி தமிழ் நாட்டுக்குத் திரும்பிய பின்னர் திருச்செந்தூரில் ஒரு கல்லூரி நிறுவ அந்தத் நிரவியத்தை ஈந்தார். இன்று நெல்லை மாவட்டத்தில் சிறந்த முதல் தரக் கல்லூரியாக ஆதித்தனர் கல்லூரி விளங்குகிறது.

உலகம் முழுவதும் சுற்றியவர் ஆதித்தனர். 1963இல் வியன்னாவில் நடந்த உலக சமாதானக் குழுவின் கூட்டத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். 1956இல்

உலகப் பயணத்தை மேற்கொண்டார்.

''உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு'' என்ற இலட்சியத்தோடு தமிழுக்கும், தமிழருக்கும் தொண்டாற்றி வரும் ஆதித்தனாரின் மணி விழா 1964இல் சென்னையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை தலைமையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் 'தமிழர் நாடு' உருவம் பொறித்த வெள்ளிக் கேடயம் ஒன்றை ஆதித்தனாருக்கு வழங்கி, கலைஞர் கருணாநிதி வாழ்த்தினார். 'தமிழன் தலை நிமிர வேண்டும். நல்ல மக்களாட்சி வளர வேண்டும் என்பதில் ஆவலும் அக்கறையும் கொண்டவர், ஆதித்தனார். 'பூம் புகார்' திரைப் படத்தில் நான் 'தமிழ்—தமிழ்' என்று முப்பதுமுறை எழுதியதற்காக அவர் காட்டிய மகிழ்ச்சி என்னைப் புல்லரிக்க வைத்தது. ஆதித்தனாருக்கு இந்தி ஆதிக்கம் கட்டோடு பிடிக்காது. அத்தகைய கனல் — தமிழ்க் கனல் இருப்பதால் தான் ஆதித்தனாரைப் பாராட்டுகிறேம்' என்று கலைஞர் கூறினார்.

சொந்த உழைப்பினால் உயர்ந்தவர் ஆதித்தனார். 'சிறுகக்கட்டி பெருக வாழ்' என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர். இன்றைக்கும் சாதாரண நாலு முழக் கைத்தறி வேட்டியே கட்டும் எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டவர். எளிய தோற்றம் என்றாலும், இனிய தோற்றம், எப்பொழுதும் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டே யிருக்கும். காட்சிக்கு எளியவர்; கடுஞ்சொல் இலர்.

''போராடாமல், பணியாற்றாமல் ஒதுங்கியிருக்கிற இயல்பு ஆதித்தனாருக்கு இல்லை. அதே விதமான இயல்போடு 25 ஆண்டுகளாகத் தமிழக மக்களுடைய நல்வாழ்வோடு அவரது வாழ்வும் பணியும் பிணைக்கப்பட்டு இருக்கின்றன'' என்று அறிஞர் அண்ணு கூறியிருப்பது, மிகவும் பொருத்தமே!

தந்தி: செண்டெக்ஸ் போன்: 32 & 38

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட், சென்னிமலை

CHENTEX
HANDLOOM FABRICS

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், தலையணை உறைகள் உயர்ந்த தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், கெட்டிச் சாயத்திற்கும், குறைந்த விலைக்கும் சிறந்தவை.

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்ட்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கைத்தறி மாளிகைகளிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.,
தலைவர்

மின்னணுயியல்

செல்வி. எஸ். கற்பகம் பி.ஈ.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அறிவியல் வளர்ச்சி அதுவரை உலகம் கண்டிராத அளவுக்கு வேக நடைபோட ஆரம்பித்தது. சென்ற நாற்பது ஆண்டுகளிலோ ஆண்டுக்கு ஆண்டு ஏன்? நாளுக்கு நாள் அறிவியல் வளர்ச்சியின் வேகம் அதிகரித்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இந்த வளர்ச்சியின் முக்கிய காரணம். மின்னணுயியலும் அதன் VERSALITY என்றுஆங்கிலத்தில் கூறுவார்கள். அந்தப் பலதர திறனுமே ஆகும். மின்னணு! நூற்றாண்டுகளுக்குமுன் மிகச் சிலருக்கே அது வும் பெயர்மட்டும் தெரிந்து - முப்பதாண்டுகளுக்குமுன் அறிவியல், பொறியியல் வல்லுநர்களுக்குமட்டுமே புரிந்தது. இன்றோ அது அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவை! தொழிற்சாலைகள், பயணவசதி, மருத்துவம், தூர இணைப்புப்போன்றசமுதாயவளர்ச்சிகளிலும் அதே சமயம் பொழுது போக்கு வீளையாட்டுபோன்ற மனிதயியல் வளர்ச்சியிலும் மின்னணுயியல் தவியிடம் பெற்றிருக்கிறது.

மின்னணுக்களின் இயல்பு, இயக்கம், இவற்றை பயன்படுத்தும் முறை ஆகியவை மின்னணுயியல் எனப்படும். மின்னணுப் பொறியியலின் தொடக்கம் வால்வுகளின் கண்டுபிடிப்பே எனலாம். இரண்டே தகடுகள் கொண்ட வெற்றிடயோடுகள் அதன் ஆரம்பம். ஒரு தகட்டைச் சூடு செய்து அதனுல் வெளிப்படும் மின்னணுக்களை மற்றொரு தகட்டில் நேர்மின அழுத்தத்தினுல் அதை நோக்கி ஓடச்செயது அதன்மூலம் மின்சார ஓட்டத்தை உண்டாக்குவதும், இந்த மின்சாரத்தின் அளவு, மின் அழுத்தத்திற்குத் தக்கபடி மாறுவதும் ரெக்டிபிஷேன் எனப்படும். பின்னர் மூன்றும், நான்கும், அதற்கு மேலும் தகடுகள்கொண்ட வால்வுகள் சிறிய அழுத்த மாறுதல்களைப் பெரிதாக்கும் பணியைச்செய்ய ஆரம்பித்தன.

இந்த வால்வுகளின் கண்டுபிடிப்புத்தான் ரேடியோ தொடர்புகளுக்கும், இணைப்புகளுக்கும் வழி வகுத்தது. தூரதேச இணைப்புகளும், செய்தி இடங்களும் வளர்ந்தன. வசதியில்லாத இடங்களிலும், பிற போக்கான பகுதிகளிலும் அறிவைப் பரப்பவும். உழைத்துச் சோர்ந்த உள்ளங்களில் மகிழ்வை நிரப்பவும், வானெலி நிலையங்களும், வானெலிப் பெட்டிகளும் தோன்றலாயின. இரண்டாம் உலகப்போரில் RADAR எனப்படும் மின்னணுக் கண்களையும், புலன்கள் பயன்படாத நிலைமைகளில் கப்பல்களையும், விமானங்களையும் செலுத்தும் திறனையும் கண்டுபிடித்து வளர்த்தது. RADARகள் எதிரி விமானங்களையும், கப்பல்களையும் கண்டுபிடித்துச் சுட்டு வீழ்த்த மட்டுமல்ல, வானிலை ஆராய்ச்சியிலும், விரிந்து கிடக்கும் வானவெளியில் மறைந்து கிடக்கும் விந்தைகளை அறியவும் பயன்படுகிறது.

இரு நூறு ஆண்டுகளில் வளர்ந்த அறிவியலுக்கும் நூறு ஆண்டுகளின் பொறியியல் வளர்ச்சிக்கும் இணை

யான-ஏன் அதிகமான - வளர்ச்சியை இருபதே ஆண்டுகளில்அடைந்த உலக வளர்ச்சியின் முன்னணியில் நிற்பது டிரான்ஸிஸ்டர்! வெற்றி வால்வுகளி வான இயந்திரங்கள் பெரியதாகவும், கனமாகவும், எளிதில் ஓரிடத்தி விருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்ல முடியாதவாறும் இருந்தன. அவற்றைப் பயன்படுத்தும் முறை யிலும் மிகுந்த எச்சரிக்கையும், பாது காப்பும், பக்குவமும் தேவையாக இருந்தன. டிரான்ஸிஸ்டர்களின் பயனுக அதே வசதிகள் செலவில், பளுவில் அளவில் குறைந்து பயன் படுத்த எளிமையாகவும், பாதுகாக்க வும், எடுத்துச்செல்லவும் வசதியாக மாறின. மனிதனின் அத்தியாவசி யத் தேவையாகிவிட்ட வானெலிப் பெட்டியை நடைபாதை யோரங் களில் வசிப்போரும் வாங்கும் அள வுக்குக் குறைந்த விலையில், நிறைந்த அளவில் கிடைக்க வழிசெய்ததும் டிரான்ஸிஸ்டர்களே!

வெற்றிட வால்வுகளையும், டிரான் ஸிஸ்டர்களையும் சரியான முறையில் இணைத்து தேவையான பயணப்பெற தொளிட்டர்கள், இண்டக்டர்கள் எனும் COMPONENTS உபயோகப்படு கின்றன. பலவிதமான முறையில் இணைத்துச் செயல்பட வைப்பதன் மூலம் அளவு கருவிகளும், கட்டுப் படுத்தும் கருவிகளும், 'தானே இயங் கும்' கருவிகளும் செயல்படுகின்றன. தனித்தனியான பகுதிகளைக் கம்பி யினுல் இணைக்கும் முறையில் சில தடைகளும் குறைகளும் உண்டு. இவற்றை நீக்க ஒரு மின்சாரம் பாயாத பலகையில் வேண்டிய முறை யில் ரசாயனமுறையில் இணைப்புகளை வரைந்து பின்னர் பகுதிகளைப் பதிக் கும் முறை பயனுக்கு வந்தது. இது தான் PRINTED CIRCUITS தேவைகளும், திருத்தமான அளவு களும் அதிகமாக, கருவிகளின் அளவு மிகவும் சிறியதாவது இன்றியமை யாததாகிவிட்டது. இந்த அவசியத் தின் விளைவுதான் தனித்தனிப் பகுதி களை இணைக்காமல் அந்தப் பகுதி களையே ரசாயன முறைப்படி சுருக்க வழியில் வரையும் முறை (INTEGR-TED CIRCUITS). இதற்கு அடுத்து சமீபத்திய கண்டுபிடிப்பு கண்ணுக் குப் புலப்படாத MICRO PROCESS எனப்படும் மிகமிகச் சிறிய பிணைப் புப் படைப்புகள்!

மருத்துவத்துறையிலே மின்னணு யியலின் சேவை சொல்லுக்கடங்கா தது ஆகும். எளிதில் பார்க்கமுடியாத இடங்களில் உண்டாகும் நோய்களைக் கண்டு பிடிக்கவும், குணப்படுத்தவும் X-RAY எனப்படும் முறைதான் பயன்படுகிறது. மூளையினுள் கட் டியா, குடலுள் பயங்கர ரணமா, இதயத்தில் கோளாறு எதுவாயினும் சரி, இரத்த ஓட்டத்தை அளக்கவும், கட்டுப்படுத்தவும், அறுக்கவும் எடுக் கவும் பின் மறுபடி இணைக்கவும் மின்னணுக் கருவிகள் இன்றியமை யாததாகிவிட்டன. இத்துறையின் வளர்ச்சியின் பயனுக BIOTICS எனப்படும் ஒரு தனி அறிவியல் தொகுதியே உண்டாகிவிட்டது.

பல மனிதர்கள் பல நாட்கள் ஓயாது உழைத்துக் கண்டுபிடிக்கக் கூடிய பல சோதனைகளையும், அவற் றின் விடைகளையும் சில விநாடிகளுள் செய்துதரும் ஆற்றல்கொண்ட இயந் திர மூளைகளையும் இன்று படைத் திருக்கிறோம். கம்ப்யூடர் எனப் படும் இந்த மின்னணுக் கருவிகளின் இன்றைய நிலையைச் செய்தித் தாள் களில் நாள்தோறும் வெளிவரும் அறிவிப்புகளும், அவற்றுக்காகப் பல விடங்களில் பலர் நடத்தும் பள்ளி கள்பற்றிய அறிக்கைகளும், அவற் றில் இடம்பிடிக்கப் பலர் போட்டியிடு வதையும் கண்கூடாகக் காண்கிறோம். குறைந்த நேரத்தில் ஒரு சரியான முறையில் செய்யமட்டுமல்ல, பெரிய அலுவலகங்களில், பல பகுதிகளின் வரவு செலவுகளும், ஆயிரக்கணக் கான தொழிலாளர்களின் வருவாய், பிடித்த நிலுவைகளும், கணக்குகளையும் இன்று கம்ப்யூடர்களே செய்கின்றன.

மனிதனின் இதுநாள்வரை அறிவி யல் சாதனைகளின் சிகரம் சந்திர பயணமும், சந்திரனில் இறங்கி யதும், பின் திரும்பி வந்ததும்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. இயற்கையைக் கண்டு பயந்த மனி தன், நீரையும் நெருப்பையும் கண்டு அஞ்சி நடுங்கிய மனிதன் இன்று இயற்கையை வென்று விடவில்லை. ஆனுல் தனது முயற்சிகளின் பயனுக தன் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொண்டுள்ளான். சில மாதங்களுக்கு

முன்வரை கவிகளின் கனவாகவும், அறிவியல் பொறியியல் வல்லுநரின் நீண்ட நிழலாகவும் மட்டுமே இருந்த விண் வெளிப் பயணம் இன்று இளம் தம் பதிகள் தேனிலவுக்குப் போகத் தம் பெயரைப் பதிவு செய்யும் அளவுக்கு வந்திருக்கிறது என்றால் அது மின் னணுவியலின் சாதனையேயாகும்.

மனிதன் சந்திரனுக்குப் பயணம் சென்றதும், வான வெளியிலே பல நாட்கள் மிதந்து சந்திரனை அடைந் ததும், நடந்ததும் பின் மீண்டதும் நீண்டத்துப் பார்த்தால்கூடப் புல்லரிக் கும் அதிசய சாதனையாகும். உலகத் தோடு அவர்கள் கொண்டிருந்த வானொலித் தொடர்பு எந்த அள வுக்கு அவர்களை சரியானபடி இயக்கி யது என்பதையும் அவர்கள் உள்ளங் களை ஒரு நிலைப்படுத்தி உவக்கியது என்பதையும் நாமறிவோம். சந்திர னுக்குச் சென்றதும், மீண்டதும் பெரிதென்றால் காலமும், இடமும் கொஞ்சமும் தவறாமல் முதலில் குறித்தபடி இந்நிகழ்ச்சிகள் நடந்தது மிக அரியதொன்றாகும். நேரத்திலும், இடத்திலும் இத்தகு நிகழ்ச்சிகள் கணக்கிட்டபடி நடந்ததென்றால் அந் தப் பெருமை கம்ப்யூட்டர்களின் கண் காணிப்புக்கும் கட்டுப்படுத்தும் திற னுக்குமே சாரும். மூன்று பேர் மட்டுமே சென்று கண்ட விந்தைகளை யெல்லாம் உடனுக்குடன் உலக மெல்லாம் காண வழி செய்ததோ டெலிவிஷன்! அவ்வப்போது அவர் கள் அனுப்பிய செய்திகளையும், இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் அப்படியே பதிவுசெய்து கொள்ள வும் பின்னர் உலகமெங்கும் உள்ள பல்வேறு அறிவியல் வல்லுநர்கள் அவற்றை விளக்கவும் வகைசெய்தது மின்னணுப் பொறியியல்தான்.

வேக நடைபோடும் உலக வளர்ச்சி யிலே இந்தியாவின் பங்கு இன்று அளவில் இல்லாவிட்டாலும் தரத் தில் உயர்ந்து நிற்கிறது. உலகின் பல்வேறு பாகங்களில் ஆராய்ச்சி நிலையங்களிலும், தொழில்நுட்ப நிலை யங்களிலும் இந்திய அறிவியல் வல்லு நர்களின் பெயர்கள் தனியிடம் பெற் றுத் திகழ்கின்றன. இந்தியாவின் எல் லைக்குள்ளே பொதுவாகப் பொறி யியல் துறையிலும் சிறப்பாக மின்ன ணுத் துறையிலும் பெண்களின் ஈடு பாடு பெருகி வருகிறது. இதுநாள் வரை அணுக்குமட்டுமே சொந்த மெனச் சமுதாயம் எண்ணிவந்த தொழில்துறையில் இன்று பெண் களின் பங்குபெரும் இடம் பெருகிற்று. ஆர்வமும், ஈடுபாடும்கொண்ட மக ளிர்க்குப் பொறியியல் ஊக்கமளிக்க உண்டான பல பள்ளிகளில் அடை யாறு மகளிர் தொழில் நுட்பப் பள்ளி முதலிடமும் தனியிடமும் பெற்றுத் திகழ்கிறது. மெல்லியலார்க் குப் பொருத்தமான மின்னணுவியல் துறையில் வானொலியின் தன்மை, இயக்கம், பழுது பார்த்தல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. பழுது பார்க்கும் கருவிகளின் விரி வான விளக்கமும், ஒலிபெருக்கி, ஒலி இருத்தி இவற்றின் அமைப்பும் விரிவான முறையில் கற்பிக்கப்படு கின்றன. முதல் ஆண்டு இந்தப் படிப்புக்குத் தேவையான அடிப் படைக் கணிதமும், பௌதிகமும், ரசாயனமும் போதிக்கப்படுகின்றன. இரண்டாம், மூன்றும் ஆண்டுகளில் மேற்சொன்ன பாடங்களுடன் மேற் படிப்புக்கு உதவக்கூடிய சில பகுதி களும் உள்ளன. இவற்றோடு PROJECT WORK என்று சொல்லு வார்கள் - அந்த முறையிலே ஒவ் வொரு மாணவியும் தானே வகுத்து, அமைத்த ஒரு கருவியைச் செயல்பட வைக்கும் திட்டமும் உண்டு.

இத்தகையான பயிற்சிகளால் அவர் கள் எந்த மின்னணுக் கருவியானாலும் இணைக்கவும், இயக்கவும், பழுது பார்க்கவும் மனத்திடம் படைத்தவர் களாகவும் திறமை கொண்டவர்களா கவும் பள்ளியினின்றும் வெளி வரு கின்றனர். திறமை மிக்க இந்த மக ளிரின் பணி நாட்டுக்குப் பயன்பட, பல தொழில் நிலையங்கள் முன்வந்து வேலைவாய்ப்பளிக்கின்றன. வாய்ப் பும், வசதியும், தனித்திறமையும் கொண்ட சிலர் தங்கள் சொந்த பழுதுபார்க்கும் நிலையங்களையும் அமைத்துள்ளனர். இந்த மகளிர் தொழில் நுட்பப் பள்ளிகளில் கொடுக்கப்படும் இலவசக் கல்வியும், தகுதியான பெண்களுக்கு வழங்கப் படும் பண உதவிகளும் மேலும் மேலும் வசதியற்ற பெண்களும் பயி லும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. இத்தகைய வசதிகள் பெண்களுக்கு வேலையும், அதன்மூலம் நாட்டின் வளர்ச்சியில் பங்குபெறும் வாய்ப்பை

யும் குடும்பத்தின் தேவைகளை ஈடு செய்யும் வாய்ப்பையும் அளிக்கின்றன. சுருங்கக்கூறின் இப்பள்ளிகள் தொழில், சமுதாய, சொந்த நலனுக்கு வித்திடுவதன்மூலம் நாட்டிற்கும் - ஏன், உலக முழுவதுக்குமே மிகச் சிறந்த தொண்டாற்றுகின்றன.

நம் நாட்டின் இன்றைய பொருளாதார வணிக நோக்கின் பயனுக திறமையும் பயிற்சியும் கொண்டவர்கள் தனித்துறைத் தொழில் துவங்க வேண்டிய உதவிகள் அளிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே பெண்கள் பங்குகொண்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் இன்றியமையாத உதவியோடு தனித் தொழில் தொடங்கி, திறமை காட்டும் நாள் அதிக தூரத்தில் இல்லை. பெண்களின் தனியியல்பாகப் பொறுமையும், மக்களின் மனத்தை அறியும் சக்தியும் விடாமுயற்சியும் தொழிலுக்கு மட்டுமல்ல நாட்டுக்கே நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. சுருங்கக் கூறின் உலகத்தைச் சுருக்கி மனிதனின் மனவெளியைப் பெருக்கி, தொடர்புகளை வளர்த்து, இனம், நிறம், நாடு எனும் சிறிய நோக்குகளை ஒழிக்கும் பணியில் - மனிதன் எல்லாம் ஓரினம். அவன் வாழும் உலகம் ஒரு பொதுச் சொத்து - CITIZEN OF WORLD - எனும் உன்னத பணியில் மின்னணுயியல் முன்னணியில் நிற்கிறது என்றால் மிகையாகாது. மின்னணுயியலையும் தமிழ்நாட்டையும் பொறுத்தவரை இதுவரை இருந்துவந்த தொழில் நீலையப் பற்றுக்குறை அரசாங்கம் அறிவித்துள்ள தனி 'மின்னணுத் தொழில் கூட்டு நிலையம்' அமையப் பெற்றவுடன் அறவே தீர்ந்துவிடும்.

[சென்னை நக்கீரர் கழகம் 29ஆம் தமிழ் விழா தொழில் நுட்ப வியல் கருத்தரங்கில் பேசிய பேச்சின் ஒரு பகுதி.]

With best compliments from :

R. NARAYANA IYER AND SON

EXPLOSIVES CONTRACTORS

Distributors for:

M/s. INDIAN EXPLOSIVES LTD.

FOR EXPLOSIVES & SAFETY FUSES

OLD PALLAVARAM POST MADRAS-43

Phone : 89670

ஊராட்சி ஒன்றிய முதற்பெண் ஆணையர்

கூடுவதென்ன?

‘பட்டங்கள் பெற்றுளச் சொன்ன பாட்டுப்
பாரதியின் வழியினிலே தாய்க் குலத்தில்
வட்டார வளர்ச்சிநல ஆள்வோராகி
வந்திருக்கும் ஜானகிக்கு வாழ்த்துரைப்போம்!’

— கவிஞர் பொன்னடியான்

‘‘என் உயர் அதிகாரிகள் என்னிடம் குறைகளைக் கண்டு என்னைக் கண்டிக்காமலும், என்கீழ் பணியாற்றுவோரிடம் என் மேலதிகாரிகள் குறைகளைக் காணுதவாறுமிருந்து செம்மையாக திறமுடன் பணியாற்றி என் பொறுப்பிலுள்ள ஒன்றியம் பல வகையாலும் வளர்ச்சிபெற முழு மனத்துடன் உழைப்பேன்’’ எனக் கூறுகிறார், திருமதி வி. ஜானகி.

திருமதி வி. ஜானகி யார்?

அவர் தாம் தமிழ்நாட்டின் ஊராட்சி ஒன்றிய முதற்பெண் ஆணையர். தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் இதுகாறும் ஆண்களே ஆணையர்களாக இருந்துள்ளனர். முதன்முதலாக, அப்பொறுப்பை ஒரு பெண் ஏற்றுக் கொண்டுள்ளார். அவரே இவர்!


1947ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட வாரியத்தில் கீழ்நிலை எழுத்தராகச் சேர்ந்த இவர், படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுத்தற்போது செங்கை மாவட்டத்திலுள்ள பூவிருந்தவல்லி ஒன்றியத்தின் ஒன்றிய இணை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு ‘முதல்’கள்

‘‘எனக்கு முதற் பெண் ஆணையர் என்ற பெருமையுண்டு.என் சகோதரி திருமதி வி. ஜீவரத்தினம் அவர்களுக்கு ‘முதல் பெண் நீரலை இசைக் கலைஞர்’ (ஜலதரங்க வித்துவான்) என்ற புகழ் உண்டு. எங்கள் குடும்பம் ஓர் இசைக் குடும்பம்’’ என்று உவகையுடன் கூறும் இவர், இன்றைய நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்த் துணையாளர்வரை உயர்வு வேண்டுமென்ற தம் உள்ளக் கிடக்கையை விநயமாகக் கூறுகிறார்.

நிண்டாட்டக் கணவர்

‘‘குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள இதுவரையில் எனக்குப் போதிய அவகாசமிருந்தும், வணிகத்தில் ஈடுபட்டுள்ள என் கணவர் திரு. வி. மதனகோபால் அவர்களுக்குச் சுவையாக உணவளித்துக்கொண்டே என் அலுவலைக் கவனித்துள்ளேன். இனி அவர்பாடு திண்டாட்டம்தான். ‘தம் மனைவி முதற்பெண் ஆணையர்’ என்ற மகிழ்ச்சியுடன், ‘அவளுக்குப் பல அலுவல்களுண்டு’ என்ற எண்ணத்தில் தம் வயிற்றை நிரப்பிக்



கொள்ளவேண்டியதுதான்'' என்று மனைவி கூறியதை அருகிலிருந்து செவிமடுத்த அவர் கணவரைக் காண்கையில், அவர் அவ்வாறே வாழ்ந்துவிடுவார் என்ற நம்பிக்கை தெளிவாகத் தெரிந்தது!

4க்குக் கிடைத்தது 41!

நான்கு சொற்களில் ஒரு சிறிய கேள்வியைக் கேட்டதற்கு 41 சொற்களில் அவர் கூறிய நீண்ட பதிலைப் படியுங்கள்:

''தாய்க்கும் மேலாக மருமக்களிடம் அன்பு செலுத்தும் மாமியார் இருக்கையில் எனக்கு என்ன குறை? அருமையான நான்கு மருமக்களில் இரண்டாவது இடத்தைப் பெறும் என்னிடம் அவ்வப்போது தங்கி, எங்களுக்கு வேண்டியவற்றை முகமலர்ச்சியுடன் செய்வார்கள். நாங்கள் கலப்புத் திருமணம் - காதல் திருமணம் அல்ல - செய்துகொண்டவர்களெனினும், மற்ற மருமக்களிடம் காட்டும் அதே அன்பை, அதேபரிவை என்னிடமும் தொடர்ந்து செலுத்தத் தவறியதில்லை.''

ஒன்றியங்களில் நிறைவேற்றப்படும் பற்பல திட்டங்களில் வேளாண்மைத் திட்டத்தையடுத்து, தம்மைப் பெரிதும் கவர்வது மகளிர் வளர்ச்சிப் பணிகளே என்று இவர் அறுதியிட்டுக் கூறுவதால், இவர் பொறுப்பிலுள்ள ஒன்றிய வாழ் ஆண்கள் சற்று முன்னெச்சரிக்கையாக இருந்து, ஆண்கள் முன்னேற்றத்திற்கும் வழி செய்துகொள்ள வேண்டும்:

அவரே சொல்கிறார்:

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்கோட்டையில் பிறந்த நான் உறையூரிலுள்ள 'மெதாடிஸ்ட் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புவரை கல்வி கற்ற பின்னர், திருச்சியின் கண்ணுள்ள 'ஹோலி கிராஸ் கல்லூரியில் இண்டர் மீடியட்' வரையில் படித்தேன்.

என் சகோதரியுடன் சென்னையைச் சுற்றிப் பார்க்க விடுமுறையில் வந்திருந்தபோது, எங்கள் உறவினரான ஓர் அதிகாரி என்னை அணுகி, விடுமுறையில் தற்காலிகமாக எழுத்தர் வேலையை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியதன்பேரில், சைதாப்பேட்டையிலுள்ள மாவட்டக் கழக (ஜில்லா போர்டு) அலுவலகத்தில் 1947ஆம் ஆண்டு வேலையில் சேர்ந்தேன்.

உயர்வோ உயர்வு!

மாவட்டக் கழகங்களின் கலைக்கப்பட்டபின், ஏப்ரல் 1961இல், பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் மேலாளராகப் பதவி உயர்வு பெற்றேன். 1966 முதல் சுமார் 2½ ஆண்டுகளுக்குச் சைதாப்பேட்டை கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் கணக்காகவும், பிறகு அங்கேயே பதவி உயர்வு பெற்று, செங்கைக் கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏறக்குறைய 1½ ஆண்டுகள் 'முதல் பெண் ஊராட்சித் தலைமை எழுத்தராகவும்' பணியாற்றினேன்.


பதவி உயர்வு பெற்றுச் செங்கை வந்தடைந்த நான், மீண்டும் ஆணையர் பதவி உயர்வு கிடைத்தே செங்கையைவிட்டு வெளியேறுகிறேன். அதுவும் 'முதற்பெண் ஆணையராக' என்று எண்ணுகையில் மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படுகின்றன.

— வி. ஜானகி





சென்னை உட்லண்ட்ஸ் விடுதியில் சனவரி 27இல் நடைபெற்ற வாழ்நாள் சாதனையாளர்கள் சங்க வெள்ளி விழாவில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி அவர்கள் தலைமை யேற்று விழா மலரை வெளியிட்டார்கள். உள்ளாட்சித் துறைச் செயலர் திரு. இ.சி.பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ். அவர்கள் முதல் மலரைப் பெற்றார்கள்.



தமிழ்நாடு வேளாண்மை & மீனள அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் செங்கை மாவட்டம் செம்பரம்பாக்கத் தில் மீன்வள நெய்யும் ஒரு பொறியை இயக்கி வைத்தார்கள்.



காவிரி ஆற்று நீர்ப் பங்கீடு தொடர் பாகப் புது டில்லிக்குப் புறப்படும்முன் மாண்புமிகு முதலமைச்சர் 17-1-1970 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் மாநாட்டைக் கூட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களைப் பாகிஸ்தான் தூதுவர் திரு. ஐதர் 5-2-1970 அன்று சந்தித்தார்:





அரிசன நல வாரத்தை ஒட்டிச் சென்னை வியாசர்பாடியில் சாலை அமைக்கும் பணியை 31-1-1970 அன்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தொடங்கி வைத்தார்.

சேலம் நகராட்சி, சாமிநாதபுரம் ஐந்தாவது வட்டத்தில் 6 பர்லாங் நீளமுள்ள சாலை அமைக்கும் பணியில் நகராட்சித் தலைவர் மற்றும் திருமதி கமலம் மாணிக்கம் முதலியோர் ஈடுபட்டனர்.







அண்ணு நினைவு நாளன்று அமைச்சர்கள் ஊர்வலமாகச் சென்று அண்ணுவின் கல்லறைமீது மலர் வளையம் இட்டு அஞ்சலி செய்தனர்.

பேரறிஞர் அண்ணு

தோற்றம் 15-9-1909

மறைவு 3-2-1969



ஒளிமயமான எதிர்காலம்

கே. ஆர். இராதாகிருட்டிணன்,
(தலைவர், தமிழ்நாடு மின்வாரியம்)

தமிழ் நாட்டின் பரப்பளவு 50,020 சதுர மைல்கள் (129,901 சதுர கிலோ மீட்டர்கள்) தமிழ் நாட்டில் உள்ள நகரங்கள் 341. மக்கள் வதியும் கிராமங்கள் 14,124. அத்துடன் குக்கிராமங்கள் (Hamlets) 42,000 உள்ளன. தமிழ்நாட்டின் மக்கள் தொகை 35 மிலியன்கள். இவற்றில் சுமார் 75 சதவிகித மக்கள் கிராமங்களில் வதிகின்றனர். நாட்டின் மற்ற மாநிலங்களைப் போலவே, தமிழ் நாட்டிலும் கிராமங்களுக்கு மின் வசதி வழங்குதல் சமுதாய மேம் பாட்டுப் பணிகளில் மிகமுக்கியமான ஒன்றாகும். உணவு உற்பத்தியினைப் பெருக்குதல், கிராம மக்களுக்குவேலை வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல், மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு வழிகோலுதல், இவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, சமுதாயம் ஒளிமிக்கதாகத் திகழ, கிராமப் புறங்களுக்கு மின்வசதி வழங்குதல் நிலைக்களனாகத் திகழ்கிறது. தமிழ் நாட்டில் பெரிய வற்றாத உயிர் நதிகள் இல்லை. ஆகவே, விவசாயிகள் இறைவைப் பாசனத்தையே பெருவாரியாக நம்பி வாழ்கின்ற நிலை உள்ளது. இறைவைப் பாசனத்தில் மின்சாரத்தின் பங்கு மிக முக்கியமானது என்று சொல்லத் தேவையில்லை. உணவு உற்பத்தியில் மின்சாரத்தின் முக்கியத்துவம் ஊரறிந்த உண்மை. ஆகவே, கிராமப் புறங்களுக்கு மின் வசதியை உடனடியாக, மிகவும் வேகமாகக்கொண்டு செல்லவேண்டியது மிக மிக அவசியமாகிறது. அப்படிச் செய்யவில்லையெனில், கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டினை நாம் அடையமுடியாது. இவற்றை யெல்லாம் மனத்தில் கொண்டு கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில், தமிழ் நாடு மின் வாரியம் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த மூன்று திட்டக்காலங்களில் தமிழ் நாட்டில் இத்துறையில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் பிரமிப்பூட்டுவதாக அமைகிறது. இத்துறையில் தமிழகம் ஏறு நடை போட்டுள்ளது என்பதைப் புள்ளிவிவரங்கள் பறை சாற்றி நிற்கின்றன :

1971 டிசம்பருக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி

	மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், குக்கிராமங்கள்	மின்வசதி பொருத்தப்பட்ட பம்புசெட்டுகள்
முதல் திட்ட ஆரம்பக் காலத்தில்	1,813	14,373
முதல் திட்டக் காலத்தில்	1,900	18,000
இரண்டாவது திட்டக் காலத்தில்	6,600	84,000
மூன்றுவது திட்டக்காலத்தில்	11,000	1,33,000
1966 முதல் 1969 வரை	9,627	1,47,161
1-1-1970இல் உள்ள நிலை	33,941	4,55,400

[341 நகரங்களையும் சேர்த்து]

மாநிலத்தில் உள்ள 14,124 கிராமங்கள், 42,000 குக்கிராமங்களில், 10,042 கிராமங்கள், 23,575 குக்கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் 4,000 கிராமங்களுக்கும், 19,000 குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட வேண்டியுள்ளது. 1971 டிசம்பருக்குள் மிச்சமுள்ள கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிப்பதற்கான திட்டத்தினை மின்வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த இலட்சியத்தை அடைந்தே தீருவது என்ற நோக்குடன் இத்திட்டமானது தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல இடங்களில் இப்படி மின்வசதி அளிப்பதினால் மின் வாரியத்திற்கு நிதி ஆதாயம் ஒன்றும் இல்லை. இருந்தாலும், இது செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்று; மக்களின் நன்மை தான் முக்கியம்; அதை நிறைவேற்றுவதுதான் தலையாய கடமை என்ற சேவா உணர்வுடன் மின்வாரியம் பணியாற்றுகிறது. தமிழகத்தின்மூலை முடுக்குகளிலெல்லாம் மின்சாரத்தைக்கொண்டு சென்று, மக்கள் நல் வாழ்வு வாழ, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரப்பாடுபடுவதென உறுதி கொண்டுள்ளோம். ஏழையின் சிரிப்பில்தான் இறைவன் இருக்கின்றான்! எல்லாக் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்வசதி வழங்கப்பட்டுவிட்டால், மாநிலத்தின் எல்லா இடங்களுக்கும் மின்சார வசதி கிடைக்க வழிகோலியதாகும். அது மட்டுமல்ல; மின்சாரக் கட்டணமும் வெகுவாகக் குறைந்துவிடும். பிற்காலத்தில், குறைந்த கட்டணத்தில் மேலும் திட்டங்களைத் தீட்டி மின் வாரியம் செயல்பட முடியும்.

1972க்கு முன்னால் தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டால், இது போன்ற நல்ல பணிகள் நடைபெற வழிவகுக்கப்படும்.

தமிழ் நாட்டில் உள்ள 9 இலட்சம் நீர்ப்பாசனக் கிணறுகளில் 4,55,400 கிணறுகளுக்கு இதுவரையில் மின்சாரப் பம்பு செட்டுகள் பொருத்தப் பட்டுவிட்டன. இந்தக் கிணறுகளின் மூலம் 12·50 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யமுடியும் என்றும் சுமார் 6·25 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யமுடியும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் இந்த வேகத்தை அதிகப்படுத்தி, மேலும் தீவிரமாக இந்தப் பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றுவதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கிணறுகளுக்கு மின் வசதி யேற்றங்கோரப் பொருத்துவதில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 50,000 மின் வசியேற்றங்கள் பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பாரதநாடு முழுவதிலுமாக 31-3-1969-இல் மொத்தம் 10·68 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்வசதி பொருத்தப்பட்டது. இதில் தமிழ் நாட்டில் மட்டும் 4·02 இலட்சம் பம்பு செட்டுகள் உள்ளன. கிராமங்களுக்கு மின்வசதி வழங்குதலில் பாரதத்

திலேயே தமிழ் நாடுதான் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது. எந்த மாநிலமும், இத்துறையில் தமிழ் நாட்டை மீறமுடியாது என்ற நிலை நமக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

கிராமப்புறங்களுக்கு மின்வசதி வழங்கத் தேவையான நிதிகள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், நிறுவனங்களிடமிருந்து நிதிகள்பெறுவதன்மூலம் பெறப்படுகிறது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைத்தரணியில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விரைவுத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடிமுனைக் குழாய்க் கிணறுகள், சாதாரணக் கிணறுகளுக்கு மின்வசதி பொருத்துதலே இவ்விரைவுத் திட்டமாகும். 1-1-1970 வரை மின்வாரியத்தினுல் 2534 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 920 சாதாரணக் கிணறுகளுக்கு மின்வாரியத்தின் பிரதேசத்தில் மின்வசதி வழங்கப்பட்டுள்ளது. இதனுல் மின்வாரியத்திற்கு நிதி ஆதாயம் இல்லையென்றாலும் உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்றநோக்குடன் இத்திட்டத்தினை மின்வாரியம் செயல்படுத்துகிறது.

கிராமப்புறங்களுக்கு மின்வசதி என்பதுபற்றிச் சொல்லும்பொழுது, இன்னொரு முக்கிய அம்சத்தையும் குறிப்பிடவேண்டும். விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த கட்டணவிகிதத்தில் மின்சாரம் வழங்குவதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. ஒரு யூனிட்டுக்கு 10 காசு, என்ற அளவில் தமிழ் நாட்டில் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அகில இந்தியாவுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதம் 12 காசு. ஆக, அதைவிட இரண்டு காசு குறைவாகவே தமிழ் நாட்டில் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் உள்ளது. விவசாயிகளுக்குக் குறைந்த கட்டண விகிதத்தில் மின்சாரம் வழங்குவது மட்டுமல்லாமல், இலவசமாகவே பழுது பார்க்கும் வசதிகள், கிணறுகள் வறண்டு போனுல் கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிடுதல், மின்சாரத் தொடர்பினை மறுபடியும் புதுப்பிக்க வசூலிக்கும் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல் போன்ற பல வசதிகளையும், தமிழ் நாடு மின்வாரியம் செய்து தந்துள்ளது.

பம்பு செட்டுகளுக்கு மட்டுமல்லாமல் வேறு பல காரியங்களுக்கும் கிராமப்புறங்களில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. நெல் அறைத்தல், கரும்பு அறைத்தல், எண்ணெய் ஆட்டுதல், சிறு தொழில் பணிமனைகள், சினிமாக் கொட்டகைகள், பருத்தி நூற்றல் மற்றும் இது போன்ற பல்வேறுபட்ட காரியங்களுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் மின்சாரத்தினுல் பயன்பெறும் சிறு தொழில்கள் இது போன்று 90,000 உள்ளன.

கிராம மக்களுக்குப் பயன் அளிக்க, கிராமத் தொழில்களை ஊக்கி வளர்க்க, தமிழ்நாட்டில் மேற்கண்ட மூன்று இடங்களில் கிராமத்தொழில் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன :

1. செங்கை மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் கிராமத் தொழில் திட்டம்.

2. சேலம் மாவட்டத்தில் ஓமலூர் கிராமத் தொழில் திட்டம்.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி கிராமத் தொழில் திட்டம்.

இந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்களில், குக் கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பது, முதன்மையானதாகக் கருதப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணியுடன் மின்வாரியத்தின் பணி நின்றுவிடவில்லை. அரிசன மக்களின் வாழ்வினிலே ஒளிமிகுந்த எதிர்காலத்தினை உருவாக்குவதிலும் மின் வாரியம் தன் பங்கினை ஆற்றி வருகிறது. கிராமங்களைச் சுற்றியுள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவதில் மின்வாரியம் தனி அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. 31-3-1969 முடிய 3,284 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மேலும் 500 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம்வழங்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

1957-58இலிருந்து அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கத் தமிழக அரசு 1·55 இலட்சம் ரூபாய் நிதிப்பு மானியம் ஆண்டுதோறும் அளித்து வந்துள்ளது. 1968-69இல் இத்தொகை 7·50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

இன்று எங்கு நோக்கினும் மின்சாரத்தின் பயனை மக்கள் நுகர்ந்து வருகின்றனர். மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே இன்று வெகு வேகமாகப் பரவிவிட்டது. எங்கு சென்றாலும், நகரமானாலும் சரி, கிராமமானாலும் சரி, எல்லோரும் எங்களுக்கு மின்வசதி தேவை என்று ஒருமித்த குரலில் குரலெழுப்புகின்றனர். விவசாயியாகட்டும், தொழிலதிபர்களாகட்டும், ஏன், இல்லத்தரசிகளும் இன்று மின்சாரம் தேவை என்கின்றனர்!

கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில் சீரிய சாதனையைத் தமிழ் நாடு மின்வாரியம் செய்துள்ளது. இந்தத் துறையில் செய்யப்படும் பணிகள், தீட்டப்படும் திட்டங்கள் பெருமைப்படத் தக்கவையாகும். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும்; 1972 துவக்கத்தில் மின்சார வசதி இல்லாத கிராமமோ, குக்கிராமமோ தமிழகத்தில் இல்லை என்ற நிலை ஏற்பட, இந்த இலட்சியம் ஈடேற, மக்களின் வாழ்விலே ஒளிமயமான எதிர்காலத்தைச் சமைக்க, தமிழ் நாடு மின்வாரியம் அமைதியாக, ஆனால் வெகு வேகமாக, இலட்சிய உணர்வுடன் பணியாற்றி வருகிறது; பணியாற்றிவரும்.

கூட்டுறவுத் தொடர்பான படங்களுக்குரிய விளக்கங்கள்

கிராமப் பெரு மக்களில் 90 சதவீதத்தினரும் உழவர்குடியில் பிறந்தோரில் 45 சதவீதத்தினரும் வேளாண்மைக் கூட்டுறவுகளால் பெரிதும் பயனடைகின்றனர்.

மீனவர்களுக்குக் கடன் வசதிகளை அளிப்பதற்காகவும் நாட்டின் மீன் வளத்தை நவீன முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் மீன் பிடிப்புக் கூட்டுறவுகள் நிறுவப் பட்டன. 1948ஆம் ஆண்டில் 1599 மீன் பிடிப்புக் கூட்டுறவுகளே இருந்தன. இவை 1965-66இல் 3328 ஆக உயர்ந்தது.

நம் உழவர் பெருமக்களுக்குப் பல பிரச்னைகள் உள்ளன. அவர்களுக்கு உரங்கள், தரமிக்க விதைகள், உழுபடைக் கருவிகள், பாசன வசதிகள் போன்றவை பெரிதும் தேவைப்படுகின்றன. இவற்றை எளிதாகப் பெறுவதற்குக் கூட்டுறவு ஒன்றே சிறந்த வழி.




* தோலை நீக்கியவுடன் சர்க்கரை வள்ளிக்கிழங்கும் ஆப்பிளும் கருமை நிறமாகி விடுகிற தல்லவா? அ தை த் தடுக்க, அவற்றை உடனே உப்புநீரில் வையுங்கள்; கருமை நிறம் காத தூரம் சென்றுவிடும்.

* அ லு மி னி ய ப் பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றிக் கலக்காதீர்கள். வெள்ளைக் கரு, கருப்பாகிவிடும்.

* குளிர் காலங்களில் தேன், சர்க்கரைக் கட்டி போலாகி விடும்; சில நேரங்களில் பசை போலுமாகிவிடும். எ ன் ன செய்யலாம்? இதைச் செய்யுங்கள்: வெதுவெதுப்பான நீருள்ள பாத்திரத்தில் தேன் பாட்டிலை வைத்து, சிறிது நேரம் அடுப்பின் மேல் வெப்பப்படுத்துங்கள். பிறகு குளிரவிடுங்கள். பிறகு பார்த்தால், தேன் தேனாகவே யிருக்கும்!

* பாத்திரங்கள் கறை படிந்தும், அழுக்கேறியும் பார்க்கச் சகிக்க வில்லையா? இதோ ஒரு வழி, சாதாரண உப்பைப் பாத்திரத் தில் தெளித்து, அடுப்பில் சிறிது காண்பியுங்கள். பின்னர் காகி தத்தைக் கொண்டு, பாத் திரத்தைத் துப்புரவாக்கி, நீரில் கழுவுங்கள். பாத்திரத்தில் உங் கள் முகத்தைப் பார்த்துத் திலக மிட்டுக்கொள்ளலாம். நீங்கள் அழகாய் இருந்தால், உங்கள் எழில் வதனத்தைப் பாத்திரத் தில் கண்டு ரசிக்கலாம்.

* மறைகள், சுறைகள், ஆணிகள் துருப்பிடித்துக் கொண்டிருக்கின் றனவா? கவலையை விடுங்கள். சப்பாத்துகள், செருப்புகளுக்குப் பூசப்படும் 'பாலிஷ்' காலி டப்பி களில் அவற்றைப் போட்டு வையுங்கள். துருப்பிடிப்பதில்லை. 'பாலிஷ்' டப்பிகளில் எஞ்சி யுள்ள சிறிய அளவு 'பாலிஷ்' தருவை அண்ட விடுவதில்லை போங்கள்!





(1)

நல்ல பாதையில் நமது கால்கள்
நடக்க வேண்டுமடா - தம்பி
நடக்க வேண்டுமடா
நாளும் நமது கைக ளிரண்டும்
உழைக்க வேண்டுமடா - உலகில்
உழைக்க வேண்டுமடா

(2)

உள்ளம் என்றும் பிறருக் காக
உருக வேண்டுமடா - தம்பி
உருக வேண்டுமடா
உருகும் நெஞ்சம் முடிந்த வரையில்
உதவ வேண்டுமடா - பிறர்க்கு
உதவ வேண்டுமடா

(3)

வழியில் கிடக்கும் முள்ளை அகற்றும்
மாண்பு வேண்டுமடா - தம்பி
மாண்பு வேண்டுமடா
பழியைக் கண்டு அஞ்சு கின்ற
பண்பு வேண்டுமடா - தூய
பண்பு வேண்டுமடா

(4)

சிட்டுப் போலச் சுறு சுறுப்பாய்த்
திகழ வேண்டுமடா - தம்பி
திகழ வேண்டுமடா
தீமை வந்தால் அதனை வெல்லும்
திறமை வேண்டுமடா - நல்ல
திறமை வேண்டுமடா

(5)

கற்கும் வயதில் கல்வி தனிலே
கருத்து வேண்டுமடா - தம்பி
கருத்து வேண்டுமடா
கற்ற பின்னே கடமை செய்து
சிறக்க வேண்டுமடா - வாழ்வில்
சிறக்க வேண்டுமடா

(6)

உயிரின் மேலாம் தமிழைக் காக்கும்
உணர்வு வேண்டுமடா - தம்பி
உணர்வு வேண்டுமடா
உன்தாய் நாட்டை உயர்த்தும் வகையில்
ஊக்கம் வேண்டுமடா - மிகவே
ஊக்கம் வேண்டுமடா

(7)

அறிவு கொண்டு புதுமை செய்யும்
ஆற்றல் வேண்டுமடா - தம்பி
ஆற்றல் வேண்டுமடா
அறிஞர் வழியில் நின்று நலங்கள்
அடைய வேண்டுமடா - இன்பம்
அடைய வேண்டுமடா!


புதிய நெல்

'ஐ.ஆர்-8' ஆடுதுறை-27 ஆகிய இரண்டு வித்துக்களையும் ஒன்று சேர்த்து ஒரு புதிய நெல் இனத்தைத் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை உருவாக்கியுள்ளது.

— 'யோஜனை'

கூட்டுறவு:

கூட்டுறவு நாடு



— பி. வி. கிரி —

கூட்டுறவு இந்தியாவில்மட்டுமல்ல, உலகநாடுகள் பலவற்றிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'கூட்டுறவே நாட்டுயர்வு' போன்ற திருவாசகங்கள் எத்தனை உண்மை என்பதை நாம் சில விவரங்களால் அறியலாம்.

அமெரிக்கா: 1933ஆம் ஆண்டு முதல் தொழிலாளர்களுக்கும் நீர்வாகத்தினருக்கும் இடையே கூட்டுறவு வலுத்து வருகிறது. இது தொழிலாளர்களுக்கு இனிமை சொல்ல முடியாத அளவு முன்னேற்றத்தை அளித்திருக்கிறது. 1933-ஆம் ஆண்டில் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 இலட்சம் தான். ஆனால் இன்றோ, ஏறத்தாழ 1.5 இலட்சம் தொழிற்சங்க உறுப்பினர்கள் உள்ளனர்.

இங்கு, கிராமங்களுக்குத் தேவையான மின் விசையில் பெரும் பகுதியை விவசாயிகளுக்குச் சொந்தமான கூட்டுறவு நிறுவனங்கள் விநியோகிக்கின்றன.

சோவியத் யூனியன்: சோவியத் ஆட்சியின் முதலாண்டுகளின் போதே விருப்பத் தேர்வான அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல்வேறு விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளும் தோன்றிவிட்டன. சிறு உற்பத்தியாளர்கள் - ஏழை விவசாயிகள் மத்தியதர விவசாயிகள் - அவற்றில் உடனே சேர்ந்தனர்.

கூட்டுப்பண்ணைகள் தமது உபரிப் பொருள்களைச் சந்தையிலோ அல்லது கூட்டுறவு வர்த்தக நிறுவனங்களுக்கோ விற்கமுடியும். தேவையான வேளைகளில் கூட்டுப் பண்ணைகளுக்கு அரசு, நிதிகளையும் விதைகளையும் கடனுதவி வழங்குகிறது. குறிப்பிட்ட சில வேளைகளில் கூட்டுப் பண்ணைகள் அரசிடமிருந்து இலவச மானியங்களும் பெறுகின்றன. பாங்குகளும் கூட்டுப் பண்ணைகளுக்குக் கடன்களை வழங்குகின்றன.

பிரிட்டன்: இங்கிலாந்திலுள்ள ராக்டேலில் 1844ஆம் ஆண்டில் கூட்டுறவு வர்த்தகச் சங்கம் நிறுவப்பட்டது. இதுதான் உலகில் முதல் முதலாகத் தோன்றிய கூட்டுறவுச் சங்கம். இன்று பிரிட்டனிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக நூறு கோடிப் பவுன்கள் பெறுமானமுள்ள பொருள்களை விற்பனை செய்கின்றன. அவை இலாபங்கருதா நிறுவனங்கள். கூட்டுறவுச் சங்கங்கள், பொதுவாகத் தனியார் முறையில் உற்பத்தியாகும் பொருள்களையே கொள்முதல் செய்கின்றன. ஆனால், ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம் தொழிலுற்பத்தியிலும் ஈடுபட்டிருக்கிறது. சுமார் 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ள இந்தச் சங்கம் பல பொருள்களைத் தயாரிக்கிறது.

சுவீடன்: கூட்டுறவு இயக்கம் தொடங்கியது சுவீடனில்தான். அங்கு அது வெற்றி பெற்றதாலேயே உலகெங்கும் கூட்டுறவுக் கொள்கைகள் பரவின. சுவீடனில் நடுநிலையான அரசியல் நிலைக்கும், பொருளியில் மேம்பாட்டுக்கும் அடிப்படை அந்த நாட்டின் கூட்டுறவு முறையே என்று கூறலாம். பல பெரிய தொழிற்சாலை

கள் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. சில்லறை வியாபாரத்தில் பெரும்பகுதி இந்த இயக்கத்தினருடைய 'கான்சம்' என்ற சுடைகளால் நடத்தப்படுகின்றன. தொழிற்சாலைகளில் உணவு விடுதிகளாவும் கூட்டுறவு முறையிலேயே நிகழ்கின்றன. கூட்டுறவுமூலம் பல்லாயிரம் வீடுகளைக் கட்டிக் குறைந்த வாடகைக்கு விடுவதும் முதல் தடவையாகச் சுவீடனில்தான் கையாளப் பெற்றது.

இந்நியா: இந்தியத் துணைக் கண்டத்தில் கூட்டுறவு இயக்கம் 1904 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பொருளாதாரத் துறையில் தன்னிறைவு நிலையை எய்துவதற்கு எனச் சுதந்திர இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு இயக்கத்திற்கு முன்னுரிமை இடம் அளிக்கப் படுகிறது.

1950-51க்குப் பிறகு கூட்டுறவு நிறுவனங்களின்மூலம் விவசாயச் செலவுகளுக்கெனக் கடனுதவி வழங்கப் பட்ட தொகை 1965-66 இறுதிக்குள் ரூ. 400 கோடி என்ற அளவை எட்டியது.

1955-56இல் 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்மட்டுமே இருந்தன. பத்து ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 55 ஆக உயர்ந்தது. தற்போது 73 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நாட்டின் மொத்தச் சர்க்கரை உற்பத்தியில் 30 சதவிகிதத்துக்கும் அதிகமாகக் கூட்டுறவு ஆலைகள் உற்பத்தி செய்கின்றன.

1965-66 இறுதிக்குள் சுமார் 5,500 கூட்டுறவுப் பண்ணைகளின் மூலம் கூட்டுறவுப் பண்ணை முறை அறிமுகப் படுத்தப்பட்டது. புதிய பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. விவசாயத்துறை வளர்ச்சிக்கு நீர்ப் பாசனக் கூட்டுறவுகள் பெருமளவில் உதவியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்றுடத் தேவைகளை நியாய விலையில் வழங்குவதற்காக வாடிக்கையாளர் கூட்டுறவுகள் செயல்படுகின்றன. 1965-66 இறுதியில் 13,000 வாடிக்கையாளர் கடைகளும், 276 மொத்த விற்பனை நிலையங்களும், 14 மாநில வாடிக்கையாளர் கூட்டுறவுக் குழுமங்களும், ஒரு தேசிய வாடிக்கையாளர் கூட்டுறவுக் குழுமமும் இருந்தன.

தற்போது நாட்டில் 11,765க்கு மேற்பட்ட வீட்டு வசதிக் கூட்டுறவுகள், 3,393 மகளிர் கூட்டுறவுகள் இருக்கின்றன.

கூட்டுறவுத் தொடர்பான படங்களுக்குரிய விளக்கங்கள்

உற்பத்தியைப் பன்மடங்குப் பெருக்குதற்காக உழவர்களுக்கு உதவுவது எவ்வளவு அவசியமோ, அத்துணை முக்கியம் உற்பத்தியான பொருட்களை ஆதாயமான விலைக்கு விற்பனை செய்வதும்.

1965-66இல் ரூ. 340 கோடி மதிப்புள்ள வேளாண்மை பொருட்கள் கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக விற்பனையாயின. ஆனால் 1950-51இல் ரூ. 247 கோடி மதிப்புள்ள விளை பொருட்கள் மட்டுமே விற்கப்பட்டன.

கூட்டுறவு

மனசை ப. கீன்

இதயம் கவரும் மெல்லிசையும்
எல்லாக் கருவி ஒழுங்காக
அதனின் அதனின் தகவோடே
அமைந்தால் அன்றே உளங்கவரும்?
நிதமும் மிகவும் துல்லியமாய்
நேரம் காணக் கடிகாரம்
உதவி புரியச் சக்கரமும்
உறுப்பும் இயைதல் வேண்டாமோ?

கோவின் மாண்பும் உயர்ந்தோங்கக்
கோவில் பெருமை நெடிதோங்கக்
காவின் சிறப்பும் ஒளிர்ந்தோங்கக்
கவிஞர் பெரிய யாணைகளும்
யாவின் பீடும் இனிதோங்க
எங்கும் நிரையாய்ப் பலகூடி
மேவின் மிகவும் காப்புறவே
விழிப்பாய்க் கூடி உறவாடும்!

உள்ளக் கடலின் மீனன
உயர்ந்த கருத்தை வடித்திடவும்,
தெள்ளத் தெளிந்த கருத்தின்நூல்
தேர்ந்து பிடித்துப் படித்திடவும்
கொள்ளும் கையின் விரலேந்தும்
கூடி உறவாய் இயங்காவோ?
விள்ளற் கரிய உயர் மளிதன்
விளங்கத் தேவை கூட்டுறவே!

பெரியார் அவர்கடளுன் குடும்ப நலத்திட்டம்பற்றி :



பெரியார் டாக்டர் சந்தீரசேகர் உரையாடல்

தமிழர் தந்தை பெரியார் அவர்கள் பல்லாண்டுச் சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு அத்துறையில் வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள். அண்மையில் சென்னைக்கு வருகை தந்திருந்த மத்திய அரசு குடும்பநலத் துறை இணை அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் தேசிய குடும்பநலத்திட்டம்பற்றிப் பெரியார் அவர்களைப் பேட்டி கண்டார். அந்தச் சுவையான உரையாடலை நாமும் அறிந்து கொள்வோமே?

டாக்டர் சந்திரசேகர் : குடும்ப நலத் திட்டப் பிரச்சாரப் பணியில் தாங்கள் ஒரு சிறந்த வழி காட்டியாக விளங்குகிறீர்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால் தாங்கள் முதன்முதலாக 1928லேயே குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டு இருந்தீர்கள். இந்தப் புத்தகத்தை எழுதவேண்டும் என்ற கருத்து அப்போதே எப்படித் தோன்றியது என்று கூறினால் பரவாயில்லை.

பெரியார் : எனக்குச் சின்ன வயதிலேயே ரொம்ப செல்லப் பிள்ளை மாதிரி எல்லாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. அதிலே எனக்குக் கொஞ்சம் ரொம்ப வேகமான கருத்துக்களெல்லாம் தோன்றும். அது தப்பு, இது தப்புன்னு கருத்துக்களெல்லாம் எனக்குத் தோன்றும். அவற்றை நான் சாதாரணமா, தைரியமா வெளியிடுவேன். அந்த முறையிலே மத சம்பந்தமா, இலக்கிய சம்பந்தமா, அது, அது சம்பந்தப் பட்டவங்கிட்ட வாதாடி வாதாடி ஒரு மாதிரி, பொதுவா சொன்னா, ஒரு வாயாடி என்ற நிலைமைக்குப் பேரு வர்றபடி வாதாடிட்டு இருந்தேன். அதே போக்குலே தான் மக்களண்டை பழகறபோது இந்தப் புள்ளகுட்டி அதிகமா பெத்துக்கிட்டு இருக்கிறவங்க படற கஷ்டம், நம்மகிட்டேவந்து முறையிடுற முறை, புருஷன் பெண்சாதி சண்டை போட்டுக் கிட்டா வர்ற கலவரம் அதுகளெல்லாம் நான் சிரியஸா கவனிக்குறபோது இந்தப் புள்ளங்களாலே பெரிய தொல்லைப் படறுங்க. இயற்கையா இருக்கிற தொல்லை தவிரப் புள்ளை குட்டிங்களாலும் வேற தொல்லைப் படறுங்க. வேடிக்கையாச் சொல்றேன். குடியரசு ஆபீஸிற்கு எதிர்த்தாப்லே ஒரு வீடு - குடித்தனக்காரர் வீடு. அவங்க நம்ம ஜாதியில்லை. எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு மாதிரியான முறை. அண்ணன் தம்பி, மாமன்

மச்சான்னு கூப்பிடுவோம். அந்த முறையிலே எதிர்த்த வீட்டுக்காரன் ஒருத்தன்; அவன் எனக்கு மாப்பிள்ளையா வேணும். அவன் மனைவிக்கு நான் அண்ணி வேணும், இந்த மாதிரி இருக்கும். அவனுக்கு நாலு குழந்தை. கைக் குழந்தை ஒண்ணு. அந்த நிலையில் அவன் கோவம்வந்து பெண்டாட்டியைப் போட்டு அடிச் சுப்புட்டான். அப்போ நான் இங் கிருந்து சி பா ரி சு க் குப்போ ய், என்னடா இந்த மாதிரி பண்றியே, கொல்றியே; குழந்தை குட்டிகளுக்கு இந்த மாதிரி பண்றியே அப்படின்னு ரொம்பக் கடினமா கேட்டதுக்கு 'இதைப்பத்தி எல்லாம் நீ கேக்கா தேங்கிங்ற' அளவுக்கு வந்துட்டான், அந்தச் கோவத்திலேலே, அந்தம்மா அழுதுபுட்டுச் சொல்றபோது ஒரு வார்த்தை சொன்னு; இந்த மாதிரி இவருகிட்டே இன்றைக்கு நேத்திக் கல்ல நான் படற அவஸ்தை,கொஞ்ச நாளாவே ஒ தை தின்னுதின்னு எனக்கு ரொம்ப வேதனையாய்ப் போச்சு. அதனுலே போயி எங்கா வது ஆத்துலே குளத்திலே இறங்கிட லாம்னு முடிவு. இதுகளே வச்சுக் கிட்டு நான் என்ன பண்ணட்டும்? நான் ஒருத்தி விழறதா இருந்தா, இதுங்க கதி என்னவாகும். இல் லாட்டா இதுங்களையும் தள்ளிப் போட்டுட்டல்ல நான் விழவேணும். இந்தக் கொலைக்கு நான் ஏன் பாசப் படணும்னு இ ந் த ஆளுகிட்ட உதை திண்ணுக்கிட்டிருக்கேன்? இல் லாட்டா நான்போய் விழுந்திடுவேன் ஆத்திலே, அப்படின்னு அ வ ள் சொன்னுள். வாய்த் துடுக்கு முறையிலே 'சரி ஏண் இப்படிப் பெத்தே நீ? உன்னை யாரு இவ்வளவு பெத்துக்கச் சொன்னு? பெத்துக்கிட்டியே, வேதனைப் படறியே' அப்படினேனேன். அப்போ அந்த அம்மா பேச்சோடே பேச்சா அது நம்மா செயலில்லேன்னு; 'அது பகவான் செயல். அப்படிப் பண்ணிட்டது. நான் என்ன பண்ணட்டும்' அப்படின்னு சொன்னு. அப்பத் தான்அந்த பகவான் செயலே முறிச் சுப் போட்டு நான் அன்னிக்கே வந்து எழுதியிருக்கிறேன். இந்த மாதிரி குழந்தைகளைப் பெத்துக்கிட்டு சங் கடப் படறுங்க. இப்படிக் கிணத் துலே விழுந்துடத் துணிஞ்ச பொம் பளைகூட 'இந்தப் புள்ளைகளை வெச்சுக் கிட்டு, எப்படி நான் விழுகிறது இதையும் போட்டுட்டு விழுகிற துன்னு புள்ளையைக் கொல்றதுன்னு எனக்கு இதா இருக்குதேன்னு வீச னப்படறு'ண்ணு வேடிக்கையா அப்ப வந்தது தான். வந்ததுக்கப்புறம் நாம சீரியஸா எழுதிட்டு இருந்தமா. பிரிட்டிஷ் நியூஸிலே வந்தது இந்தச் சங்கதி, இங்கிலிஷ் பத்திரிகையிலே! அதை எடுத்துத்தான் எழுதிகிட் டிருக்கேன். நம்ம கருத்துக்குச் சரியா இருந்தது. அப்ப எங்கிட்ட இருக்கிற கிளார்க் ஒருத்தர் கொஞ் சம் இங்கிலிஷ் தெரிஞ்சவர். அவரு கிட்டே சொன்னேன். இ தை மொழி பெயர்த்திடலாம்னு. அதைத் தான் முதல்முதல்லே அப்படியே எண்ணம் வளர்ந்து போச்சு. எனக்கு முதல் மனேவியாயிருந்த நாகம்மைக்கு கல்யாணமாய் கொஞ்ச வருஷம் ஆனவுடனே ஒரு குழந்தை பொறந்து செத்துப் போச்சு. அந்தக் குழந் தையை தான் பார்க்கவும் இல்லே. ஐந்து மாதம் ஆச்சு. ஐந்து மாசமா நான் அதை பார்க்கக்கூடவில்லே. எனக்கு அவ்வளவுதான். மறுபடியும் அந்தம்மாகிட்டே சொன்னேன். எனக்கு கு ழ ந் தை இல்லேன்ற பேச்சே நாம வைச்சுக்கக்கூடாது இங்கே; அப்படி இப்படின்னு அந் தம்மா கெஞ்சுவாங்க. ஒரு புள்ளே மாத்திரம் இருக்கட்டும். வே று இல்லாட்டிப் போகட்டும். நம்ம குடும் பத்துக்கு ஒன்னென்ன, நூறு புள்ளே நாம எடுத்து வளர்த்துடலாம்னு சொன்னேன். அதனுலேயே ரெண்டு மூணு புள்ளே வளர்த்தேன். அதுக்கு நான் ரொம்பவும் உபதேசம் பண்ணினேன். நம்மளுக்கு கு ழ ந் தை வேண்டாம்னு. அப்படியே அந்த எண்ணம் வளர்ந்தது. அ ந் தக் குழந்தை பெக்கறது ஒரு நியூ சன்ஸ்ன்னு எனக்குப் பட்டது.என்னே இராமேஸ்வரத்துக்கெல்லாம் கூட் டிக்கிட்டுதான் வந்தாங்க, குழந்தைக் காக. ஆமா எங்க ஊரிலேகூட கணபதி அரசமரம், வேப்ப மரம், கல்யாண மரம் இதெல்லாம் பண் ணிருக்காங்க. எனக்குப் புள்ளே வேண்டாம்றது அப்படிப் பழகிச்சு. அதுஎன்னவோபிராக்டிகலா ரொம்ப வளர்ந்து போசீசு, அந்த எண்ணம்.

டாக்டர் சந்திரசேகர்: அந்தக் காலத் தில்குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்ன

மாவது எதிர்ப்பு இருந்திருக்கும் இல்லியா?

பெரியார்: எங்க ஜனங்க சொல்வாங்க. அவனுக்குப் புள்ளேயில்லே, அதனாலே அவன் எல்லாத்துக்கும்வேணும் வேணும்னு சொல்றான். 'இராஜி' ண்ணு அவ்வளவுதான் சொன்னுங்க. கல்யாணம் ஆனவங்களுக்கெல்லாம் நான் கேலி பண்ணுவேன். புள்ளேதாச்சி ஆனவங்களுக்கெல்லாம் அதுக்குள்ளவா ஆயிடுச்சு அப்படி இப்படின்னு பரிகாசம் பண்ணுவேன். அப்ப சின்னவங்க எதிர்த்துப் பேசமாட்டாங்க. பெரியவங்களா இருக்கிறவங்க அவன் வரடன் வரடன்னு சொல்லுவாங்க, அதுக்கு.

டாக்டர் சந்திரசேகர்: சர்க்காருடைய 'புரோகிராம்' இருக்கிறது பாருங்க. இந்த பேமலி பிளானிங் உலகத்திலேயே பெரிய 'புரோகிராம்' இதுதான். பணம் செலவு பண்றதிலேயோ, ஆபீஸர்ஸிலோ, வேலே பண்றதிலேயோ ஒரு 130 நாடுகளே கம்பேர் பண்ணுங்க ஏங்க நம்முடைய புரோகிராம் - டெல்லி கவர்ன்மெண்ட் புரோகிராம்தான்- பெரிய புரோகிராம். அதுக்கு உங்க 'ஒப்பினியன்' வேணும். உங்க அபிப்பிராயம் என்னன்னு கேட்கிறேன்?

பெரியார்: ரொம்ப நல்ல காரியம்தான். இந்த மாதிரி அரசாங்கம் ஆரம்பித்து இருக்கிறது, சமுதாயத்திலேயே ஒரு பெரிய நல்ல காரியம். ரொம்ப அது ஜனங்களுக்குத் தொந்தரவு இல்லாம மனசுக்கு சந்தோஷமா வாழ்வு கொடுக்கக்கூடிய ஒரு காரியம்தான். அதுலெ இன்னொன்னு எனக்கு என்ன தோணுதுன்னு இந்தப் பெண்களே இதிலே பிரசாரம் பண்றதுக்கு ரொம்பப் பக்குவப்படுத்திச்சொன்ன நல்லா இருக்கும் அப்படின்னு. பொம்பளேக்கு ரொம்ப ஆசை புள்ளே பெக்க வேணுமேன்னு. ஆம்பிளேக்கு ஒரு அளவிருந்தாலும் பொம்பளேக்குக் கூடுதலாக இருக்கும் அது. அவங்களண்டை போயி நெருங்கி அந்த விஷயங்களே எடுத்துச் சொல்றுலே கொஞ்சம் நல்ல பொம்பளேங்களேவிட்டு அதிகமா பழகிச் சொன்னு கொஞ்சம் அவங்க கேப்பாங்கன்னு நினேக்கிறேன்.

டாக்டர் சந்திரசேகர்: நாங்க வந்து பெண்களுக்கு சொல்றதுக்கு பொம்பளேங்களேத்தான் டிரெயின் பண்ணி 'பேமலி 'பிளேனிங் ஆபிஸர்ஸ்'ன்னு அவங்க போயி கிராமத்துக்கும் டவுனுக்கும்போயி சொல்லுவாங்க. ஆண்களே அனுப்புறதில்லே.

பெரியார்: அதோடு கூடவே இந்த 'ரிலிஜியஸ் பெயித்' இல்லாத பொம்பளேகளேயே அனுப்பனும். ஆம்பளேகளே போட்டாலும் கூடுமானவரைக்கும் அவனே பகுத்தறிவு வாதியாவே போடணும். பெண்ணு போட்டாலும் ஆம்பிளேயா போட்டாலும் மத நம்பிக்கையில்லாதவங்களாப் பார்த்துப் பார்த்துப் போடணும்.

டாக்டர் சந்திரசேகர்: இவ்வளவு பெரிய ப்ரோக்கிராமலெ மத நம்பிக்கையில்லாத 'ஆபிஸர்ஸ்ஸை' கண்டு பிடிக்கிறது கொஞ்சம் கஷ்டம் எங்களுக்கு. ரெண்டாவது ஒண்ணு பண்றேன் இப்போ. இப்போ ஆண்கள் - பெண்கள் கல்யாணம் பண்றதுக்கு ஒரு வயசு 'லிமிட்' ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஏஜ் ஆப் கண்சென்ட்'னு சொல்றோம். அதுக்கு வந்து ஆண்களுக்கு 16, பெண்களுக்கு 15. இது வந்து 1956ல்லே இந்த இண்டு கோரட் பில் ரெய்ஸ் பண்ணினது. எனக்கு அது திருப்தியா இல்லே. ஆண்களுக்கு 21, பெண்களுக்கு அட்லீஸ்ட் 18ஆவது இருக்கணும்னு பண்ணணும். அது ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு எழுதுகிறோம். 17 ஸ்டேட் கவர்ன்மெண்ட்டும் ஒத்துக்கணும். ஒத்துக்கணுதான் எங்க மத்திய சர்க்காரிலே சட்டம் உண்டாக்க முடியும். அதுக்கு ரொம்ப வாதம் நடக்குது. யெஸ், நோ, யெஸ், நோ சொல்லிக்கினேயிருக்காங்க, வேண்டாம் இருக்கலாம்னு. உங்க அபிப்பிராயம் என்னன்னு கேக்கறேன்?

பெரியார்: ஐயா சொல்றது ரொம்ப சரி. 18 வயசுகூட பத்தாது. பெண்களுக்கு 20 வயசு இருந்தால்தான், அது ஏதாவது பயன் படும். 18 வயசுன்னு ஏதோ ஜனப் பெருக்கத்துலே கொஞ்சம் குறையுதுன்னு சொல்றீங்க.

டாக்டர் சந்திரசேகர்: இப்ப இருக்கிறதுலே 3 வயசு கூடுது. இப்ப 15 இருக்குது. நான் 18 பண்ணணும்னு பார்க்கிறேன். உத்திரப் பிரதேசத்

திலும் மத்தியப் பிரதேசத்திலும் ஹிந்தி பேசும் நாடுகளிலெல்லாம் 12, 13, 14 வயசுலே கல்யாணம் பண்ணிடறுங்க.

பெரியார்: அதெல்லாம் பெண்களே ரொம்ப அடக்க வேணும்கிறதுக்காக ஏற்பட்ட 'ஏஜே' தவிர அது, வேற எந்த ஒரு காரணத்தையும் கொண்டு அது ஏற்படலே. 20 வைச்சுமானு ரெண்டு காரியம் 'சால்வ்' ஆகும். அவுங்களா பார்த்து ஒரு சுதந்திரமான புருஷனைப் பார்த்துக்குவாங்க.

டாக்டர் சந்திரசேகர்: பெண் வந்து 20 வயசுனஞ படிச்சிட்டு அவளா பார்த்து இஷ்டப்பட்டு கல்யாணம் செய்துக்கிடுவா. இப்ப வந்து அப்பா அம்மா யாராவது தேடிப் புடிச்சு கல்யாணம் பண்றுங்க.

பெரியார்: அந்த மாதிரி தேடிப் பிடிச்சுப்பாங்க. பெண்களுடைய வாழ்க்கைத் தரம் கொஞ்சம் உயரும். 20 வயசு வரைக்கும் அவங்க படிச்சாங்கன்னு வேலைக்கு லாயக்கு ஆகறப்லே ஒரு படிப்பு அவங்களுக்கு வந்து சேரும். இந்த 18லே கொண்டு போயிட்டா எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணி, பெயில் ஆயும் இருக்கிற நிலைமை வரும். அவங்க புருஷனுக்கு என்னமா பாடுபட முடியும்? அவங்களுக்கு தொழில்தான் என்ன வரும்? எனக் கென்னமோ, எவ்வளவு நாளைக்குக் கல்யாணத்தை தள்ளிப் போடறமோ அவ்வளவு நாளைக்கு நல்லது. பின்னு லேயும் ரொம்ப உபயோகப் படுவாங்க அவங்க. இப்ப எண்ண பண்றது? 18லேயே கல்யாணம் பண்ணு 19லியே குடும்பப் பொம்பளையாப் போயிடறு. குடும்பத்தை காப்பத்தற வேலேயே அவளுக்குச் சரியா போகுது. 20லே ரெண்டு புள்ளேயாயிப் போகுது. புருஷனுக்கும் குடும்பத்தைக் காப்பத்தறதுக்குத்தான் வேலே வேண்டியிருக்குது. சம்பாதனேயும் குடும்பத்தைக் காப்பாத்தறத்துக்குதான் வேலேயே. இதுக்கு தகுந்தபடி தன்னுடைய ஒழுக்கத்தையும் கெடுத்திருக்கிறுன் அவன். அவன் கேரக்டரும் கெட்டுப் போகுது. அதெல்லாம் இல்லாம இருக்கனும்னு ஒரு 20, 22 வயசாவது இருக்கணும்.

டாக்டர் சந்திரசேகர்: அப்புறம் முன்னே என்ன பண்ணினும் ஒரு 4 வருஷத்துக்கு முன்னே ஒரு தம்பதிகளுக்கு 2, 3, 4 குழந்தை பெத்துக்கலாம். அவர்களுக்குப் பணம் இருந்தால் சௌகரியமிருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி கொடுத்துக் காப்பாத்த முடியுமானு 5, 6 குழந்தை கூட பெத்துக்கலாம்னு ஒரு தடவை சொன்னேம். அப்புறம் சொன்னேம். அதெல்லாம் முடியாது. ரெண்டு குழந்தைங்க, இல்லேன்னு மூணு. இப்ப நான் கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தா அதுவும் கொஞ்சம் ஜாஸ்தியாப் போச்சு. அப்புறம் நாங்க சொன்னேம். ஒன்னு ரெண்டு குழந்தை போதும்னு சொல்றோம். அதிலே என்ன கஷ்டம்னு இப்போ ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பொறந்துட்டுதானு கஷ்டம் இல்லே, ரெண்டும் பெண்ணு போயிடுத்துன்னு இன்னும் ஒன்றுக்கு 'ட்ரை' பண்றுரு ஆளு. ஆண் குழந்தை வேணும்னு. அதுக்கு எப்படி அவர்களே 'எஜு கேட்' பண்றதுன்னு எனக்குத் தெரியலே. பெண் குழந்தை பொறந்தாலும் அதோடு நிறுத்திக்கலாம் ஒண்ணும் கஷ்டம் இல்லே. பெண்ணும் ஆணும் ஒன்னுன்னு சொல்றதுக்கு நம்மாலே முடியலே, நம் நாட்டிலே. நான் சொல்றது என்னன்னு 2 குழந்தை இருந்தாப் போதும். 2 ஆண் குழந்தை இருந்தா சரிதான். 2 பெண் குழந்தை இருந்தாலும் நிறுத்திடலாம்னு சொல்லணும். அதை எப்படி, சொல்றது மக்களுக்கு?

பெரியார்: நான் சொல்றேன். அந்த எண்ணம் மக்கள் மனசுலேலே மாற வேண்டுமானு 50% பெண்களுக்கு உத்தியோகம், 50% ஆம்பிளேக்கு உத்தியோகம். ஒரு ஆபிஸ்லே 100 பேர் உத்தியோகஸ்தர் இருந்தா 50 பேர் இருக்காங்களானு கேக்கணும். இல்லாவிட்டா அதைப் போடுன்னு சொல்லணும். அப்ப, பெத்தவங்களுக்கு ஆண் இருந்தாலும் ஒண்ணு, பொண் இருந்தாலும் ஒண்ணு. இப்ப ஆம்பிளே யெல்லாம் உத்தியோகம் பாக்கருங்க. பொம்பளேங்க எல்லாம் வீட்லே இருக்காங்க. அதனுலேயே நமக்கு ஆம்பிளே புள்ளே ஒண்ணு வேணும்னு தோணுது. அவன் சம்பாதிக்கிறுன்னு தோணுது. அதனுலே நாம் 'ஈக்குவலிஸ்' பண்ணிட்டா

உத்தியோகத்தை ஆளுக்கு சரி பகுதின்னு...

டாக்டர் சந்திரசேகர்: அப்ப ஆம்ப ளேங்க கொஞ்சம் 'அப்போஸ்' பண்ணுவாங்களே. எதிர்பாங்களே?

பெரியார்: ஏன், எப்படி 'அப்போஸ்' பண்ணுவாங்க? எப்படி நீங்கதான் 'அப்போஸ்' பண்ணமுடியும்? உங்க மகனுக்கும், உங்க தங்கச்சிக்கும் உத்தியோகம் வரப்போது நீங்க ஏன் 'அப்போஸ்' பண்றீங்க?

டாக்டர் சந்திரசேகர்: ரொம்ப சரி.

பெரியார்: இல்லாத போனதானே வரும். யாருக்கோ வருதுன்னு உங்க ளுக்கு வேலையில்லே. உங்க பெண்ணுக் கும் வருது உத்தியோகம் உங்க தங்கச்சிக்கும் வருது.

டாக்டர் சந்திரசேகர்: ரொம்ப சரி.

பெரியார்: அதனாலே அப்படின்னு சட்டமே போட்டுடுங்க. இப்ப ஆதித் திராவிடருக்கு போட்ட மாதிரி. 50% 'மேலுக்கு' உத்தியோகம் ஒதுக்கி வைக்கணும் அப்படின்னு. கொஞ்சம் 'மார்ஜன்' விடலாம், பரவாயில்லே.

டாக்டர் சந்திரசேகர்: இந்த 'சஜ ஷன்' நல்லா இருக்குது. 'ஒரிஜனல் சஜஷன்' இதை நாங்க 'எக்ஸாமின்' பண்ணி பார்க்கிறோம். இதை பண்ண முடியுமான்னு. இன்னொன்று கேக்க ணும் உங்களை இப்ப வந்து 'அபார் ஷன்' இருக்குது பாருங்க, கருச் சிதைவு பத்தி பெரிய 'காண்ட்ரவர்சி' சர்க்காரிலே நாம் 10 வருஷமா இதைப்பத்தி எழுதிண்டே வரேன். அவங்க சொல்றாங்க இது 'அபார் ஷன் லீகலைஸ்' பண்ணிட்டா...

பெரியார்: அது எப்படி 'லீகலைஸ் ஷன்னு' எப்படி சொல்றது? அபார் ஷன்னு 'நேட்சுரல் அபார்ஷனு? மருந்து சாப்பிட்டா...'

டாக்டர் சந்திரசேகர்: மருந்து சாப் பிட்டு... அதாவது 'இண்ட்யுஸ்டு அபார்ஷன்' அது வந்து தப்புன்னு சொல்லியிருக்காங்க. ஆனு வருஷத் துலே ஒரு 40 லட்சம் பெண்கள் இந்த மாதிரி சரியான டாக்டர்கள் இல் லாத டாக்டர் கிட்டே போயிட்டு அவங்க உடம்பைப் கெடுத்துக்கிட்டு கொலைகூட ஆயிடுது. அந்த் மாதிரி ஆகாம 'லீகலைஸ்' பண்ணிட்டா...?

பெரியார்: ஆனு வேணும்னுகிற வங்க செய்துக்கலாம்.

டாக்டர் சந்திரசேகர்: தட் இஸ் குட். அதுதான் இருக்கணும். 'வாலண் டியரா' தெரியாம கர்பமாயிட்டா, குழந்தை வேண்டாம்னு சொன்னு சர்க்கார் ஆஸ்பத்திரிலே போயி அந்த ஆபரேஷன் பண்ணிக்கலாம்.

பெரியார்: அதை 'லீகலைஸ்' பண்ணலாமே? அதுலே யாருக்கும் தகறாறு இல்லே.

டாக்டர் சந்திரசேகர்: அதுதான் சர்க்கார் ஒரு பில் கொண்டுவந்து இருக்கோம். அதுவந்து ராஜ்ய சபை யில் 'அப்ரூவல்' ஆயி செலக் கமிட் டிக்கு போயிருக்கிறது. அப்புறம் லோக் சபாவிற்கு வரும். அப்புறம் பில் வந்து, 'ஆக்ட்' ஆயிடும்.

பெரியார்: என்ன மாதிரி பதில் சொல்லலாம்னு. அட நாம செய்யா பிட்டா அவங்க செய்துக்க போறுங்க. அதுலே அபாயத்துக்கு ஆளாவாங்க. இப்ப நாம் செய்யறதினுலே நல்ல தனமா குற்றத்துக்கு இடமில்லாம செய்து...

டாக்டர் சந்திரசேகர்: சரியான டாக்டர்களை வைத்து சரியான ஆஸ் பிட்டலே வைச்சு ஒண்ணும் கெடுதி யாகம சரியா பண்ணனும்னு 'லீக லைஸ்' பண்ணனும்.


பெரியார்: ஆம்... அந்த மாதிரி செய்யணும்.

டாக்டர் சந்திரசேகர்: ரொம்ப நன்றி உங்களுக்கு.

[அகில இந்திய வானொலியின் தமிழ்நாட்டு நிலையங்களி லிருந்து 8-3-70 அன்று ஒலி பரப்பாகியது.]

———

மின்சாரத்துறையின்



(பிப்ரவரி 1969 முதல் சனவரி 1970)

* 4946 கிராமங்களுக்கும் குக் கிராமங்களுக்கும் மின் வ ச தி அளிக்கப்பட்டது.

* 60,000 பம்பு செட்டுகளுக்கு மின்வசதி பொருத்தப்பட்டது.

* கிராமங்களே ஒட்டியுள்ள 649 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்கப்பட்டது.

* பம்பு செட்டுகளுக்கு மின்வசதி பொருத்தியதில் அரிசனக் குடி யிருப்புகளுக்கு மின்வசதி அளித் ததில், முந்தைய ஆண்டுகளை விட, இவ்வாண்டுதான் அதிக மாகச் செய்யப்பட்டுள்ளது.

* இவ்வாண்டுக் கா ல த் தி ல், தஞ்சைத் தரணியில் எவ்வளவு வடிமுனைக் குழாய்க் கிணறு களுக்கு மின்சாரம் வழங்க முடியுமோ, அவ்வளவும் வெகு வேகமாகச் செய்து முடிக்கப் பட்டுள்ளது.

* 1972க்கு முன்னால் தமிழ்நாட் டில் உள்ள எல்லாக் கிராமங் களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அறிவித் தார்.

* மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை ஒட்டி இந்தப் பணி வெகு வேகமாகச் செயல்படு கிறது. இத்திட்டத்தின்கீழ் 1620 கிராமங்களுக்கும் குக்கிராமங் களுக்கும் மின்வசதி அளிக்கப் பட்டுவிட்டது.

* இதற்காக வேண்டி, வேண்டிய உபகரணங்கள் வாங்க ரூபாய் முப்பது கோடிக்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டுள்ளது. இது வரையில் இவ்வளவு பெரிய அளவில் 'ஆர்டர்' கொடுக்கப் பட்டதில்லை.

* மின்சாரக் கட்டண அளவில் பெருவாரியான சலுகை தரப் பட்டுள்ளது. மின்சாரக் கட்டண அளவு, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் தான் குறைவு.

* புதிய துணை நிலையங்கள் (Sub-stations) பல ஏற்படுத்தப்பட் டுள்ளன; அவையாவன:

  (1) வேலூருக்கு அண்மையில் திருவல்லத்தில்...

  (2) மாயவரம் வட்டம் வேலங் குடியில்...

  (3) வேலூர் நிலையத்தின் மின் சக்தி உயர்த்தப்பட்டது.

  (4) திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் மணப்பாறையில் ஒரு துணை நிலையம் இவ் வாண்டில் ஏற்படுத்தப்பட் டது.

* மாண்புமிகு முதலமைச்சர் எடுத் துக்கொண்ட முயற்சியினால் 500 பொறியியல் பட்டதாரிகளுக்கு மின்சார வாரியத்தில் வேலை கொடுக்கப்பட்டது.

* மின்வாரியத்தில் பணியாற்றும் சாதாரணத் தொழிலாளியின் நாட்கூலி மூன்று ரூபாயாக உயர்த்தப்பட்டது.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து

எளிய கொள்கை

கேரள மாநிலத்திலுள்ள 'வெளியாந்து நாடு' ஊர் மக்கள் களிப்புடனும், மனநிறைவுடனும் வாழ்கிறார்களென்றால், அவற்றிற்கு அடித்தளமாக விளங்குபவர் ஊர்ப்பணியாளரான திரு. ஸ்ரீதரன் நம்பூதிரி தாம் என்பது வெள்ளிடைமலை.

வெளியாந்து நாடு வட்டத்தில் எங்கு நோக்கினும் நெற்பயிர்கள், பசுமையான காய்கறித் தோட்டங்கள், கோழிப் பண்ணைகள் நிரம்பக் காணமுடிகிறது. ஊர்மக்கள் ஆண்டு முழுதும் ஏதாவது ஓர் உற்பத்திப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

அவர் வேறு, இவர் வேறு: ஊர் மக்களைக் கூட்டமாகக் கூட்டி, அவர்களிடையே வேளாண்மை முறைகளைப்பற்றிக் கூறுவதை, திரு. நம்பூதிரி பொதுவாக விரும்புவதில்லை. 'ஒருவருடைய பிரச்னை, மற்றவரின் பிரச்னையிலிருந்து பெரிதும் மாறுபட்டது' என்பது அவர் எண்ணமாகும். எனவே ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்தித்து உரையாடி, அவருடைய இன்னல்களைக் கேட்டுணர்ந்து தகுந்த வழி முறைகளைக் கூறுகிறார். இம்முறையினால் அவர் எல்லோருக்கும் உரிய நண்பராகி விட்டார். இவருடைய வட்டத்திலுள்ள வேளாண்மை நிலமனைத்திலும் 'ஐ. ஆர்-8' மற்றும் 'கல்ச்சர்-28' ஆகிய ரகங்களும் முறையாகப் பயிரிடப்படுகின்றன. இவருடைய யோசனைகளை ஏற்று, பல ஊழவர்கள் கோழிப் பண்ணைகளையும், காய்கறித் தோட்டங்களையும் அமைத்துள்ளனர். இவை வாயிலாகக் கிடைக்கும் பொருட்களுக்கு எர்ணகுளம் சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது.

38 வயது நிரம்பிய திரு. நம்பூதிரி கடந்த 16 ஆண்டுகளாக, ஊர்ப்பணியாளர் பதவியிலிருந்து, மக்கட்குத் தம்மாலியன்ற சேவைகளைச் செய்கிறார். இதுவரை நான்குமாவட்டங்களிலுள்ள பதினேறு வட்டாரங்களில் அவர் பணியாற்றியுள்ளார். அவருடைய சிறந்த செயல்களெல்லாம், ஊர் மக்களால் போற்றப்பட்டுள்ளன; மேலதிகாரிகளால் புகழப்பட்டுள்ளன.

திரு. நம்பூதிரியின் எளியகொள்கை இதுவே: 'மனமிருந்தால் வழியுண்டு.'

மகளிர்க்கும் வேலை உண்டு

உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஆண்களுக்கே மிகுந்த பொறுப்புடன் உடலுழைப்பும் இருந்தாலும், மகளிர் அத்துறையில் தக்க ஆர்வம் காட்டி, காய்கறிகளை விளைவிப்பதற்குப் போதிய வாய்ப்புகளுள்ளதென்பதை மறுக்க இயலாது.

பழங்கால முறைகளைக் கையாண்டு அறுவடை செய்வதாலும், களத்தில்

போரடிப்பதாலும், பிறகு தானியங்களை உரிய, நவீன முறைகளில் பாதுகாக்காததாலும், மொத்த விளைச்சலில் 20 சதவீதம் ஆண்டு தோறும் வீணாகிக்கொண்டே இருக்கின்றன. நம்மால் பாழாக்கப்படுவது ஒரு புறமிருக்க, பூச்சிகளும் எலிகளும் மறுபுறம் தானிய மணிகளைச் சேதமாக்குகின்றன. இல்லங்களில் சமையல் செய்யும்போது காய் கறிகள், அரிசி, கோதுமை போன்ற பொருட்கள் போதிய கவனமின்றி மேலும் பாழாக்கப் படுகின்றன. எனவே, மகளிர் அவ்வப்போது, சற்று சிரத்தையுடன் செயலாற்றின், ஓரளவு உணவுப் பொருட்கள் சேதத்திலிருந்து காப்பாற்றப் படலாமல்லவா?

வயிற்றுப் பசி, உடல் உரம்: நம் நாட்டில் பெரும்பான்மையான மக்களின் உணவு அரிசியாக இருக்கும் நிலையில், நெல் விளைச்சல் போதுமான அளவு இன்னும் அதிகரிக்கவில்லை. எனவே, நம்முடைய உணவு முறைகளைச் சிறிது மாற்றி அமைத்துக் கொண்டால், அரிசியையே நாம் பெரிதும் சார்ந்திருக்க வேண்டிய நிலையிலிருந்து நம்மைச் சற்றுத் தவிர்த்துக்கொள்ளலாம். கோதுமையை அரிசியுடன் அதிகமாகச் சேர்த்து உண்பதுடன், காய்கறிகளையும் நிரம்பச் சாப்பிட வேண்டும். நம்முடைய வயிற்றுப் பசிக்குமட்டும் நாம் உணவருந்துகிற நிலை அடியோடு மாற்றப்பட்டு, உடல் வலுவாக இருக்கவும் நாம் தகுந்தஉணவுகளை உண்ணவேண்டும். அஃதாவது, உயிர்சத்துக்கள், மாவுச் சத்துக்கள், புரதம், கொழுப்புச் சத்துக்கள் நிரம்பிய காய்கறிகளையும் அரிசியுடன், கோதுமையையும் சேர்த்து தவறாது சாப்பிடவேண்டும். இவற்றைப் பெறுதற்கு மகளிர் முக்கிய பங்கேற்கவேண்டும்.

கேளுங்கள் அளிக்கப்படும்: இல்லங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள சிறிதளவு நிலங்களைக்கூட அப்படியே விட்டுவிடாது, காய்கறிகளை அங்கு பயிரிடுதற்குப் பெண்கள் முயற்சி செய்யவேண்டும். இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தற்கு, வேளாண்மைத்துறை அலுவலர்கள் காத்து நிற்கின்றனர். ஓரிரண்டு காய்கறிகள், ஒரு பழச்செடி இவற்றைக்கொண்டு தொடங்கினாலே போதும். நாட்கள் செல்லச் செல்ல, ஏனைய காய்கறிகள், பழங்களைப் பயிரிடுதற்குப் பெண்கள் போதிய செயல்திறனைப் பெற்றுத் திகழ்வர் என்பது உறுதி.

கோழிப் பண்ணையை விடச்சிறந்த தொரு குடிசைத் தொழில், தூய்மைத் தொழில் இருக்க முடியாது. சிறிது மூலதனத்துடன், கோழிப் பண்ணையைத் தொடங்கினால், குடும்பத்திற்கு முட்டைகள் தொடர்ந்து கிடைப்பதுடன், அதிலிருந்து ஓரளவு வருவாயையும் தவறாது பெற்றுக்கொண்டே இருக்கலாம்.

உணவு வழக்கங்களை மாற்றிக் கொண்டு, காய் கனிகளை நிரம்பச் சாப்பிடுவதுடன், அவற்றை உற்பத்தி செய்வதிலும் பெண்கள் முக்கியப் பொறுபேற்றுக் கொண்டால், உணவு முன்னேயில், நாம் ஒரு சிறந்த திருப்பத்தைக் காண முடியும்.



மின் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இதோ, அவற்றைப்பற்றியத் தகவல்களும், அவை எங்கெங்கு செயற்படுகின்றன என்ற செய்திகளும்.

மைசூரிலுள்ள பெல்காம், மகாராட்டிரத்திலுள்ள அகமத் நகர், குசராத்திலுள்ள அம்ரேலி, ஜூனாத், உத்தரப் பிரதேச லக்கேனு ஆகிய மாவட்டங்களில் மின்சாரக்

கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

ஐந்தாவது சங்கம்

இந்திய தேசிய கிராம மின் கூட்டுறவுக் கழகமும், அமெரிக்காவும் அண்மையில் செய்துள்ள ஓர் ஒப்பந் தத்தின் வினைவாக, ஐந்தாவதுசங்கம் ஆந்திராவிலுள்ள கரீம் நகர் மாவட் டத்தில் வரைவிலேயே அமைக்கப்பட இருக்கிறது.


மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன?

பல ஊர்களடங்கிய ஒரு பகுதிக்கு மின் வாரியம், மின் வசதி அளிப் பதற்கு பல்லாண்டுகள் தேவைப்பட லாம். ஆனல் மின் கூட்டுறவுச் சங்கங்கள் அத்த திட்டத்தை மூன்று அல்லது ஐந்தாண்டுகளிலேயே வெற்றிகரமாக நிறைவேற்றுகின் றன. மின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

வாரியத்திற்குள் வாரியம்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதற்கும் வேளாண்மைத் தொடர்பான சிறு இயந்திரங்களை உருவாக்க, மின் விசைக் கருவிகள், மின் இறவை இயந்திரங்களைச் சீராக்குதற்கும் மின் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் துணை செய்யும்.

கரீம் நகர் மாவட்டத்திலுள்ள சிர் சில்லா வட்டத்தில் எழவிருக்கும் கிராம மின் கூட்டுறவுச் சங்கமானது, அவ்வட்டாரத்திற்கான, ஒரு சிறிய மின் வாரியம் போன்று பணியாற்றி, 173 கிராமங்களுக்கு மின் வசதியை அளித்து, 4,62,016 ஏக்கர்கள் வேளாண்மைக்கு உதவும். இத் திட்டத்தின் மதிப்பு ரூ. 2·9 கோடி.



விஞ்ஞான முறையில் தேனீக்களை வளர்ப்பதால், கிராமப் பெருமக்க ளின் பொருள் வளம் மென்மேலும் பெருகும் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. தவிரத் தேனீக் களினுல் உணவு உற்பத்தியும் பன் மடங்கு அதிகரிக்கிறது என்பதும் ஓர் அரிய உண்மையாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கதர் கிராமத் தொழில் குழுவானது, தேனீக்கள் வளர்ப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டி, நகர், ஊர்ப்புற மக்களின் ஆவலைத் தூண்டி, தேன் உற்பத்தியைப் பெரிதும் கூடுதலாக்கி யுள்ளது.

1953—54ஆம் ஆண்டில் ரூ. 10,000 மதிப்புள்ள தேன் சேகரிக்கப்பட்டது. இது 800 தேனீ குடியிருப்புக்களி லிருந்து கிடைத்த தேனின் மதிப் பாகும். ஆனல் இன்றளவில் நாட் டில் 3,50,000 தேனீ குடியிருப்புக்கள் உள்ளன. இவை 25,000 ஊர்களில் 1,10,000 குடும்பங்களால் பேணி வளர்க்கப்படுகின்றன. 1968-69ஆம் ஆண்டில் தேன் உற்பத்தியால் கிடைத்த வருவாய் ரூ. 85 இலட்சங் களாகும்.

உணவு உற்பத்திக்குத் தேனீ

மலர்களில் தவழ்ந்து, மலர் களிடையே புகுந்து, நுழைந்து

தேனீச் சேகரிக்கும் நீலியில் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையாலும் உணவு உற்பத்தியைப் பெருக்குதற்குத் தேனீக்கள் மறைமுகமாக நமக்கு உதவுகின்றன. தோராயமாகக் கணக்கிட்டதில், தேனீக்கள் செய்யும் மகரந்தச் சேர்க்கையால் ரூ. 4·5 கோடி மதிப்பிற்கு உணவு உற்பத்தி அதிகரித்திருக்குமென அறியப்படுகிறது.

சில வணிகப் பயிர்களும், மலர்களும் செழிப்பாக வளர்ந்து, அளவிடற்கரிய ஆதாயத்தைத் தருதற்குத் தேனீக்களின் மறைமுகமான சேவை இன்றியமையாததெனக் கண்டறியப் பட்டுள்ளது ஆகவே சோவியத் நாட்டிலும், அமெரிக்காவிலும் இன்ன பிற முன்னேற்றமடைந்துள்ள நாடுகளிலும் தேனீக்கள் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன.

மேற்கூறிய முறையை இந்தியாவிலும் கையாளுதற்கு ஆய்வுகள் நடைபெறுகின்றன. சில பயிர்களில், தேனீக்களினால் ஏற்பட்டுள்ள மகரந்தச் சேர்க்கைகள் நல்ல பயனைத் தந்துள்ளதென, கதர் - கிராமத் தொழிற்குழு அண்மையில் கூறியுள்ளது. இதனால் 5 முதல் 25 சதவிகிதம் வரை விளைச்சல் பெருகியுள்ளது. குறிப்பாகக் கூறவேண்டுமாயின், முலாம் பழங்களைக் கூறலாம். தேனீக்கள் செய்துள்ள மகரந்தச் சேர்க்கையினால் 10 மடங்கிற்கும் கூடுதலான முலாம் பழங்கள் உற்பத்தியாகியுள்ளன. வரும் ஆண்டுகளில் மேலும் பல பயிர்களின்மீது இவ்வாராய்ச்சியை மேற்கொள்ளக் குழு தீர்மானித்துள்ளது.

தானே வரும் ஆதாயம்

தேனீத் தொழிலுக்கு மூலப் பொருட்கள் தேவையில்லை. மலர்கள் மலர்கின்றன; தேனீக்களை அவை 'வா...வா...அருகில் வா' எனச் சுழுமல் கூறுகின்றன. தேனீக்கள் நெருங்கினால் போதும். தேன் நமக்குக் கிடைத்துவிடுகிறது. மேலும், சுற்று வட்டாரங்களிலுள்ள உணவுப் பயிர்கள் செழித்து வளர்ந்து தானிய மணிகளை நமக்கு அள்ளித் தந்து விடுகின்றன.

விஞ்ஞான முறையில் தேனீக்கள் வளர்க்கப்பட்டால், நாட்டின் பொருளாதாரத்திற்கு அவை சிறந்த முறையில் உதவக்கூடும். சுமார் ரூ. 50 கோடி வரை செல்வம் பெருகுதற்குப் போதிய வாய்ப்புக்கள் துருதுருவென திரியும் தேனீக்களிடம் மறைந்துள்ளன.

தீப் பெட்டியால் மலர்ந்த புதிய வாழ்க்கை



கிருஷ்ணவந்தி ஓர் இளம் அன்னை; செம்பு நிறையக் கறந்த பாலுடன் வீட்டிற்குள் நுழைகிறாள். தன் இடைய ஆறாவது குழந்தைக்குப் பாலூட்டவேண்டிய நேரம் நெருங்கி விட்டது.

30 வயது நிரம்பிய கிருஷ்ணவந்திக்கு ஆறு குழந்தைகள்; அவர்களில் மூவர் ஆண்கள். முதற் குழந்தையின் வயது 12; ஆறாவது கைக் குழவியின் வயது 6 திங்கள்.

வாழ்வில் அசதியை, கசப்பைக் கண்டவள் போலாகிவிட்டாள் கிருஷ்ணவந்தி. ஆறு குழந்தைகளையும், கணவரையும் கவனித்துக் கொண்டு வீட்டுக் காரியங்களையும் செய்வதென்றால், சிரமம் சற்று அதிகம் தானே? என்ன செய்வது?

தீப்பெட்டி கிடைத்தது: அடுப்பில் பாத்திரத்தை வைத்து, பாலை ஊற்றிய பின்னர் தீப்பெட்டியைத் தேடினாள். தீப்பெட்டி கிடைத்தது. தற்செயலாக அதிலிருந்த ஒருசிறு விளம்பரம் அவள் கவனத்தைப்பற்றி ஈர்த்தது. என்ன விளம்பரம் அது? ''இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் போதும், ஆலோசனைக்கு

டாக்டரை அணுகுங்கள்.'' இச் சிறிய விளம்பரத்தில் ஒரு தந்தை, ஒரு தாய், ஒரு செல்வன், ஒரு செல்வி யின் படங்கள் அழகாக அச்சிடப் பட்டிருந்தன.

ஆயாசம் அகன்றது. கவலைகள் கிறிதே மறைந்தன. கணவரின் வருகைக்காகக் காத்து நின்றுள்.

முடிவு பிறந்தது: திரு. ராம்பிர காஷ் - கிருஷ்ணவந்தியின் கணவர் - ஒரு சிறு வணிகர். திங்களுக்கு முன்னூறு ரூபாய்கூடப் பொரு வீட்ட இயலாத நிலையிலுள்ள வர்.

கணவன் - மனைவியர் கலந்துரை யாடினர். திரு. பிரகாஷ் மனைவி யின் சொற்களைக் கேட்டுப் பரவச மடைந்தார். அவளுடைய விருப்பத் திற்கு இசைந்தார். குடும்பக் கட்டுப் பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளக் கிருஷ்ணவந்தி தீர்மானம் செய்துவிட்டாள்.

திரு. ராம்பிரகாஷ் அதிகம் படித்த வரல்ல. குழந்தைகளையாவது நன்கு கப் படிக்க வைக்கலாமென்றுதான் நிட்டமிட்டார். ஆனல் ஒன்றிற்குப் பின் ஒன்றுகச் சேய்கள் அறுவராகி விட்டனரே!

காலம் நல்ல காலம்: ''இனிக் குழந்தைகள் பிறக்கப்போவதில்லை. அவர்களை வளர்க்கவேண்டிய சிரமம் இல்லை; பொருள் செலவில்லை. இருக் கும் அறுவருக்குத் தாம் இனி எல்லா வருவாயையும் செலவிட்டு, சிறந்த கல்வியளிக்க வேண்டும். என் குறையை, என் குழந்தைகள்மூலம் நிறைவு செய்து கொள்வேன்''— திரு. பிரகாஷின் எண்ண ஓட்டம்!

சுதேஷ் குமாரிக்கு அன்று அருமை யான வரவேற்பு கிடைத்தது. யார் இந்த சுதேஷ் குமாரி? அவர்தாம் குடும்பக் கட்டுப்பாடு ஆலோசகர்.

கிருஷ்ணவந்தி, சுதேஷ் குமாரி யிடம் தம் எண்ணத்தைக் கூறினர்.

''உங்களுக்கோ ஆறுகுழந்தைகள் உள்ளன. இவி குழந்தைகள் பிறப் பதை ஒத்திவைக்க உதவும் கருத் தடை சாதனங்கள் உங்களுக்குவேண் டாம். மகிழ்ச்சியுடன் மருத்துவ மனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள் நானும் வரு கிறேன்'' — சுதேஷ் குமாரி கூறினர்.

அரியானு மாநிலத்திலுள்ள ரோடக் மாவட்டத்தில் வாழும் கிருஷ்ணவந்தி, மருத்துவமனை புகுந் தாள்.

இதில் என்ன பெரிய வேதனை? ஆறு குழந்தைகளைப் பெறுதற்கு அனுபவித்த இன்னலிலிடவா, குடும் பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை நோவைத் தருகிறது? கிருஷ்ண வந்தி மகிழ்ச்சியுடன் காணப்பட் டாள். அகத்திலெழுந்த மனமாற் றம் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

''டாக்டர்களும், நர்சுகளும் என் னிடம் அன்பொழுகப் பழகினர். எல்லா வசதிகளும் எனக்குக் கிடைத் தன. அரசாங்கமே செலவு செய்து அறுவையைச் செய்ததுடன், எனக் குப் பணம்கூடத் தந்தார்கள்'' என்று அடிக்கடி தம் தோழியர்களி டம் கூறுகிருள் கிருஷ்ணவந்தி.

தீப்பெட்டியால் எவ்வளவு நன்மை கள் வீனந்துள்ளன பார்த்தீர்களா?

மக்களின் ஆன்மீக நலத்துக் காக உழைப்பதுமட்டுமே தம் மூடைய தலையாய கடமை என்றெண்ணி, அத்தோடு அமைதியுடன் நில்லாது, உடல் நலனும் காக்கப்படு வதற்கு காய்கறிகளும் மிகஅவ யெம் என்றெண்ணி அவற் றின் உற்பத்தியில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவர், சகோதரர் மரியா மெய்ன் செல் அவர்கள். இவர் கொடைக் கானலைச் சார்ந்தவர்.



சகோதரர் மரியா அவர்களின் ஏழு ஏக்கர் பண்ணையில் பூக்கோசு,

('காலிஃபிளவர்'), முட்டைக் கோசு, சிகப்பு முள்ளங்கி, பீட்ரூட், உருளைக் கிழங்கு, பட்டாணி ஆகியவை பயிரிடப்படுகின்றன. தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை கூறும் ஆலோசனைகளை முழுவதுமாக ஏற்று, பயிர் முறைகள் அனைத்தையும் பிறழாது தழுவி, காய்கறிகளைப் பெருமளவில் உற்பத்தி செய்கிறார் இவர்.

தரமான விதைகளைப் பயிரிட்டுப் போதுமான உரங்களுடன், பாசனத்தையுமளித்து, பயிர்ப் பாதுகாப்பு செய்து, காய்கறி உற்பத்தி செய்யும் சகோதரர் மரியா, ஏழு ஏக்கர் பயிர்களுக்குச் செலவிடுவது ரூ. 10,000 மட்டுமே. கிடைக்கும் வருவாய் எவ்வளவென்று எண்ணுகிறீர்கள்? ஆண்டிற்கு ரூ. 50,000!

அவருடைய காய்கறிகளுக்கு மதுரை, திண்டுக்கல் இரு இடங்களிலும் நல்ல விற்பனையுள்ளது. ஒரு பகுதி காய்கறிகள், விதைகளாகவும் விற்கப்படுகின்றன.



வேளாண்மையில், இயந்திரக்கலப்பைகளின் தேவை மிகவும் இன்றியமையாததென்பதை சிறிதும் விளக்கத் தேவையில்லை. தரமிக்க பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் போன்ற அனைத்தும் கையாளப் படினும், வயலை செம்மையாக உழுது பண்படுத்தாவிடில், மிகு விளைச்சலை எவ்வாறு பெற இயலும்? வயலை ஆழ உழுது, உரங்களை ஏற்கும் தன்மையை நிலத்திற்கு அளிக்காவிடில், விளைச்சல் பெரிதும் குறைந்துவிடக் கூடுமன்றே? எனவே, இயந்திரக் கலப்பைகளின் பணி வேளாண்மையில் முக்கிய, சிறப்பான இடத்தைப் பெறுகிறது எனக் கூறுவதில் மிகையேதுமில்லை.

நம் நாட்டில், 1956ஆம் ஆண்டு வரை 20 980 இயந்திரக் கலப்பைகளே இருந்தன. இவ் வெண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. 1961ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்த கலப்பைகள் 31,005 ஆகும். இவற்றுல் 9·56 சதவீதம் கூடுதல் உற்பத்தி கிடைத்தது. 1966ஆம் ஆண்டு இறுதியில் 55,222 இயந்திரக் கலப்பைகள், நாட்டின் பற்பல இடங்களிலும் வேளாண்மையை இயந்திரமயமாக்கிக் கொண்டிருந்தன.

இறக்குமதி குறைந்தது

1963—64 ஆம் ஆண்டுவரையில் இந்தியாவில், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரக் கலப்பைகளே பெரும்பாலும் வேளாண்மையில் கையாளப்பட்டன; நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கலப்பைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. ஆனல் இந்த நிலமை 1964-65 ஆம் ஆண்டில் பெருத்த மாறுதலடைந்தது. இவ் வாண்டு தொடக்கம் இந்தியாவில் இயந்திரக் கலப்பைகளின் உற்பத்தி கணிசமாக உயர்ந்து விட்டதனல், இறக்குமதி வெகுவாகக் குறைக்கப் பட்டது.

வேளாண்மை இயந்திரங்களையும், இன்னபிற உழுபடைக்கருவிகளையும் எளிதாகப் பெற்று, உழவர்களுக்கு முறையாக வழங்குதற்கென, ஆந்திரம், அஸ்ஸாம், பீகார், அரியானு,

கேரளம், மகாராட்டிரம், மைசூர், ஒரிசா, பஞ்சாப், தமிழ்நாடு, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 'வேளாண்மை—தொழில் நிறுவனங்கள்' அமைக்கப்பட்டன. இந்நிறுவனம், தன்னுடைய சேவையைத் தொடங்குதற்கு முன்னுள்ள காலங்களில் அந்தந்த மாநில வேளாண்மைத்துறைகளே இயந்திரக் கலப்பைகளை வாங்கி, உழவர்களுக்குத் தவணை முறையில் அளித்துக் கொண்டிருந்தது.

ஏக்கருக்கு 3 லிட்டர் எண்ணெய்

டி. ட்டி 14 என்ற கலப்பையை, ஒரு மணிநேரம் இயக்குதற்கு 3 லிட்டர் 'டீசல்' எண்ணெய் தேவைப்படுகிறது. இதைவிடப் பெரிய கலப்பைகளை ஓட்ட, ஒரு மணிக்கு 4 முதல் 6 லிட்டர் வரை 'டீசல்' எண்ணெய் பயன்படுத்தப்பட வேண்டும். மண்வளம், கால அளவைமட்டுமே கணக்கிட்டு உழுதுவிடுதற்கில்லை. அவை மாறுபடக்கூடும். இருப்பினும் ஓர் ஏக்கரை உழுவதற்குச் சராசரியாக 3 மணி நேரம் தேவைப்படலாம்.

இயந்திரக் கலப்பைகளை ஓட்டுபவருக்கு நாளொன்றிற்கு ரூ. 10உம், அவருடைய உதவியாளருக்கு ரூ. 5 உம் சராசரியாக அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றில், கலப்பைகளை ஓட்டுதற்கு ஏற்படும் ஊதியச் செலவு ரூ. 2,400 ஆகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதிலும் ஈரெருதுகளை வைத்துக்கொண்டு, வேளாண்மைக் காலங்களில்மட்டும் அவற்றை உழுவதற்கெனப் பயன்படுத்திக் கொண்டால், ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ. 965 செலவாகக்கூடும். ஏரைச் செலுத்தும் தொழிலாளியின் ஊதியத்தையும் இதனுடன் சேர்த்து நோக்கும்போது, நாளொன்றிற்கு ரூ. 12·55 வீதம் செலவாகிறது. ஓர் ஏக்கர் நிலத்தை உழுதற்கு 18 ஜோடி காளைகள் தேவைப்படலாம்.

எதில் ஆதாயம்?

இயந்திரக் கலப்பைகளையும், எருதுகளையும் வைத்துக்கொண்டு உழவு செய்யும் ஓர் உழவரின் நிலை என்னவென்பதைக் காண்போம். இயந்திரக் கலப்பையினுல் ஏக்கருக்கு ரூ. 34 மட்டுமே செலவாகும்போது, ஆண்டு முழுவதும் காளைகளை வைத்துப் பராமரிக்கும் அவருக்கு ஏக்கர் ஒன்றை உழ, ரூ. 219 தேவைப்படுகிறது. எனவே, இயந்திரக் கலப்பையை ஒருவர் கையாளின், அவருக்குச் சுமார் ரூ. 185 வரை ஓர் ஏக்கருக்கு செலவு மிச்சமாகிறதென்பதில் ஐயமுண்டோ?

வயல் உழு காலத்தில் மட்டுமே எருதுகளைப் பெற்று உழக்கூடிய நிலையிலுள்ள ஒரு சிறிய உழவர் நாளொன்றிற்கு ரூ. 8 முதல் ரூ. 10 வரை செலவிட வேண்டியுள்ளது. இம்முறையில் ஓர் ஏக்கரை உழுதற்கு ரூ. 120 முதல் ரூ. 150 வரை செலவாகலாம். ஒரு வகையில் இது உழவருக்கு ஆதாயமாகத் தோன்றினும், அதே அளவு நிலத்தை ரூ. 83 முதல் ரூ. 114 வரை செலவிட்டு, இயந்திரக் கலப்பையால் உழுது கொள்ள முடியும்.

போதிய வேலை வாய்ப்பு

சுமார் 7,000 இயந்திரக் கலப்பைகளை, வேளாண்மையில் பயன்படுத்துவதாகக் கொள்வோம். அந்த நிலையில் 2·70 இலட்சம் எருதுகளுக்கும், அதே எண்ணளவு உழுவோருக்கும் வேலையில்லா நிலை ஏற்படுகிறது. இதனுல் ஒருவருக்கு ஆண்டில் 100 நாட்கள் வரை வேலையே இல்லை. ஓர் ஆண்டில் 200 நாட்களுக்கு வயலில் வேலை வாய்ப்புள்ளது என்று கணக்கிட்டோமாயின், 1·35 இலட்சம் பேர்கள் வேலை இல்லாதவர்களாகின்றனர். அனுல் முன் சொன்ன 7,000 இயந்திரக் கலப்பைகள் சுமார் 14,000 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்புத் தந்து விடுகிறதே!

எந்த ஒரு துறையையுமே இயந்திரமயமாக்கும்போது, தொடக்கத்தில் சிறு வேலையின்மை ஏற்படக்கூடும். இது உலகறிந்த, அநுபவக் கூற்றுமாகும். ஆனல் காலப் போக்கில் வேளாண்மை முழுவதும் இயந்திரமயமாக்கப்பட்டு விடுகின்ற நிலைமையில் அதிக ஊதியத்துடன், பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பது உறுதி. தேசிய அளவில் நாடெங்கிலும் இயந்திரக் கலப்பைகள் ஓசைகளை யெழுப்பி, உற்பத்தியை உயர்த்தும் நிலை ஏற்படும்போது, இயந்திரக் கலப்பைகளைச் செப்பனிடுவோர், சீராக்குவோர்

ஏராளமாகத் தேவைப்படுவர். தவிர, தண்ணீர்ப்பாசனத்திற்கான மின்சாரம், ஏன், மென்மேலும் இயந்திரக் கலப்பைகளையே உற்பத்தி செய்யவும், தொழிற் கூடங்கள் ஆங்காங்கே நிறுவப்படவேண்டும். அந்நிலையில் பற்பல பொறியாளர்கள், மற்றும் பல்வகை மக்கட்கு நிறைய வேலை வாய்ப்புக்கள் கிடைத்த வண்ணமிருக்கும்.

புதுமை விரும்பும் உழவர்

பழங்காலக் கருவிகளை வைத்துக் கொண்டு, விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்ய இயலாது என்ற உண்மையை உழவர்கள் உணரத் தலைப்பட்டுவிட்டனர். பழங்கால ஏர்கள், 4 அங்குலத்திற்குமேல் நிலத்தை ஆழப்படுத்த முடியாது. அவற்றால் மண்ணைப் பொடியாக்கிச் சேருக்கவும் இயலாது. இவ்விரண்டையும் செய்ய முடியாதனவாலேயே, வயல்களுக்கு அளிக்கும் உரங்கள் மண்ணுடன் இரண்டறக் கலப்பதில்லை என்று விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துக் கொண்டேயுள்ளனர். எனவே, இயந்திரக் கலப்பைகளைக் கொண்டு மிக ஆழ உழுது, வேளாண்மை செய்வதால் 10 சதவீதத்திற்கும் அதிகமான உற்பத்தி நமக்குத் தற்போது கிடைக்கிறது.

மேற்கூறப்பட்ட தகவல்களிலிருந்து சில உண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. வேளாண்மை உயர்வடைந்து, உற்பத்தி பெருகுவது ஒரு புறமிருக்க, இயந்திரக் கலப்பைகளினால் உழுவதால், பணமும் பெருமளவில் மிச்சமாகிறது என்பதையும் அறிய முடிகிறது.

எனவே இயந்திரக் கலப்பைகளைப் பெற்று, ஆழ உழுது, பயன் பெறுவீராக!

———

என்ன? உரம் வாங்கத்தானே!



உரிமை பெற்ற விற்பனையாளரிடமிருந்தே உங்களுக்குத் தேவையான உரங்களை வாங்குங்கள்.

விற்பனை விலையைவிட, கூடுதல் விலைக்கு உரங்களை வாங்காதீர்கள்; விற்பனையாளரிடமுள்ள விலைப் பட்டியலுடன், அவர் கூறும் விலையையும் ஒப்பிட்டுச் சரிபார்த்து, மன நிறைவு பெற்ற பின்னரே, உங்கள் உரத் தேவைகளைப்பற்றிக் கூறி, அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உரங்களின் மொத்த எடைக்குப் பணம் கொடுக்கவேண்டாம். நிகர எடைக்கே விலை கொடுத்து உரங்களை வாங்குங்கள். உரமூட்டைகளை நிறுத்துப் பார்த்து, தராசுக்கோல் காட்டும் எடைக்கு மட்டுமே பணம் அளிக்க உங்களுக்கு முழு உரிமையுண்டு. மூட்டையின்மேல் குறிக்கப்பட்டுள்ள எடையை மட்டுமே கணக்கில் கொண்டு வாங்க வேண்டாம்.

உரமூட்டைகளை வாங்கியபின், அவற்றைத் திறந்து பார்க்கையில், உரங்கள் நல்ல தரமானதாயில்லையென்றால், உரு ஆய்வாளரிடம் சென்று முறையிடுங்கள்; உங்கள் உரங்களை, அவர் சோதனையிட்டு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார். சோதனையில், உரம் சிறந்ததாயில்லையெனத் தெரிந்தால், விற்பனையாளர்மீது வழக்குத் தொடரப்படும்; உரத்தின் விலை உங்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

எனவே, மேற்கண்டவற்றைக் கருத்திற்கொண்டு, சிறந்த உரங்களை சரியான எடையுடன், உரிய விலையில் பெற்று, பெரும் பயனடைவீர்!

Articles reproduced from 'Panchayat Raj' on pages 57 to 64 and from **'Intensive Agriculture' on page 64.**

ஊராட்சி அரசிதழ்

PANCHAYAT GAZETTE

தமிழ் நாட்டில் குழந்தைகள் காப்பகங்கள்

நாள் ஒன்றுக்கு இலட்சத்து இருபதாயிரம் பேருக்கு உணவு வழங்கும் திட்டம்

[6-2-70 நாளிட்ட சமூக நலத்துறையின் அரசு ஆணை எண் 76-ன் சுருக்கம்.]

[CHILD WELFARE—Kuzhanthaigal Kappagams in Tamil Nadu—Programme for Pre-School Feeding and construction of buildings for Kuzhanthaigal Kappagams in collaboration with CARE-Proposals-Orders Issued.]

17-5-1968 நாளிட்ட ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 963இல் முந்நிலைப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்குக் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கவும், உணவு அளிக்கவுமான திட்டத்தை 'கேர்' (Care) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தும் ஏற்பாட்டுக்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்திருந்தது.

2. கீழ்க் குறிப்பிட்ட வகையில் அடியிற்கண்ட வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த உதவி அளிக்கக் 'கேர்' நிறுவனம் முன்வந்துள்ளது.

I. முந்நிலைப் பள்ளி குழந்தைகள்-பேறுகால மகளிர்க்கு உணவு வழங்கும் திட்டம்: முந்நிலைப் பள்ளி வயதுக் குழந்தைகள், பேறுகால மகளிர், கைக்குழந்தை உள்ள தாய்மார்கள் ஆகியோருக்கு நாள் ஒன்றுக்கு 1,20,000 பேருக்கு உணவு அளிக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். தமிழ்நாடு முழுவதிலும் 1,000 குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தி அவை ஒவ்வொன்றிலும் 120 பேருக்கு ஆண்டில் 300 நாட்களுக்கு உணவளிக்க இத்திட்டம் வகை செய்யும். புரதச் சத்து, ஊட்டச் சத்துக் குறைவினால் வரும் காலத் தலைமுறை பாதிக்கப்படாமல், உடல்வளமும் மனவளமும் பெற வழி செய்யப்படல் வேண்டும் என்ற கருத்தில் இத்திட்டம்மேற்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 'கேர்' நிறுவனம், 1000 குழந்தைகள் காப்பகத்திலும், ஒவ்வொன்றிலும் 40 குழந்தைகளுக்கும், மற்றும் குழந்தைகள் காப்பகத்தில் உறுப்பினராக இல்லாத மேலும் 40 குழந்தைகளுக்கும், மகப்பேறு நிலையில் உள்ள மகளிர், குழந்தை பெற்றெடுத்த மகளிர் 40 பேர்களுக்கு உணவு அளிக்க முன்வந்துள்ளது. நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 90 கிராம்வீதம் ஆண்டொன்றுக்கு 200 நாட்களுக்கு உணவுப் பொருட்களை 'கேர்' வழங்கும். (ஆண்டில் 300 நாட்களுக்கு, அதாவது, மாதத்தில் 25 தினங்களுக்கு உணவு வழங்க கேர்''

நிறுவனத்திற்கு தடை ஒன்றுமில்லை.)
5 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.87·50 இலட்சம் பெறுமானமுள்ள ஊட்ட உணவுப் பொருட்களை வழங்கக் 'கேர்' நிறுவனம் இசைந்துள்ளது. எரிபொருள், சமையல், இதர செலவுகளில் 50 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்கும். பாக்கி 50 சதவிகிதச் செலவு பொதுமக்களின் நன்கொடை மூலம் நிறைவு செய்யப்படும். உணவு பகிர்ந்து வழங்குதல், மேற்பார்வை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். பாத்திரங்கள் முதலியவைகளுக்காகும் செலவு பொதுமக்களின் நன்கொடையிலிருந்து ஏற்கப்படும். இந்த வகையில் மொத்தச் செலவு ரூ. 24·62 இலட்சம் ஆகும். இதில் ரூ 11·76 இலட்சத்தை மாநில அரசு ஏற்கும். மீதி 10·86 இலட்சம் ரூபாய் பொதுமக்கள் நன்கொடைகள்மூலம் பெறப்படும். இது தவிர, போக்குவரத்து போன்றவை வகையில் ரூ. 2·50 இலட்சம் செலவினை மாநில அரசு ஏற்க வேண்டி வரும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நிர்வாகச் செலவு அநேகமாக ரூ. 2·58 இலட்சம் 'கேர்' நிறுவனத்திற்கு ஆகும். இதுவும் மாநில அரசினுல் திருப்பித் தரப்படும்.

II. குழந்தைகள் காப்பகங்கள் (பால்வாடிகள்) கட்டுதல்: இந்தத் திட்டத்தின்கீழ், ஆயிரம் குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றுக்கும், அங்கீகரிக்கப்பட்ட கட்டடம் கட்டும் வகையில் ரூ. 6,500 வரை 'கேர்' நிறுவனம் நிதி உதவி வழங்கும். ஒவ்வொரு குழந்தைகள் காப்பகக் கட்டடத்தையும் கட்ட ரூ 7,000 ஆகும். மீதி ரூ. 500ஐப் பொதுமக்கள் நன்கொடையிலிருந்து பெற வேண்டும். கட்டடம் கட்டுவதற்கான மனை இடம் இலவசமாக வழங்கப்படும்.

III. மகளிர் மன்றங்களுக்கு இணைப்பாகச் சிறு சமையல் அறைகள்: உணவு வழங்கும் திட்டத்துக்காக, தற்போதுள்ள மகளிர் மன்றங்களுக்கு இணைப்பாக ஏறத்தாழ 375 நிரந்தரமான சிறு சமையல் அறைகள் கட்டவும் ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு சமையல் அறைக்கும் ரூ. 900 என்ற அளவில், இதற்கான முழுச் செலவையும் இந்த நிலையங்களில் முந்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு வழங்க அரசு ஒப்புக்கொண்டால், 'கேர்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு 'கேர்' நிறுவனத்தின் உதவி கிடைக்குமென அந்நிறுவனம் உறுதி அளித்துள்ளது.

3. இந்தத் திட்டம் முழுமையும் உடனடியாக ஆரம்பிக்கப் போதிய வசதியின்மையால், 'கேர்' நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, இந்தத் திட்டத்தை இரண்டு கட்டமாகச் செயற்படுத்துவது என அரசு முடிவு எடுத்துள்ளது.

முதற்கட்டமாகச் செய்யப்பட விருக்கும் வேலைகள்:

(i) முந்நிலைப் பள்ளி நிலையங்களில் 500 நிலையங்களில் உணவு வழங்கும் திட்டத்தைத் திருத்தி அமைத்தல்; இதற்காக மேலே உள்ள பத்தி 2 (1)ல் கண்டுள்ளபடி, 'கேர்' நிறுவனம் உதவியினை அளிக்கும்.

(ii) 115 குழந்தைகள் காப்பகங்களுக்குக் கட்டடம் கட்டுதல்; இதற்காக மேலே பத்தி 2(ii)ல் கண்டுள்ள படி 'கேர்' நிறுவனம் நிதி உதவி அளிக்கும்.

(iii) இயங்குவதற்குத் தயாராக உள்ள, முந்நிலைப் பள்ளி ஆரம்பிக்கக் கூடிய 375 மகளிர் மன்றங்களில் சிறு சமையல் அறைகள் அமைத்தல்; மேலே பத்தி 2(iii)ல் கண்டுள்ளபடி 'கேர்' நிறுவனம் நிதி உதவி வழங்கும். 1000 நிலையங்களில் உணவு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துதல்; மிச்சமுள்ள 885 குழந்தைகள் காப்பகங்களுக்குக் கட்டடம் கட்டுதல்.

இந்தத் திட்டம் முழுவதையும் செயல்படுத்தி வைக்கின்ற பொறுப்பு, கிராம வளர்ச்சி இயக்குநருடையதாகும். ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அதிகாரத்தின்கீழ் கிராம வளர்ச்சி இயக்குநர் இதைச் செய்வார். மகளிர் நலத் துறை இயக்குநர், சுகாதாரப் பணிகள்-குடும்பக் கட்டுப்பாடு இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரின் இணைந்த ஒத்துழைப்புடன், இத் திட்டத்தினை அவர் செயற்படுத்துவார்.

4. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் உடனடியாகச் செயற்படுத்தப்படும். முதல் கட்டத்தில் 500 நிலையங்களில் உணவு வழங்கும் வேலையானது, இந்த உத்தரவில் இணைப்பு I‌ல் கண்டுள்ள முறையில் நடைபெறும். 375 மகளிர் மன்றங்களில் சமையல் அறைகள் கட்டுதல் இணைப்பு II பகுதி I‌ல் கண்டுள்ள விளக்கமான குறிப்புகளின்படியும், 115 குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டடம் கட்டுதல் இணைப்பு II பகுதி II‌ல் சொல்லியுள்ளபடியும் செயற்படுத்தப்படும். உணவுப் பண்டங்களை வாங்கி வைத்தல், கட்டடங்கள் கட்டுவதற்கான இடங்கள், கட்டடம் கட்டத் தேவையான உபகரணங்களைச் சேகரித்தல் ஆகிய வேலைகள், வேலைத் திட்டத்தின் முதற்கட்ட வேலை துவங்குவதற்கு முன்னால் முடிக்கப்பட வேண்டியுள்ளதால், இவ் வேலை நல்லமுறையில் துவங்கும் வகையில், உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இரண்டாவது கட்ட வேலையானது, கால தாமதமின்றி, இயலுகின்ற பொழுது உடனடியடியாகச் செயற்படுத்தப்படும். இரண்டாவது கட்ட வேலை தொடங்கப் படுவதற்குமுன்னால், ஆயிரம் நிலையங்களில் உணவு அளிக்கும் வேலை நடப்பதற்குச் சமையல் அறைக்கான கட்டட வேலைகள் முடியவேண்டியதும், மிச்சமுள்ள 885 குழந்தைகள் காப்பகங்கள் கட்டக் கட்டட வேலைகளுக்கான அடிப்படைப் பூர்வாங்க ஏற்பாடுகள் இறுதி வடிவம் பெற வேண்டியதும், மிகவும் அவசியமாகும்.

6. முதற்கட்ட வேலையைச் செயற்படுத்த உடனடிச் செலவுகளுக்குக் கீழ்க்கண்ட முறையில் அனுமதி அளிக்கப்படுகிறது:

(i) 1000 'டிரம்'கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ii) 1,800 ரூபாய்க்கு மேற்படாத வகையில் உணவு - வழங்குதலில் சேராத செலவுகளுக்காக அரசின் பங்குத்தொகை.

(iii) மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு பாலசேவிகாவுக்கும் 20 ரூபாய் அளித்தல். இது 500 பேர்களுக்குமேல் போகக்கூடாது.

(iv) பாலசேவிகைக்கு உதவியாக உள்ள ஒவ்வோர் ஆயாவுக்கும் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் அளித்தல். இதுவும் 500 பேர்களுக்குமேல் போகக்கூடாது.

7. இரண்டாவது கட்டவேலையை நிறைவேற்றி வைக்கவும், இதே மாதிரி அநுமதி அளிக்கப்படுகிறது.

8. துறைமுகத்திலிருந்து மாவட்டத் தலைமையிடங்களுக்கு உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்லப் போக்குவரத்துச் செலவுக்காக ரூ. 2·58 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

9. உணவு தயாரித்து வழங்கும் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும். இந்தப் பாத்திரங்கள் வாங்க அரசு மானியம் ஒன்றும் வழங்கப்படமாட்டாது. இதற்காக ஆகும் செலவு முழுவதையும் பொது நன்கொடை மூலம் பெறவேண்டும்.

(ii) 60,000 மக்களுக்கு உடனடியாகப் பயன்படும் வகையில் தலைக்கு நாள் ஒன்றுக்கு 3 பைசா வீதம் பொது நன்கொடையாக வசூலிக்கப்படல் வேண்டும். 1970-71இல் இரண்டாவது கட்டவேலையில் 1,20,000 பேருக்குப் பயன்படும்வகையில் இதே மாதிரி வசூல் செய்யப்படல் வேண்டும்.

கிராமப்புறங்களில் உள்ள மகளிர்-குழந்தைகளுக்கு கணிசமான நன்மைகள் செய்யப்படல் வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆகவே, இந்தத் திட்டமானது வெற்றிகரமாகச் செயல்பட எல்லாக் கட்டங்களிலும் சம்பந்தப் பட்டோர் தனி அக்கறையுடன் செயல்பட வேண்டுமென அரசு வலியுறுத்த விரும்புகிறது. இந்தப் பணியினைச் செம்மையாக நிறைவேற்றுவதில், கிராம வளர்ச்சி இயக்குநருக்கு எல்லா வகையிலும் உதவி புரிய வேண்டுமென, மகளிர் நலத்துறை, கல்வித்துறை, பொதுச் சுகாதாரம் - குடும்பநலத்துறை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்டார அதிகாரிகள் கேட்

டுக்கொள்ளப் படுகிறார்கள். மற்றத் துறை அதிகாரிகளும் இது சம்பந்தமான வேலையில் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு உதவி புரிய வேண்டுமென அரசு எதிர்பார்க்கிறது.

[6-2-70 நாளிட்ட சமூக நலத் துறையின் அரசு ஆணை எண். 76இன் சுருக்கம்.]

இணைப்பு I

1. இத்திட்டத்தினைச் செயல் படுத்தி வைக்கும் அதிகாரியாக, கிராம வளர்ச்சி இயக்குநர் இருப் பார். மகளிர் நலத்துறை இயக்குநர் பொது சுகாதாரம் - சூடும்பநலத் துறை இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோரின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இத்திட்டத்தினை அவர் செயல் படுத்திவைப்பார்.

2. இத்திட்டத்தை அவ்வப்போது பரிசீலனை செய்து ஆய்வு செய்வதற்காக வேண்டி 'இணைப்புக் குழு' (State Level Co-ordination Committee) ஒன்று மாநில அளவில் ஏற்படுத்தப்படும். இக்குழுவில் கீழ்க் கண்டவர்கள் அங்கம் வகிப்பர் :

1.	மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்	— தலைவர்.
2.	ஊர்வளர்ச்சி - உள்ளாட்சித்துறைச் செயலாளர்	— உறுப்பினர்
3.	சமூக நலத்துறைத் துணைச்செயலாளர்	— உறுப்பினர்
4.	நிதித்துறைத் துணைச்செயலாளர்	— உறுப்பினர்
5.	கிராம வளர்ச்சி இயக்குநர்	— உறுப்பினர் செயலாளர்
6.	கிராம வளர்ச்சித் துணை இயக்குநர் (கல்வி)	— உறுப்பினர்
7.	பள்ளிக்கல்வி இயக்குநர்	— உறுப்பினர்
8.	பொது சுகாதாரம் - குடும்பநலத் துறை இயக்குநர்	— உறுப்பினர்
9.	மகளிர் நலத்துறை இயக்குநர்	— உறுப்பினர்

மாவட்ட அளவில் : மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்திற்குப் பொறுப்பானவர்களே. அவர்களுக்கு நேர்முக உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) இந்தப் பணியில் உதவி புரிவார். மாவட்ட அளவில் உள்ள குழு, கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கியதாக இருக்கும் :

1.	மாவட்ட ஆட்சித் தலைவர்	— தலைவர்
2.	வருவாய்க் கோட்ட அதிகாரிகள்	— உறுப்பினர்கள்
3.	மாவட்டக் கல்வி அதிகாரிகள்	— உறுப்பினர்கள்
4.	மாவட்டச் சுகாதார அதிகாரி	— உறுப்பினர்
5.	மாவட்ட மகளிர் நல அதிகாரி	— உறுப்பினர்
6.	ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இருவர்	— உறுப்பினர்கள்
7.	சட்டமன்ற உறுப்பினர்கள் இருவர்	— உறுப்பினர்கள்
8.	நேர்முக உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி)	— உறுப்பினர் செயலாளர்

வட்டார அளவில்: வட்டார அளவில், இப்பொழுதுள்ள மகளிர் நலக் குழுவினர் இத் திட்டத்திற்குப் பொறுப்பாக இருப்பார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர் இதற்குத் தலைவராகவும், வட்டார வளர்ச்சி அதிகாரி செயலாளராகவும் இருப்பார். பள்ளிகளின் துணை ஆய் வாளர் ஓர் உறுப்பினராக இருப்பார்.

கிராம அளவில்: கிராம அளவில் இத்திட்டம் நன்கு நடைபெறுகிறதா என்பதைக் கவனிக்கவும், உணவு வகைகள் தயாரித்து விநியோகம் செய்வதைக் கவனிக்கவும் கீழ்க் கண்டவர்களைக் கொண்ட ஒரு குழு இருக்கும்:

1. ஊராட்சித் தலைவர் — தலைவர்
2. ஊராட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மகளிர் உறுப்பினர் — உறுப்பினர்
3. சம்பந்தப்பட்ட பாலசேவிகை — உறுப்பினர் செயலாளர்
4. மகளிர் மன்றத்தின் அமைப்பாளர் (இருந்தால்) — உறுப்பினர்
5. மகளிர் மன்றத் தலைவி — உறுப்பினர்
6. அங்கு உள்ள பள்ளி அல்லது அருகில் உள்ள பள்ளியின் தலைமை ஆசிரியை - தலைமை ஆசிரியர் — உறுப்பினர்

(iii) வட்டார அளவிலான பணிகட்கு வட்டார வளர்ச்சி அதிகாரி மூலப் பொறுப்பானவர்.

இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் 'கேர்' நிறுவனத்திற்கும் அரசின் ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறைக்கும் இணைப்பு அதிகாரியாகக் கிராம வளர்ச்சி இயக்குநர் இருப்பார்.

வட்டார அளவில் முக்கிய சேவிகைகள் வட்டார அளவில் உள்ள குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஊராட்சி, கிராம அளவில் உள்ள இணைப்புக் குழு, குழந்தைகள் - தாய்மார்கள், கிராம சமுதாயத்தில் சமமான முறையில் தேர்ந்தெடுக்கும் பணியினைச் செய்யும்.

மதிய உணவுத் திட்டத்திற்காக உணவுப் பண்டங்கள் வருவதைக் கவனிக்கும் கல்வித்துறை, இந்த வேலையைக் குழந்தைகள் காப்பகங்களுக்காகவும் செய்யும்.

[6-2-70 நாளிட்ட சமூகநலத் துறையின் அரசு ஆணை 76-ன் இணைப்பின் சுருக்கம்.]

தேர்தல் முடியும்வரை ஊராட்சிகளில் தெருப் பெயர்களை மாற்றக் கூடாது!

Panchayats—changing of names of streets—Banned.]

[Memo. No. 12341/Pt. Elections) 70-2, R.D.L.A., dt. 9-2-70]

வருகின்ற ஊராட்சிகள் தேர்தல் முடிந்து முடியும்வரை, பேரூராட்சிகளிலோ, ஊராட்சிகளிலோ உள்ள தெருக்களின் பெயர்களை மாற்றுவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

ஊராட்சித் தேர்தலில் வாக்கெடுப்பு நேரம்



[Elections—Ordinary—Panchayats—Hours of Poll—Fixed—Counting of Votes in common place—Intructions—Issued.]

[G.O. Ms. No. 254, R.D.L.A. Dept; dt. 20-2-70.]

1. ஊராட்சிகளில் வருகின்ற சாதாரணத் தேர்தலில் வாக்கெடுப்பு நேரம் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரையில் தொடர்ந்து இருக்கவேண்டும்; இடைவேளை ஒன்றும் இருக்கக்கூடாது.

பேரூராட்சிகளில் வாக்கெடுப்பு நேரம் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரையில் இடைவேளை ஒன்றும் இல்லாமல் தொடர்ந்து இருக்கவேண்டும் என அரசு ஆணை பிறப்பிக்கிறது.

2. ஊராட்சிகள், பேரூராட்சிகளில் உபயோகப்படுத்தப்படட வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெடுப்பு முடிந்தவுடன், வாக்குகளை எண்ணுவதற்காக ஒரு பொது இடத்திற்குக் கொண்டு வரப்படவேண்டுமெனவும் அரசு ஆணை பிறப்பிக்கிறது.

[ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 20-2-70 தேதியிட்ட அரசு ஆணை எண் 254.

ஊராட்சிகளில் வார்டுகளைத் திருத்தி அமைத்தல்

உறுப்பினர் இடங்களைத் திருத்தி ஒதுக்குதல்

[Panchayats—Redelimitation of wards and reallocation of seats—Disparities—Rectification of.]

[Memo. No. 148808/pt. Elections/69-1, R.D L.A, dt. 7-1-70.]

ஒவ்வொரு வார்டிலும் உள்ள வாக்காளர் எண்ணிக்கையில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் உள்ள ஊராட்சிகள் அதிகமாக உள்ளதாகவும், குறைந்த வாக்காளர் எண்ணிக்கை இருந்து அதிகப்படியான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்ற நிலையிலும், அதிகப்படியான வாக்காளர் எண்ணிக்கை இருந்து குறைந்த அளவில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்ற நிலையிலும் வார்டுகள் உள்ளன என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை ஒட்டி, இப்பொழுதுள்ள வாக்காளர் எண்ணிக்கையை வைத்து வார்டுகளைத் திருத்தி அமைக்காமலேயே வார்டுகளிடையே உறுப்பினர்களின் எண்ணிக்கையை, திருத்தி ஒதுக்கலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

2. குறைந்த எண்ணிக்கை வாக்காளர் உள்ள ஒரு வார்டு அதிகப்படியான உறுப்பினர்களை ஊராட்சிக்கு அனுப்புவதோ, அதிக எண்ணிக்கை வாக்காளர் உள்ள வார்டு குறைந்த உறுப்பினர்களை அனுப்புவதோ நியாயமில்லை என அரசு கருதுகிறது. வார்டில் உள்ள வாக்காளர் எண்ணிக்கை — தேர்ந்தெடுத்தனுப்பப்படும் உறுப்பினர் எண்ணிக்கை இந்த இரண்டுக்குமிடையே நியாயமான விகிதாசாரம் இருக்கவேண்டுமென வும், ஆகவே, மேற்சொல்லப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் திருத்தப்பட வேண்டுமெனவும் அரசு கருதுகிறது. தங்கள் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளில் அப்படிப்பட்ட ஊராட்சிகள் இருந்தால், அந்த ஏற்றத்தாழ்வுகளை (disparities) உடனடியாக, 31-10-69 நாளிட்ட அரசுக்

குறிப்பாணை எண் 124412/இல் சொல்லப்பட்ட விதிமுறைகளின்படி, தேர்த்து வைக்கவேண்டுமென சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தவிர, மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[7-1-70 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசுக் குறிப்பாணை எண்: 148808/ஊராட்சித் தேர்தல் dt. 69-1.]

ஊராட்சித் தேர்தல் – வாக்காளர் பட்டியல் தயாரித்தல்

[Electoral Rolls—Panchayats lying in more than one Taluk—Preparation and publication of—Authorised persons for—orders issued]

சில ஊராட்சிகள் ஒரு தாலுக்கா விற்கோ அல்லது ஒருபகுதி தாலுக்கா (Sub-Taluk) விற்கோ மேற்பட்ட எல்லைப் பரப்பில் அமைந்துள்ளன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஊராட்சிகளின் வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடுகிற பொறுப்பு எவ்வெத் தாசில்தார்கள் அல்லது தனித் துணைத் தாசில்தார்களின் வசம் இருக்கவேண்டும என்ற கேள்வி எழும்பியுள்ளது. அரசு இப் பொருளைக் கவனத்துடன் ஆய்வு செய்து, கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது:

1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 20ஆவது பிரிவு துணைப் பிரிவு (2)இன் கீழ், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இவ்வாணையின் இணைப்பில் பகுதி 3-ல் குறிப்பிட்டுள்ள தாசில்தார் அல்லது தனித் துணைத் தாசில்தார் அவர்களை ஊராட்சித் தேர்தல் பதிவு அதிகாரியாக (Panchayat Electoral Registration officer) நியமனம் செய்து, பகுதி 2ல் குறிப்பிட்டுள்ள பொறுத்த வரையில் அந்தத் துணைப் பிரிவின் கீழ் பொறுப்புகளை ஆற்றப் பொறுப்பாளராக நியமனம் செய்கிறார்.

[16-2-70 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 234.]

புதிய வேர்க்கடலை

பொள்ளாச்சியிலுள்ள வேர்க்கடலை ஆராய்ச்சி நிலையம், 'பொள்ளாச்சி-1' என்ற ஒரு புதிய வித்தைக் கண்டுபிடித்துள்ளது. திண்டிவனத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைத்த 'டி.எம்.வி-2' என்ற வேர்க்கடலை இனத்தைக் காட்டிலும் இதில் அதிக எண்ணெய்ச் சத்துக்கள் இருப்பதாகவும், 30 முதல் 36 சதவீதம்வரை மிகு விளைச்சல் கிடைக்குமென்றும் தெரிந்துள்ளது.

'யோஜனா'

அரசு ஆணை எண் 234இன்

இணைப்பு

ஒரு தாலுக்காவில் மேற்பட்ட பிரதேசப் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சிகளும், அவற்றிற்கு வாக்காளர் பட்டியல் வெளியிடப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தாசில்தார்களும், தனி துணைத் தாசில்தார்களும்.

வரிசை எண் (1)	மாவட்டத்தின் பெயர் (2)	ஊராட்சியின் பெயர் (3)	பொறுப்பு ஒப்படைக்கப் பட்ட தாலுகா அதிகாரி (4)
1.	செங்கற்பட்டு	1. சோமதேவன்பட்டு ஊராட்சி	தாசில்தார், திருவள்ளூர்
		2. அரசூர் ஊராட்சி	தாசில்தார், பொன்னேரி
2.	தஞ்சாவூர்	1. செருவாவிடுதி ஊராட்சி	தாசில்தார், பட்டுக்கோட்டை
		2. நதியம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், பேராவூரணி
3.	இராமநாதபுரம்	1. ஒடத்தூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், மானமதுரை
		2. திம்மாபுரம் ஊராட்சி	தாசில்தார், அறுப்புக்கோட்டை
		3. வி. கரிசல்குளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், திருச்சுழி
		4. காட்டானூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், திருச்சுழி
		5. சிறுவானூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், திருச்சுழி
		6. அழகாபுரி ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், திருச்சுழி
		7. தஞ்சாகூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், மானமதுரை
		8. பொத்தப்பாசேரி ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், திருச்சுழி
		9. ஏலுதிகோட்டை ஊராட்சி	தாசில்தார், பரமக்குடி
		10. சின்னக்கண்ணனூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், மானமதுரை
		11. பெரியகோட்டை ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
		12. கிழப்பிடாவூர் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
		13. சிறுகுடி ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், மானமதுரை

14.	மேலப்பிடாவூர் ஊராட்சி	தாசில்தார், மானமதுரை
15.	மேலரங்கியம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், மானமதுரை
16.	கூனங்குளம் ஊராட்சி	தாசில்தார், பரமக்குடி
17.	கள்ளிக்குடி ஊராட்சி	தாசில்தார், பரமக்குடி
18.	தாடியமங்கலம் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
19.	தாயமங்கலம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், இளையாங்குடி
20.	காரைக்குளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், இளையாங்குடி
21.	கலகுளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், இளையாங்குடி
22.	கீழநெட்டூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், இளையாங்குடி
23.	பனிக்குரிப்பு ஊராட்சி	தாசில்தார், அருப்புக்கோட்டை
24.	அரசனூர் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
25.	அம்மன்பட்டி ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
26.	நீடோடை ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
27.	கலகொம்பை ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
28.	செம்பனூர் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
29.	மேலமருங்கூர் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
30.	தேமாவளி ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
31.	பெரிய கண்ணனூர் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
32.	சேதம்பால் ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
33.	கட்டகுடி ஊராட்சி	தாசில்தார், சிவகங்கை
34.	அதங்குடி ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
35.	இளங்குடி ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
36.	உருத்திக்கோட்டை ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
37.	என். மணக்குடி ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
38.	திராணி ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
39.	நகடி ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
40.	புளியல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
41.	வெட்டிவயல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை

இணைப்பு

ஒரு தாலூக்காவில் மேற்பட்ட பிரதேசப் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சிகளும், அவற்றிற்கு வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தாசில்தார்களும், தனித் துணைத் தாசில்தார்களும்.

வரிசை எண் (1)	மாவட்டத்தின் பெயர் (2)	ஊராட்சியின் பெயர் (3)	பொறுப்பு ஒப்படைக்கப் பட்ட தாலூகா அதிகாரி (4)
		42. கைகளத்தூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		43. நாச்சாங்குளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		44. வீரை ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		45. தனவயல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		46. எளுவங்கோட்டை ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		47. பனங்குளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		48. கண்டிபூர் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		49. திருப்பாக்கோட்டை ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		50. கள்விவயல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		51. களிபுல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், காரைக்குடி
		52. தல்லாக்காவூர் ஊராட்சி	தாசில்தார், திருப்பத்தூர்
		58. பெரிய கீரமங்கலம் ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
		54. குருந்தனக்கோட்டை	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		55. கோவிந்தமங்கலம் ஊராட்சி	தாசில்தார், திருவாடானை
		56. செலுகை ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		57. புதுக்குறிச்சி-பிடரனேந்தல் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		58. தானுக்குடி ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், தேவகோட்டை
		59. இளம் செட்டிகுளம் ஊராட்சி	தனித் துணைத் தாசில்தார், இராஜபாளையம்
		60. மேலக்கொடுமலூர் ஊராட்சி	தாசில்தார், முதுகளத்தூர்
		61. கீழ்க்கொடுமலூர் ஊராட்சி	தாசில்தார், முதுகளத்தூர்
4.	திருநெல்வேலி	1. புதுப்பட்டி ஊராட்சி	தாசில்தார், கோவில்பட்டி

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,
பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:

கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேகிகாச்சாரி ரோடு
சென்னை-4



ஒரு மேட்டின்மீது ஒரு சிறிய கட்டடம்; அதைத் தழுவி ஒரு கீற்றுக் கொட்டகை.

உர மூட்டைகள், பூச்சி மருந்து கூள நிறையச் சுமந்து வந்த இரண்டு லாரிகள், அக்கட்டடத்தின் முன்னுள்ள சாலையில் பேரொலியுடன் நிற்கின்றன. மூட்டைகள், பொருட்கள் விரைந்து இறக்கப்பட்டுக் கட்டடத்திற்குள் சுமந்து செல்லப்படுகின்றன. இது ஒருபுறம். இன்னொரு புறம், அதே மூட்டைகள், பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு, மிதி வண்டிகள், கட்டை வண்டிகளில் மீண்டும் உடனேயே ஏற்றப்படுகின்றன.

எறும்பின் சுறுசுறுப்பைக் கொண்டு இயங்கும் அச்சிறிய, எளிய கட்டடத்தின் சிறப்பென்ன? நுழைந்து பார்ப்போம்.

அது ஒரு கூட்டுறவுச் சங்கம்.

வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சிறப்பு அதற்குப் போதாதா?

ஒரு கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு சிறந்த முறையில் இயங்க வேண்டுமென்பதற்கு நல்லிலக்கணமாகத் திகழ்வது, 'ஆண்டார்குப்பம் கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கம்.'

இது செங்கை மாவட்ட மாதவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடம்பாக்கம் ஊராட்சியில் அமைந்துள்ளது.

5000 ஏக்கர் 7500 உழவர்களுக்கு

அண்டார்குப்பம், சென்றம் பாக்கம், அரியலூர், இலந்தஞ் சேரி, சடையன் குப்பம், கொசப்பூர் ஆகிய ஊர்களிலுள்ள சுமார் 5000 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களைத் தழுவிவாழும் சுமார் 7500 உழவர் பெருமக்களின் அன்றாடத் தேவைகளை, இச் சங்கம் குறைவின்றி நிறைவேற்றுகிறது.

25-3-1968இல் தொடங்கப் பெற்ற ஆண்டார்குப்பம் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் 670 உறுப்பினர்கள் அங்கம்வகிக்கின்றனர். சங்கத்தலைவர் திரு. அ.ல. தயாளன்; துணைத்தலைவர் திரு. கோ. அப்பாதுரை. இது அமைந்துள்ள கடம்பாக்கம் ஊராட்சித் தலைவரின் பெயர் திரு. இலட்சுமணன்.

நிதிவளம்

"670 உறுப்பினர்கள் செலுத்திய ரூ. 15,275 மூலதனத்தைக் கொண்

டுள்ள சங்கம், காஞ்சி மத்தியக் கூட்டுறவு வங்கியில் பங்கு ஒன்றிற்கு ரூ. 100 வீதம் செலுத்திய தொகை ரூ. 14,700; மத்திய சங்கத்திலிருந்து பெற்ற கடன் தொகையான ரூ. 1,63,640இல் ரூ. 60,763 ஐச் சங்கம் திருப்பியளித்து விட்டது'' என்று சங்கத்தின் நிதி வளத்தைப்பற்றி விளக்கினர், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர், திரு. இரா. சங்கரன்.

சங்க அலுவலர்களுக்கு ஆண்டு தோறும் ரூ. 3600 ஊதியம் அளிக்கப்படுகிறது. கட்டட வாடகையாக ஆண்டுக்கு ரூ. 480 செலவாகிறது.

சங்கத் தொடக்கத்திலிருந்து 21-2-1970 வரை விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 1,72,939. நாளொன்றின் சராசரி விற்பனை ரூ. 500 ஆகும். ஆண்டு இறுதி வருவாய் ரூ. 2,500 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

விற்பனைப் பொருள்கள்

உழவர்களுக்குத் தேவைப்படும் பூரியா, 'அம்மோனியம் சல்பேட்', 'கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்', வாழையுரங்கள், 'அம்மோனியம் பாஸ்பேட்,' 'ஸ்டாண்டர்ட் உரம் 2 மற்றும் 8,' 'பொட்டாஷ்' போன்ற பல்வகை உரங்களும், 'பி. எச். சி 10%, 15%,' 'செவின் 5%, 10%,' 'எண்ட்ரின்,' 'டிதேன்,' 'மீபாலிடால்,' 'செவிடால்' போன்ற பூச்சி மருந்துகள் அனைத்தும் சங்கத்தில் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்.

தவிர, ஆண்டார்குப்பம் சங்கம் இரண்டு விசைத் தெளிப்பான்களையும் இவ்வாண்டு சனவரித் திங்களில் வாங்கியுள்ளது. நாளொன்றிற்கு ரூ. 5 வீதம் வாடகைச் செலுத்திக் தெளிப்பானை உழவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றால் இது வரை ரூ.150வரை வருவாய் கிடைத்துள்ளது.

வரும் ஆண்டுகளில்

''உங்கள் சங்கத்திற்கு ஏன் சொந்தக் கட்டடம் இல்லை?'' என்று வினவியதற்கு, ''சொந்தக் கட்டடத்துடன் தொடங்க வேண்டுமாயின், பணம் முழுவதும் கட்டடத்தில் முடங்கிவிடுமாதலால், நாங்கள் வாடகைக் கட்டடத்திலேயே சங்கத்தைத் துவக்கினோம். வரும் ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் அமைத்துக் கொள்வோம்'' என்று நம்பிக்கையுடன் பதிலளித்தார் திரு. அ. ல. தயாளன்.

உழவர்களுக்கு வாடகையில் தருதற்கு, இயந்திரக் கலப்பைகளை வாங்குதற்கும் சங்கம் திட்டம் உருவாக்கியுள்ளது என்பதை அறிந்து மகிழ்வடைய முடிந்தது.

ஆணையரின் பெருமை

''பின்தங்கிய ஒரு பகுதியிலேயே 'ஆண்டார்குப்பம் கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கம்' அமைந்திருந்தாலும், இங்குள்ள மக்களின் தணியா ஆர்வம், சலியா உழைப்பினால், இஃது அரசு உதவியின்றியே சிறப்பாகச் செயற்படுகிறது. 'ஐ. ஆர்-8', வாழை, காய்கறிப் பயிர்களுக்கெனத் தீவிர உரத் திட்டத்தில், சுமார் ரூ.70,000 வரை இச்சங்கத்தின் வாயிலாகக் கடன் வழங்கியுள்ளோம்'' என்று பெருமையுடன் கூறுகிறார், மாதவரம் ஒன்றிய ஆணையர் திரு. கு. பங்கரோஸ் அவர்கள்.

ஆண்டார்குப்பம் சங்கம் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோம்!

சிறிய இடம்; பெரிய செயல்!

கூட்டுறவுக் கடன் துறையில்...!

நமது வேளாண்மைப் பெருமக்களின் தேவைகளுக்காக நிறுவனக் கடன் உதவியைப் பெறுவதற்கான பல ஏற்பாடுகளை நாங்கள் செய்துள்ளோம். கூட்டுறவுக் கடன் துறையில் மட்டும் 1966—67 இல் குறுகிய காலக் கடன் ஆகவும் நடுத்தரக் காலக் கடனுகவும் வழங்கப்பட்ட 31·44 கோடி ரூபாய் கடன் தொகை, 1968-69இல் 44·12 கோடி ரூபாய் ஆக உயர்ந்தது. நடப்பு ஆண்டில் அது 62·50 கோடி ரூபாயாக மேலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் அயரா முயற்சியால் இந்த ஆண்டு நிலவள வங்கிகளின் எண்ணிக்கை 105இலிருந்து 166ஆக உயர்ந்துள்ளது. 1966-67இல் வழங்கியுள்ள நீண்டகாலக் கடன்களி 4·27 கோடி ரூபாயிலிருந்து 1968-69இல் 14·67 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 1970—71இல் இது ரூபாய் 16 கோடிக்கும் அதிகமான அளவுக்கு மேலும் உயருமென எதிர் பார்க்கப்படுகிறது. இவற்றிற்குமேல், வேளாண்மைக் கடன் உதவித் துறையில் வணிக வங்கிகளும் பங்கேற்கும் படிச் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இம் மாநிலத்தின் பற்பல மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் காரணமாக, மாநில அரசு அளிக்கும் உத்தரவாதப்படி இவ்வங்கிகள் உழவர்களுக்கு ஏறக்குறைய 80 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் வழங்க முன்வந்துள்ளன. நாங்கள் பயன் படுத்திக்கொண்டுள்ள மூன்றாவது வகை நிறுவனக் கடன் உதவி, வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின்மூலம் அளிக்கப்படுபவையாகும். இக்கழகத்தின் வாயிலாக விசையேற்றங்களையும் டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் திட்டப்படி வாங்குவதற்கு 1968—69 இல் 121 இலட்சம் ரூபாய் அளவுக்கும், நடப்பு ஆண்டில் 127 இலட்சம் ரூபாய் அளவுக்கும் நாங்கள் கடன் வழங்கியுள்ளோம். 1966—67 இல் 209 டிராக்டர்கள் வழங்கப்பட்டதற்கு மாறாக, கடந்த மூன்று ஆண்டுகளில் இம் மாநில முன்னேற்ற நோக்குள்ள உழவர் பெருமக்களுக்கு 1,368 டிராக்டர்கள் நாங்கள் வழங்கியுள்ளோம். கிராமங்களில், முந்தைய மூன்று திட்டக்கால அளவுகளில், அதாவது 15 ஆண்டுகளில், 2·9 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில்மட்டும் கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களில் மொத்த எண்ணிக்கை 1·7 இலட்சம் ஆகும். மற்றும் மொத்தம் 72 கோடி ரூபாய் செலவில் 25,500 கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்கும், 34,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்கும், 34,600 விசையேற்றங்களை நிறுவுவதற்கும், 3,000 டிராக்டர்களை வழங்குவதற்குமான திட்டத்தைப்பற்றி இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றுக்காக நாங்கள் தயாரித்துள்ள திட்ட அறிக்கையை வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் ஆய்வு செய்து வருகிறது. இத் திட்டத்தினுல் இம் மாநிலத்தின் உணவு தானிய மொத்த உற்பத்தி 3·88 இலட்சம் டன் அளவுக்கும், ரொக்கப் பயிர்களின் (Cash Crops) மொத்த உற்பத்தி 2·58 இலட்சம் டன் அளவிற்கும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

[தமிழ் நாடு நிதியமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் 1970-71ஆம் ஆண்டுக்குரிய நிதி நிலே அறிக்கைப் பேருரையில் குறிப்பிட்ட கருத்துக்கள்.]

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

FACT


பாக்ட் ...யானே மார்க் உரங்கள்


பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம் : 2-வது மாடி,
19, மாசானடீ-இன்-சீப்-ரோடு,
சென்னை-8.

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தன னீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர் களுக்கு வேண்டிய உனவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானே மார்க்













Caterpillar FT 2203 TM



சில திங்கள்களிலேயே மிகு ஆதாயம் பெறுதற்குப் பூக்கோசு (காலிஃபிளவர்) பயிரிடலாம். ஒருமுறை இதைப் பயிரிடுவதனால், சூ. 3,200 வரை இறுதி வருவாய் கிடைக்கும்; கிடைத்துள்ளது.

7½ செ.மீட்டர் உயரமுள்ள பாத்திகளில் 10 செ.மீ. × 12½ செ.மீட்டர் அளவில் 300 கிராம் எடையுள்ள 'எர்லி குமாரி' (Early Kumari) என்ற விதைகளை மே திங்களில் விதையுங்கள்.

நன்கு மக்கிய பண்ணையுரத்தில் 12 முதல் 15 கூடைகள் நிறைந்த உரத்தை நாற்றங்காலில் இட்டு, சிறந்த முறையில் வயலுடன் அதைக் கலந்துவிடுமாறு செய்யுங்கள். சாம்பல் தூளால், விதைகளை இலேசாக மூடுங்கள். கைக் கருவியைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை பாசனம் செய்யுங்கள். சூரிய வெப்பத்திலிருந்து நாற்றங்காலைக் காப்பதற்கென, கீற்றுக் கொட்டகை ஒன்றைத் தற்காலிகமாக அமைக்கலாம்.

ஏக்கர் ஒன்றிற்கு 22 வண்டிச் சுமை வீதம் கணக்கிட்டு, மக்கிய பண்ணையுரத்தை வயலிற்குத் தரவேண்டும். உரமிட்ட பின்னர், வயலை ஏழு முறைகள் உழுது உரம் நன்றாகக் கலந்துவிடுதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

உரமிடுதல்: நீரின் திசைகளில் நடவு செய்யவேண்டும். பாத்திக்குப் பாத்தி 1½ அடியும், செடிக்குச் செடி 1 அடியும் இருக்குமாறு அளந்துகொண்டு நடவேண்டும்.

'கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்' 2 குவிண்டல், 'சூப்பர் பாஸ்பேட்' 1·25 குவிண்டல், 'பொட்டாஷ்' 25 கிலோ ஆகியவற்றை ஓர் ஏக்கருக்கு உரங்களாகத் தரவேண்டும். 'கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்' உரத்தைமட்டும் மூன்று முறைகளில் சம அளவாக இடுதல் அவசியமாகும்.

நடவு நேரத்தில் 'சூப்பர் பாஸ்பேட்'டுடன் ஒரு முறையும், பிறகு ஒரு திங்கள் கழித்துத் தனியே இரண்டாம் முறையும், பூக்கோசு வெளிவரும் தருணத்தில் இறுதி முறையாகவும் 'கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்' அளிக்க வேண்டும்.

நான்கைந்து நாட்கள் இடைவெளியில் பாசனம் செய்யுங்கள்.

பூவை மூடிவைத்தல்: சூரிய ஒளியினால் பூக்கோசு மஞ்சள் நிறமாக மாறிவிடக்கூடும். அதனால் வாசனையும் குறைந்து, அழகின்றி இருக்கும். எனவே, இவற்றைத் தடுப்பதற்கு ஒரு முறையுண்டு. பூக்கோசின் தழைகளைக்கொண்டே பூவை நன்றாக மூடுங்கள்.

பயிர் வளரும் காலங்களில் 'டி.டி.டி' மற்றும் 'மாலத்தியான்' கொண்டு இரண்டு அல்லது மூன்று முறை பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும்.

மேற்சொன்னவற்றைக் கையாண்டு பூக்கோசு பயிரிட்டால் செலவுபோக இறுதி ஆதாயம் சூ. 3200 கிடைப்பது உறுதி.

வேளாண்மைப் பணிகளில் முன்னேற்றம்

கடந்த மூன்றாண்டுகளில் உணவு தானிய மொத்த உற்பத்தி 1966—67இல் 57·9 இலட்சம் டன்களாக இருந்ததற்கு மாறாக, 1969—70இல் 63 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. தற்போதைய அரசு செயல்படுத்திவரும் பசுமைப் புரட்சி வேளாண்மைத் தொழில் நுட்பங்களுக்கும் இம்மாநிலம் வழிவழியாகக் கையாண்டு வரும் வேளாண்மை முறைகளுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் மனநிறைவளிக்கிற வகையில் செயல்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான நமது முயற்சிகளின் முக்கிய அடிப்படையாயுள்ள மிகு பயன் தரும் பயிர் வகைகள் திட்டத்தின்கீழ் 1966—67இல் 5·27 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டதற்கு மாறாக, 1968—69இல் ஏறத்தாழ 17·08 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 24 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தின்கீழ்ப் பயிரிடப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டில் மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் நெற்பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவில் பாதியளவைக் கொணர இயலும் என எதிர்பார்க்கிறோம். ஐ.ஆர். 8இன்கீழ் நடப்பு ஆண்டில் 7 இலட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொணர இயலும் என நம்புகின்றோம். 1966—67இல் எந்தப் பரப்பளவிலும் இவ்வகைப் பயிர் பயிரிடப்படவில்லை. சுவர்ணவாரி, குறுவைப் பருவங்களில் ஐ.ஆர். 8, அதன் துணை வகைகள் ஆகியவற்றின்கீழ்ப் பெரும் பரப்பளவுகளைக் கொண்டுவர இயலும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். 1970—71 வரவு-செலவுத் திட்டம் வேளாண்மைப் பகுதி மும்முரத் திட்டத்தைத் திருச்சி மாவட்டத்திற்கு நீட்டிக்க வகை செய்கிறது. நமது வேளாண்மைத் துறை, விதைகளைத் தரக் கட்டுப்பாடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தி, விதைகளுக்குச் சான்றளிக்கும் திட்டத்தை இப்போது தொடங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் குடுமியான்மலையிலும் சாக்கோட்டையிலும் விதை பக்குவப்படுத்தும் பிரிவுகள் நிறுவப்படும். மதுரையில் விதைப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று துவக்கப்படும். பரமக்குடியிலும் திருச்சியிலும் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் 1970—71இல் செயல்படத் தொடங்கும். நைட்ரஜன் உர வகைகளைப் பயன்படுத்தும் அளவு 1966—67இல் 85,000 டன்களாக இருந்ததற்கு மாறாக, 1969—70இல் 1,33,000 டன் அளவிற்கு உயர்ந்துள்ளது.

மிகு பயன்தரும் பயிர் வகைகள் திட்டத்தின் காரணமாகப் பூச்சிக் கொல்லிகள், மருந்து தெளிப்பான்கள் இவற்றைப் பயன்படுத்தும் அளவும் உயர்ந்துள்ளதென ஒப்புக் கொள்ளப்படுகிறது. 1966—67இல் விமானம்மூலம் 28,000 ஏக்கர் நிலங்களுக்கு மருந்து தெளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் சுமார் 2 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு விமானம்மூலம் மருந்து தெளிக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். 1970—71இல் 10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இம்முறையில் மருந்து தெளிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

[நிதியமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அவர்கள் 1970—71ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கை உரையில் குறிப்பிட்டுள்ளவை.]



வேம்படிதாளத்தின்
வியத்தகு சாதனை

கிணற்றில் ஒரு சிறு கல்லைத் தூக்கி எறிந்தவுடன் அதைச் சுற்றிச் சிறுசிறு வட்டங்கள் தோன்றிப் பெரிதாக மாறுவதைப்போல், மற்ற இடங்களிலுள்ள சீரணித் தொண்டர்களின் பணிகளைப் பார்க்கும்பொழுது, இதே போன்று உங்கள் ஊர்களிலும், மக்களுக்குநன்மை பயக்கும் பல சிறப்பான பணிகளைச் செய்து முடிக்க உங்களின் உள்ளம் துடிக்கும் என்பது எனக்கு நன்றாகத்தெரியும், எண்ணத்தைச் செயலாக்கி ஏற்றம் பெறுங்கள்!

தன் கையே தனக்குதவி—இப்பழமொழி தெரியாதார் தமிழகத்தில் இல்லை. ஆயினும், இப்பழமொழியின் உட்கிடக்கையினை உணர்ந்து செயல்படுவோர் அருகி அருகிக் குறைந்து வருவதை நாம் கண்டு வருகிறோம். எதற்கும் யாரையேனும் எதிர்பார்க்கும் இழிநிலை, தனித்த மனிதர்களையும் தாண்டித் தேசிய அளவில் வளர்ந்துவிட்டதாலேயே, நம் அடிப்படைத் தேவையான உணவுக்குங்கூட, அயல்நாட்டுக் கப்பல்களை நம்பி நிற்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். நம் தேவையினை நாமே பூர்த்தி செய்துகொள்ளும் தன்னுறுதியும். தன்னுணர்வும்பெற நம்மை நாமே தயார்ப் படுத்திக்கொள்ளும் நிலையினை நாம் எய்தியே தீரவேண்டியவர்களாகிறோம். எதற்கும் அயலாரையோ அரசினரையோ எதிர்நோக்கும் பண்பு நம்மில் வளரவளர, நம் முன்னேற்றம் தடைப்பட்டு நிற்பதும் உறுதியாகிவிட்டது. இந்த மந்த நிலையினின்றும் நாட்டையும் நம்மையும் மீட்க, அறிஞர் அண்ணா அன்புடன் வழங்கிய திட்டமே சீரணி. மக்கள், தங்கள் பகுதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத் தாங்களே முன்வரவேண்டும் என்பதே அதன் அடிப்படைத் தத்துவமாகும்.

சீரணி செயற்படுத்திய அற்புதத் திட்டங்களை நாடு நன்கறியும். அச்சாதனைக்கே சிகரம் வைத்தாற்போல் தனிப்பட்டு நிற்கும் சில கிராமங்கள், ஊராட்சிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் வேம்படிதாளம் என்னும் கிராமம்.

சேலம் மாவட்டத்தில் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஓர் ஊர்தான் வேம்படிதாளம். தமிழ் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஊர்களில் இதுவும் ஒன்று. அப்படி யிருக்க இவ்வூரின் சிறப்புத்தான் என்ன? இவ்வினு எழவேண்டிய தொன்றுதான்?

மற்ற ஊர்களைப்போல் இதுவும் ஒன்றுக இருக்குமானல் பத்தோடு இதுவும் ஒன்று என்று எண்ணி இருந்துவிடலாம். ஆனல் அத்தகைய நிலையில் இவ்வூர் இல்லை. பின் என்ன தான் செய்திருக்கிறது? என்று அவ சரமாகக் கேட்கத் தோன்றுகிறதல் லவா? அவசரப்படாதீர்கள். ஆனல் ஆழ்ந்து படியுங்கள், அதன் சாதனை களை அதன்பின் நீங்களே கூறுவீர்கள், உள்ளபடியே இதன் சாதனை வியத் தகு ஒன்றுதான் என்று. அரசினர் ஆதரவு மான்யத்துடன் செயற்படுத் தப்பட்ட இட்டங்கள் பலவற்றைத் தவிர, தங்களின் முழு உழைப்பை யும், மூலதனத்தையும் மட்டுமே கொண்டு உருவாக்கியுள்ள அற்புதச் சாதனைகளை மட்டுமே சுண்டு விவரிக்க எண்ணுகிறேன்.

கல்வித்துறையில், ஆரம்பப் பள்ளிக்கான 5 கட்டடங்களும், பொது மக்களின் நன்கொடையான ரூ. 50,000 செலவில் கட்டி முடிக்கப் பட்டுச் சுமார் 800 மாணவர்கட்குக் கல்வி நல்கும் அரும்பணியாற்றி வரு கிறது. உயர்நிலைப் பள்ளிக்கென ரூ. 18,000 நன்கொடை வசூலித்து, 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவத்துறையில், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் இயங்கும் மருத்துவமனை மற்றொரு சாதனை யாகும். இதற்கான சுமார் 1½ லட்ச ரூபாயும் பொது மக்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டதாகும்.

குடிநீர்ப் பிரச்சினைக்கு முடிவு கட்ட 2 சமுதாயக் கிணறுகள் பொது மக்களின் முழு ஒத்துழைப்பினல் மட்டுமே வெட்டப்பட்டு, குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் சிறப்புப் பங்கேற்றிருக்கிறது.

இவை தவிர, ரூ. 3,000 மதிப்பீட் டில் திறந்தவெளிக் கலை அரங்கம் ஒன்றும் சீரணியினரால் கட்டப் பெற்று வருகிறது. இவ்வூரில் இயங் கும் சீரணி, ஆர்வமிக்க பலரையும் அங்கமாகக்கொண்டு சுறுசுறுப்புடன் செயற்பட்டு வருகிறது. சீரணியில் உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்களில் வாய்ப்பும் வசதியும் கொண்டவர்கள் அதிகமாக உள்ளனர். அத்தோடு உழைத்து உழைத்து உரங்கொண்ட நெஞ்சத்தைக் கொண்டோரும் உள் ளனர். அதன் காரணமாகப் பலவித ஆக்கப் பணிகட்கும் ஒத்துழைப்பு நல்குவதோடு, பள்ளிகட்கு வெள்ளை யடித்துப் பெயர்ப்பலகை சூட்டி வைத்தும், சேரி துப்புரவு வேலைகளில் ஈடுபட்டும், சாலைகட்கு மண்ணிட்டும், செப்பனிட்டும், பள்ளிக் கட்டடங்கள் அமைத்தும், அரிய பணியாற்றி, பொறுப்புமிக்க பொதுமக்கட்கு, பெருந்துணையாய் நின்று, எல்லோரு டைய மதிப்பிற்கும் உரியதாகி நிற் கின்ற பெருமைகளைப் பெற்றுத் திகழ் கிறார்கள்.

ஆக, சேலம் மாவட்ட வேம்படி தாளம், வியத்தகு சாதனைகளைச் செய்துகாட்டும் அற்புதக் கிராம மாய், மற்ற ஊராட்சிகளுக்கு எடுத் துக்காட்டாய் எழிலுடன் திகழ் கிறது.

வாழ்க அவர்களின் தொண்டு!

வளர்க அவர்களின் முயற்சி!

தொடங்கப் பெற்றுக் குறுகிய கால மாயினும் தரணி போற்றும் பெருமை மிக்க செயல்களைச் சீரணி புரிந்து வருகிறது.

———

சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
பம்புடன் கூடிய

Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்


நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்



விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது



தாராளமான
தண்ணீர்




நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு

Kirloskar கிர்லோஸ்கர்
மோட்டார்

தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.





கிர்லோஸ்கர் எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
த. பெ. எண் 1017, பெங்களூர்-3, இந்தியா
பூன விலிலோகல்தர்கள்: பாரி & கம்பெனி லிட்.,
த. பெ. எண் 12, மதுரை-1. ● த. பெ. எண் 208, கல்கத்தா-1
த. பெ. எண் 506, மதராஸ்-1. BR. ● த. பெ. எண் 172, புதுடில்லி-1.



கிர்லோஸ்கர் ஆயிரமாயிரம் கிட்டங்களின் ஸ்டார்ட்டர்கள் 10 வருடம் வரையிலும், ஸ்டார்டெல்டா ஸ்டார்டர்கள் 60 வருடம் வரையிலும் கிர்லோஸ்கர் ஸ்டார்டர்கள் 70 வருடம் வரையிலும் உடனடியாகக் கிடைக்கும்.

Bensons-1282 T A M

நீங்களும் ஒரு புதிய விதையை கண்டுபிடிக்கலாமே!

புதிய நெல் வித்துக்களை, விஞ்ஞானிகளால்மட்டுமே கண்டுபிடிக்க முடியும் என்பதில்லை. நீங்களும் அதைச் செய்யலாம். உங்களைப் போன்ற ஓர் உழவர் ஒரு புதிய நெல் விதையைக் கண்டுள்ளார். அதற்கு இன்னும் பெயரிடப்படவில்லை; அதை உருவாக்கியவர் கேரளத்தைச் சார்ந்த திரு அந்தோணி மணவாளன்.

1966ஆம் ஆண்டு தொடக்கம், கேரளத்தில் 'தைநான்-3' நெல் பயிரிடப்படுகிறது. அதைத் தம் முடைய 4·5 ஏக்கர் நிலங்களில் பயிரிட்ட திரு. அந்தோணி மணவாளனுக்கு ஓர் அதிசயமும் நிகழ்ந்தது.

கண்டார் ஒரு மாற்றத்தை: ஒரு நாள்வயலைச் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டிருந்த திரு. அந்தோணியின் கண்களைச் சுமார் 25 நெற்பயிர்கள் கவர்ந்தன. அவை சிறிது உயரம் குறைவாயிருந்ததுடன், ஏராளமான தானிய மணிகளைக்கொண்டு மிகச் செழிப்பாய் வளர்ந்திருந்தன. ஏனைய 'தைநான்-3' நெற்பயிர்களைவிட, 15 நாட்கள் விரைவாகவே இவை அறுவடைக்குத் தயாராய் நின்றிருந்தன.

இச்சிறப்பியல்புகளைக் கண்ணுற்ற திரு. அந்தோணி, அவற்றைத் தனியே பாதுகாத்து, அறுவடை செய்தார். 25 பயிர்கள்மூலம் அவருக்குக் கிடைத்த விளைச்சல் ½ கிலோமட்டுமே.

முளைந்தார் செயலில்: தம்முடைய வயலில் 2·5 சென்ட்டைத் தனியே ஒதுக்கி, அதில் இந்த ½ கிலோ விதைகளைப் பயிரிட்டு, விதைகளை உற்பத்தி செய்த வண்ணமிருந்தார். 1968ஆம் ஆண்டில் அவருக்குப் போதிய விதை நெல் கிடைத்தது. அவற்றை ஓர் ஏக்கரில் சோதனை முயற்சியாகப் பயிரிட்டதில், அவருக்குக் கிடைத்த விளைச்சல் 2,000 கிலோக்களாகும்!

கிடைத்தன நன்மைகள்: திரு. அந்தோணியை அணுகி வினவியதில் சில தகவல்கள் கிடைத்தன. "இந்தப் புதிய விதைகளில் சில சிறந்த தன்மைகள் புதைந்துள்ளன; இவற்றைப் பெரும்பகுதிகளில் பயிரிட்டு மிகு விளைச்சல் பெறலாம். குறுகிய காலத்தில் தானியங்கள் வெளிவந்து விடுவது மட்டுமின்றி, இவற்றிற்கு அதிக உரங்களும் தேவையில்லை. எல்லாப் பயிர்களும் ஒரே சீரான முறையில் வளர்ந்து, ஒரே கால நிலையில் அறுவடைக்குத்தயாராகின்றன. எவ்வித வயல்களிலும் இதைப் பயிரிடலாம். இவ்விதைகளுக்கு இன்னும் பெயரிடப்படவில்லை."


பயனடைவோர் பலர்: 'ஐ.ஆர். 8' அல்லது 'கல்ச்சர் 28'ஐவிட இப் புதிய இனத்தால் கூடுதல் உற்பத்தி கிடைத்துள்ளது. 'ஐ.ஆர். 8' நெல்லைவிட, இது அதிக எடையுள்ளதென்றும் தற்போது தெரிந்துள்ளது.

இப்புதிய இனத்தைக் கண்ணுற்ற இதர உழவர்களும் இதையே பயிரிட்டுள்ளனர். பத்து உழவர்கள், 20 ஏக்கர்களில் இதைத் தற்போது பயிரிடுகின்றனர்.

நிறைந்த மகசூல் பெற வீரியவிதைகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்து ஆகிய நவீன முறைகளை ஏற்கனவே உபயோகித்து வருகிறீர்கள்.

இப்போது கிருஷி இயந்திரக்கலப்பை

உபயோகித்து விவசாயத்தை மேலும் லாபகரமானதாகச் செய்யுங்கள்



கிருஷி இயந்திரக் கலப்பை உபயோகிக்க இலகுவானது. கடின உழைப்புக்கு ஈடு கொடுக்கவல்லது. நீடித்து உழைக்கவல்லது. உயரிய நான்கு ஜதை எருதுகள் செய்யக்கூடிய வேலையை அதனினும் குறைவான செலவில், விரைவாகவும் ஆற்றவல்லது. 5HP டீஸல் என்ஜினுல் இயங்கும் இந்த இயந்திரகலப்பையை உபயோகித்து மூன்று மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கர் நிலத்தை உழுது பண்படுத்தலாம்.

பலவிதத்தில் பயனளிக்கவல்லது கிருஷி

கலப்பைமாக இயங்கவல்ல கிருஷி டீஸல் இயந்திரக்கலப்பை நஞ்சை, புஞ்சை, விவசாயத்திற்கு மிகவும் ஏற்றது. உங்கள் நிலத்தில் உபயோகிப்பது மட்டுமின்றி பிறருக்கும் வாடகைக்கு விடுவதன்மூலம் அதனை முழுமையாக பயன்படுத்தலாம்.

நிலத்தை உழுது பண்படுத்தும் வேலைக்கு மட்டுமின்றி, கிருஷி டீஸல இயந்திரத்திற்கு தகுந்த உபகரணங்களைப் பொருத்தி, விதையிடுதல், நீர் இறைத்தல, பூச்சிமருந்து தெளித்தல, உரமிடுதல. கதிர் அடித்தல, நெல்குத்துதல், போக்குவரத்து போன்ற பல விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

கிருஷி இயந்திரம் எவ்வளவு லாபகரமாக பணியாற்றவல்லது என்பதுபற்றி மேலும் விவரங்கள் அறிய எங்களுக்கு எழுதுங்கள்.

கிருஷி உங்கள் விவசாய உழைப்பு, நேரம், செலவு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கிறது

தயாரிப்போர்: கிருஷி என்ஜின்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஹைதராபாத்-18 (A.P.)
பூரண விற்பனையாளர்கள்: கிருஷி சேல்ஸ் & சர்வீஸ்.
ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத்-(A.P.)

Krishi

KEP-5242R



பொங்கல் இதழ் கண்டோம், இத்திப்புப் பொங்கல் என உண்டோம், மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றோம், இதழுக்கே!

இலக்கியம், இலக்கணம், கவிதை, கதை, விவசாயம், குறள்வளம், சமையற்கலை, சுடும்பநலம் மற்றும் பல்வேறு அறிவுவளர் செய்திகளைத் தன்னுள் அடக்கி வெளிவரும் சீரணியின் தமிழகப் பரிசு இலட்சம் பெற்றது போலவும், விண்வெளியின் வெற்றி போலவும் எங்கள் உள்ளம் மகிழ்ச்சியால் பூரிக்கிறது.

கே. சாரதாம்பாள்,
டி. ஏ. மாணிக்கம்,
எஸ். சரஸ்வதி, ஆசிரியை,
பேளுக்குறிச்சி, சேலம்.

பொழுதுபோகத் 'தினமணி கதிர்' இதழைச் சென்ட்ரல் நிலையத்தே, வாங்கி ஐதராபாத் செல்லும் இரயிலில் உட்கார்ந்தேன். கையில் சீரணி பொங்கல் இதழ் பொலிவுடன் காட்சியளித்தது. கதிரை விடுத்துச் சீரணியைப் புரட்டினேன். அறிவுக்கு விருந்தாக, தமிழ்க் கடல் மறைமலையடிகளின், திரு. வி. க. முதலியோரின் குறளிற்றிய கருத்துக்களைப் படிக்க முடிந்தது. பொங்கல் கவிதையாக பாவலர் மா. முத்துசாமி அமைச்சர், தமிழ்ப்பித்தன் முதலியோருடைய கவிதைகளும், சேலம் இரும்பு ஆலை அமைப்பின் ஆய்வு அறிக்கையும் ஒருங்கே படித்து முடித்துத்தான் வைத்தேன்.

சீரணியில் சிந்தனையைத் தூண்டும் 'வள்ளுவன் வாழ்விடம்' போன்ற கட்டுரையைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆக, சீரணி தமிழர்களின் சிந்தனையைத் தூண்டி, அறிவிற்கு விருந்தாகும் சீரணியைக் கண்டு, திங்கள்தோறும் இராஜேந்திர நகரில் (ஐதராபாத்) பெற உடன் சந்தா தொகையைச் செலுத்தியுள்ளேன்.

மு. விட்டல். பி.எஸ்.ஹி.
இராஜேந்திர நகர், ஐதராபாத்.

நான் தொடர்ந்து 4 ஆண்டுகளாகக் கிராம நலம் இதழைப் பள்ளி வாயிலாக ஆர்த்துடன் படித்து வருபவன். கிராம நலம் சீரணியாக மாறியதிலிருந்து அதன் வனப்பும், கருத்தும் மிளிரவே தொடர்ந்து சந்தாதாரனானேன்.

சீரணியின் பொங்கல் இதழில் வந்துள்ள கவியரங்கக் கவிதைகள் தேன் சுவையோடு இன்பம் பயப்பன. அதுபோல் இறுதி வரி கொடுத்து வெண்பாப் போட்டி ஆரம்பித்தால் எண்ணற்ற என் போன்ற இளைஞர்கள் கலந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். அதற்கு ஆவன செய்வீர்களென நம்புகிறேன்.

கே. ஆறுமுகம், ஆசிரியர்,
ஊ.ஒ.உ.தொ. பள்ளி,
45, பெரும்பாக்கம்,
உத்தரமேரூர் (வழி)
வடஆர்க்காடு.

தாங்கள் வெளியிடும் சீரணி மாத இதழைத் தொடர்ந்து வாசித்து வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் இவ்வூர் மாதர் சங்கத்திற்குச் சேயாறு யூனியன் ஆணையர்மூலம் கிடைக்கின்றது. அதில் குறிப்பாக 1969 டிசம்பர் மாத சீரணி, இதழை வாசித்ததில் பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் 'பள்ளி செல், பாடம்படி' என்ற தலைப்பில் கொங்கணுபுரம் கவிஞர் திரு மு. முத்துகிருட்டிணன் அவர்கள் எழுதிய கவிதையைப் படித்து மகிழ்ந்ததோடு எம் பள்ளி மாணவர்களுக்கும் பல முறை படித்து அவர்களையும் படிக்கச் செய்தோம்.

இவை போன்ற கவிதைகள் தங்கள் சீரணி இதழில் தொடர்ந்து இடம் பெறுமாஞல் அவைகள் பள்ளி செல் லும் இளஞ்சிறார்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக அமையும் என நம்புவதோடு, அவற்றை வெளியிடும் தங்களுக்கு எங்கள் உளங்கனிந்த பாராட்டுதலையும் தெரிவித்துக் கின்றேம்.

ஆர். எம். சுப்பிரமணியன்,
தலைமையாசிரியர்,
ஊ.ஒ.து. பள்ளி,
செங்கட்டான்குண்டான்,
சேயாறு, வ.ஆ. மாவட்டம்.

வணக்கம். 'சீரணி' இதழை நான் பெரிதும் விரும்பி வரவேற்கின்றேன். காரணம் அது ஒரு பல்சுவைத் திங்க ளிதழ். சீரணியைப் படிக்கும் போதெல்லாம் எனக்குப் 'பொன்னி' யின் (திரு முருகு சுப்ரமணியன் அவர் களே ஆசிரியராகக்கொண்டு சிறப்புற வெளிவந்த தரமிக்க இதழ்) நினைவு வருகின்றது. 'பொன்னி'யைப் போல நிலையான இடம்பெற 'சீரணி' இதழை வளர்க்க - கருத்துச் செழுமையுள்ளதாக்க இன்னும் முயற்சிக்க வேண்டுகின்றேன்.

பெரும் பேராசிரியர்களைக் கொண்டு எழுதப் பெற்ற அரசியல், பொருளாதார, சமுதாய இயல் கட்டுரைகள் நடைமுறையில் இடம் பெற விழைகின்றேன்.

ச. வே. சுப்பிரமணியன்,
மகாதேவி, முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

கன்னித்தமிழ்ப் புகழ்பாடும் சீரணி யின் பொங்கல் மலர், மிகுந்த மணம் பரப்பியது. இலக்கிய ரசிகர்களுக் கோர் இலக்கிய இதழாக, உழவர் பெருமக்களுக்குப் பயன் பெறும் வேளாண்மை இதழாக, அழகிய வண்ண அட்டை ஓவியத்துடன், பொங்கல் இதழ் கண்ணுக்கு விருந் தாய், கருத்துக் கருவூலமாய்த் திகழ்ந் தது. மாண்புமிகு அமைச்சர் முத்து சாமி அவர்களின் தலைமையில் கீழ் உள்ள கவியரங்கக் கவிதை பொங்க லாகச் சுவைகூட்டிற்று, பொங்கல் இதழுக்கு.

அடுத்து அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்களின் சீரணியைப்பற்றிய கட் டுரை, தவமுன எண்ணம் கொண் டோருக்கு விளக்கவுரையாகவும், வள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த இடம் என்ற இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரையைத் தொடங்கியிருப்பது இலக்கியச் சோலையிலே பூத்த புது மலராகவும் அமையும்.

இத்துணையும் நிறைந்த, குறைந்த விலையில் தரமான இதழ் கண்டு வியக்கிறேன்.

ந. இலட்சுமிகாந்தன்
பள்ளிவாசல் தெரு,
அறந்தாங்கி, தஞ்சை.

சீரணியாகிய உங்களுடைய அறிவு விருந்தில் நானும் பங்குகொண்டேன். எனவே சீரணி பொங்கல் இதழில் வந்த பொங்கலுமதாகிய தெள்ளு தமிழ்க் கவியினை உண்டு மகிழ்ந்தேன். 'உழவர் குறள்' என்ற அதிகாரத் தின் கீழ் வந்துள்ளவை நயமும், பொருளாதாரமும் ஒருங்கமைய, தற்கால உழவு நிகழ்ச்சிகளை எழுத் தோவியமாகத் தீட்டியுள்ளமை கண்டு களிப்பெய்தினேன். இன்னும் உழவு முறைகளைப்பற்றி விரிவாகக் கட்டுரைகள் வரின் அது எங்கட்குப் பயனுடையதாக அமையும். மேலும் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவின்போது அவருடைய கருத்தை நன்கு உழவர்கட்கும், பாமர மக்கட்கும், புரியும் வண்ணம் படங்கள் மூலமும், விளக்கங்கள் மூல மும் எடுத்தாண்டுள்ளமையும், வள் ளுவரைப்பற்றிய ஆராய்ச்சியும் மிகவும் இலக்கிய நோக்குடையவை.

மு. சுப்பிரமணியன்,
அறிஞியல் பட்ட வகுப்பு,
முதலாண்டு, ஈரோடு.

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீ பி.எல்.எல். அச்சகத்தில் (6511, ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.

ஓரிரண்டு குழந்தைகள் போதுமே



அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்

'நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்,
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்;
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது.
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்!'

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை — ஆரம்ப சுகாதார நிலையம் — குடும்பநலத்திட்ட நிலையம் ஒன்றை அணுகித் தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு: சுகாதாரம் —
குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6

REGD. No. M. 7277
© தமிழ் நாடு அரசு, 1970

சென்னை மாநகரில்

அவசியம் பார்க்கவேண்டிய இடம் :

கதர் கைத்தொழில் அங்காடி, சென்னை-1

தொலை பேசி எண்கள் : 26762, 21552, 21553

▽ கும்பகோணம், காஞ்சீபுரம், ஆரணி, தர்மாவரம் பனாரஸ் போன்ற இடங்களில் தயாரான பல வண்ணப் பட்டுப் புடைவைகள்.

▽ மேதைகள் உருவம் பொறிக்கப்பட்ட பொன்னுடைகள் பட்டு வேட்டிகள், சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான 'தயாரித்த' ஆடைகள், வேட்டிகள், துண்டு ரகங்கள்.

▽ வண்ணத் திரைச் சீலைகள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் உல்லன் ரகங்கள்.

▽ சந்தனம், தந்தம், ஈட்டி ஆகியவைகளில் தயாரிக்கப் பட்ட கைவண்ணப் பொருள்கள்.

▽ செம்பு, கொம்பு, பித்தளை, வெள்ளி போன்றவைகளில் தயாரிக்கப்பட்ட பரிசுப் பொருள்கள்.

▽ வெள்ளைக்களிமண், காகிதம், மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட பொம்மை வகைகள்.

▽ கோபுர மார்க் சோப்பு வகைகள்.

▽ அக்மார்க் செய்யப்பட்ட தேன்

▽ பல தினுசு தோல் பொருள்கள்.

▽ அக்மார்க் செய்யப்பட்ட எண்ணெய் வகைகள், மற்றும் பனஞ் சர்க்கரை, சாக்லெட்டுகள், பிஸ்கட், பழக் கலவைகள்.

▽ மண் பாண்டங்கள், பலவித ஜாடிகள் முதலிய பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்குமிடம்.

'கதர் கைத்தொழில் அங்காடி'

தமிழ்நாடு அரசுக்காக, [illegible] பிரதிபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீ பி.எல்.எஸ். அச்சகத்தில் (1971, ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.